செப்ரெம்பர் 19 - 25, 2004
September 19 - 25, 2004
24 பக்கங்கள்
16.00
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

சுடர் ஒளி

THE SUDAR OLI
සුඩර් ඔළි
வார மலர்

சமாதான முயற்சிகளில் பிரதமரை ஓரம்கட்டச் சதி?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் அம்பலம்

வாயைக் கொடுத்து எதையோ புண்ணாக்கிக் கொண்டாராம்

''ஆடத் தெரியாத தேவடியாள் மேடை கோணல் என்று கதை விட்டாளாம்.அப்படி இல்ல இருக்கு இந்த அரை வேக்காட்டோட சவடால்'' என்று வேதனையுடன் கூறினார் அந்த மூத்த மலையக அரசியல்வாதி.

அவருடைய ஆதங்கத்துக்கு அவரே காரணமும் கூறுகின்றார். போயும் போயும் எதை எதுக்கு ஒப்பிடுவது என்பதற்கு ஒரு விவஸ்தையே இல்லையா?

''ஏதோ ரணில் மாத்தையாவோட தயவுல, அவர் கல்வி மந்திரியா இருந்தபோது சீடா அமைப்பு இங்கே வந்தது. அதனால் ,நம்ப தோட்டத்துப் பாடசாலைகளுக்கு எல்லாம் நல்ல கட்டிட வசதி கிடைத்தது. அதைக்கூட நாங்க தான் கட்டிக்கொடுத்தோம் என்று மாலை போட்டுக்கிறாங்க.

ஆனால், வடக்கு–கிழக்கில் இருந்த பாடசாலைகளை எல்லாம் இடித்துத் தள்ளிப் புட்டாங்க ஆமிக்காரனுங்க.அங்க உள்ள குழந்தைகள் மரத்தடியிலயும், ஓலைக்கொட்டில்களிலும், ஏன் அகதிமுகாம்களிலும் இருந்து கூடப் படிக்கிறாங்க.

அவ்வளவு கஷ்டங்களுக்கு மத்தியிலும் அகில இலங்கையிலேயே ஆகக் கூடுதலான ரிசல்ட் அங்கே தானே வருது. லோயராகவும், டாக்டராகவும், எஞ்சினியராகவும் வாறாங்க. ஆனால் ,இந்த சர்வர் சுந்தரம் மலையகம்– வடக்குகிழக்கு, எனக் கல்வியை ஒப்பிட்டு பேசுறது தான் வேதனையா இருக்கு.

அது மட்டும் இல்லீங்களே.எங்களோட சம்பள உயர்வு சங்கதியை எடுத்துக்குங்க.

வைக்கோல் பட்டறையில் கட்டின நாய் மாதிரி இவுங்களும் செய்யாமல்,செய்யப் போறவுங்களுக்கும் இடம்கொடுக்காமல் இழுத்தடிக்கிறாங்க. எங்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கல. ஆனாலும், அவுங்களுக்கு வாய்க்கரிசி போடுற மாதிரி யூனியன்சந்தா மட்டும் மாசா மாசம் போய்ச் சேருது.

எத்தனையோ அரசியல் கட்சிங்க இருக்கு. அவுங்க எல்லாம் மாசா மாசம் சந்தா வாங்கிட்டா, அவுங்க சனங்களுக்குச் சேவை செய்யிறாங்க?

ஐம்பது,அறுபது மாசமா சங்கம் நடத்துறதாச் சொல்லுறாங்க. கோடி கோடியா சந்தா வாங்கி இருக்காங்க.அந்தப்பணத்தில் ஒரு இஸ்கூலாவது கட்டிக்கொடுத்து இருக்காங்களா?

அதுவும் இல்லைன்னா ஒரு கோயிலையாவது சந்தாப்பணத்தில கட்டி இருக்காங்களா? இதை எல்லாம் திரும்பிப் பார்க்காம வாயில் வந்ததை எல்லாம் பேசிப்புட்டு இப்படி வாங்கிக் கட்டிக்கலாமா?''என வேதனைப்பட்டார் அந்தப்பெரியவர்.

தம்பிக்காகத் தப்புத்தாளம் அம்மணியின் ஆதங்கம்

பொய்க்காரி, பித்தலாட்டக்காரி, பொய் பேசுவதில் சாதனை படைத்தவர் என்றெல்லாம் மேடை மேடையாகப்பேசித் தீர்த்த தம்பியை பாதுகாப்பதிலும், நீக்கண்டிஷன் செய்வதிலும் அக்கறை காட்டுகிறாராம் அதி உத்தம அம்மையார்.

முதலில் தம்பியாரின் வாயை அடைக்க வேண்டும். அவருடைய வாய் தான் அவருக்கு ஆபத்தாகி வருகிறது. கோடீஸ்வர வளவில் வாழ்ந்தாலும், அவரை வேவு பார்க்கும் கும்பல் அதிகரித்து விட்டதாம். இதனால்பலத்த பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று கூறுகின்றாராம்.

''அப்படியானால், அவ்வளவு பெரிய மாளிகையில் தன்னோடேயே வைத்துக் கொள்ளலாமே!

இதை எல்லாம்விட்டுப்போட்டு, நான் இருக்கும் இடம் மட்டும் தான்அம்மையாரின் கண்களுக்குப்பட்டதோ?'' என்று நெருப்பு எடுக்கிறாராம் கதிர்காம மஹிந்தன்.

உண்மையாகவே தம்பியின் உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லையாம். எதிரிகளின் அச்சுறுத்தலும் இல்லையாம்.

ஆனால், ஆபத்து எல்லாம் வயின் ஸ்டோர்களில் இருந்து தான் வண்டி வண்டியாக வருகின்றதாம்.

பகல், இரவு என்று பாராமல் கண் மண் தெரியாமல் ஓவராக லோட் ஏற்றிக்கொண்டு தடுமாறுகின்றாராம்.சிலநேரங்களில்வேலைக்காரர்களையும் மீறி ரோட்டுக்கு வந்துவிடுகின்றாராம்.

இதனால் குடும்ப மானம் கப்பல் ஏறுகின்றதாம். இதை எல்லாம்தடுக்கவே தம்பியாருக்கு தனியான ஒரு இடம் பார்க்கின்றாராம் தமக்கையார்.

தம்பியை த் தண்ணியில் இருந்து காப்பாற்ற முடியாமல் வீடு மாற்றிப் பாதுகாக்கப் போகின்றாராம்.

ஆனால், கடைசிவரை விட்டுக்கொடுக்க மாட்டேன் என்கிறாராம் கதிர்காம மஹிந்தர்.

கடைசியாக இப்படியும் கூறுகின்றார். அதாவது, தலைவலிக்கு மருந்து கொடுக்காமல் தலையணையை மாற்றி வைத்த கதையாக அல்லவோ இருக்கு என்கிறார் கதிர்காம மஹிந்தன். அலரி மரத்தடியில் அவருக்கு நம்பிக்கை இல்லையாம்.

விமலவனைக்கண்டு தூரவிலகிடும் வி.ஐ.பிகள்

அதிகார அம்மணிக்கு இப்பொழுது போஸ்டர்வீரர் விமலனைக் கண்டால் ,ஏதோ காணக்கூடாததைக் காண்பது போல் ஒரே எரிச்சலாக இருக்கின்றதாம்.

கூட்டுத்தலைமையை நான் உதறிவிட்டு விட்டேன்.இனியும் என்னிடம் என்ன கதை வேண்டிக்கிடக்கு. நான்கு அமைச்சுக்களைக் கட்டிவைத்துக் கொண்டு கட்சிப்பிரசாரம் செய்கின்றார். அமைச்சர்கள் பெயரளவில் மட்டுமே. எல்லோரையும் இவரே ஆட்டிப் படைக்கின்றார்.

ஆட்டம் காணும் படகை கரை சேர்க்க நான் முனைகின்றேன். இவரோ படகில் இருக்கும் பாயையே கழற்றிவிடப்போகிறார்.

ஆஸ்பத்திரி, பெற்றோல்செட் என்று கொடிபிடித்தவர், இப்பொழுது கோச்சிப் பெட்டிகளையும், பஸ் வண்டிகளையும் கூட ஆக்கிரமிக்கப் பார்க்கின்றார். மழை விட்டது என்றாலும் தூவானம் விட்டபாடில்லை என்று அம்மையார் நெருப்பெடுக்கின்றாராம்.

ஆனால், விமலனோ விட்டேனோ பார் என்று மீண்டும்போஸ்டர்களை ஒட்ட ஆரம்பித்துவிட்டாராம்.

அதோடு ஆளும் தரப்பில் உள்ள அமைச்சர்கள்பலருக்கு யூனியனின் டிமாண்ட் கடிதங்களையும் அனுப்புகின்றாராம். இவர் ஒப்பம் போடாவிட்டாலும், இவரது தூண்டுதலின் பேரிலேயே இவை நடப்பதும் அமைச்சர்களுக்குத் தெரிய வந்துள்ளதாம்.

அதனால், துஷ்டரைக் கண்டால் தூர விலகு என்பது போல் விமலனைக் கண்டால் வி.ஐ.பிக்களும் விலகி ஓடுகின்றனராம்.

அகர வரிசையில் ஆண்பால் பெண்பால் கட்சிகளா?

முன்பு ஆறுமுகசாமியின் துணையாகப் பதவி வகித்த முன்னாள் இயக்கக்காரர் வாசிகசாலையில் இருந்து அவசரமாக வெளியே வந்தார். வாசலில் நண்பர்களைக் கண்டவுடன் கைலாகு கொடுத்து மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார். இயற்கையாகவே அழகான தோற்றமுடைய அவர் எப்போதுமே பஹீர் என்று வெளிச்சமாகச் சிரிப்பாராம்.

என்ன ஐயா இன்று உங்கள் சமூகத்தில் அதி மக்கியமான ஒரு நாள். தாய்க்குலத்தை கௌரவிக்கும் வகையில் கட்சி ஒன்று உருவாகின்றது. நீங்கள் எல்லாம் போகவில்லையா? என்றனர் நண்பர்கள்.

நல்ல விசயம் தான் கேட்டீங்க. நாங்க எப்போதும் வாப்பா, உம்மா எல்லாம் நல்ல சுகமாக இருக்க வேண்டும் என்று அன்றாடம் துவா கேட்பவர்கள் தான். ஆனால் அதை வச்சிக்கிட்டு கட்சி நடத்துபவர்கள் அல்ல.

அந்த மரம் என்னடாவென்றால் இப்பவே கொப்புக்கொப்பா முறிஞ்சு, வேரும் ஆட்டம் கண்டு கிட்டு இருக்கு.

இந்த நேரத்தில ஆண்பால், பெண்பால் கட்சி எல்லாம் எதுக்குங்க. நாங்க எப்பவுமே ஒரு குடும்பமாக இருக்கிற கட்சிதான் என்று கூறிமாறிவிட்டார் அந்த அழகன்.

திருமலை துறைமுக நிர்வாக பிரிவை சீனன் குடாவுக்கு இடமாற்ற முயற்சி

பின்னணியில் ஜே.வி.பி உட்பட பெரும்பான்மைச் சமூகத்தினர்

இலங்கைத் துறைமுக அதிகார சபையின் திருகோணமலை துறைமுகத்தின் நிர்வாகப் பிரிவை இடம் மாற்றுவதற்கு ஜே.வி.பி சார்ந்த பெரும்பான்மை சமூகத்தினர் பகீரதப்பிரயத்தனம் மேற்கொண்டு வருகின்றனர். திருகோணமலை நகர தலைமைக்காரியாலயத்தில் செயற்படும் பிரதான காரியாலயம், நிர்வாகம் மற்றும் நிதிப்பிரிவுகளை சுமார் 12 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள சீனன்குடா பிரதேசத்துக்கு இடம் மாற்றத்துடிக்கின்றனர்.

திருகோணமலைத் துறைமுகத்தைப் பொறுத்தவரை அதன் அலுவலகங்கள் மூன்று இடங்களில் இயங்குகின்றன. வதிவிட முகாமையாளர் அலுவலகம்,பிரதான காரியாலயம், நிதிப்பிரிவு, பீ.எச்.என், பாதுகாப்பு, வருமானப் பகுதி,கணக்கீடு என்பன உட்துறைமுக வீதியில் இயங்குகின்றன.

பொறியியல், இயந்திரவியல், பிரதான களஞ்சியசாலை, எரிபொருள் விநியோகம் மற்றும் விநியோகப் பகுதி என்பன மட்கோவில் தொழிற்படுகின்றன.

கரைத் தொழிலாளர் அலுவலகம்,மத்திய இயக்கப் பகுதி, போக்குவரத்துப்பிரிவு என்பன ரீ.ரீ.ஏ பகுதியில் செயற்படுகின்றன.

இவை அனைத்தும் கொழும்பு போன்று ஒரே தரைத் தொடர்பில் செயற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆரம்பகாலம் முதல் இயக்கப்பகுதி மத்திய உப களஞ்சிய சாலை, போக்குவரத்து என்பன உட்பட துறைமுக வீதியில் உள்ள பிரதான காரியாலய வளாகத்திலே இயங்கி வந்தன. 1999 ஆண்டில் பேரினவாதிகளின் ஆட்சியாலும், அரசியல் செல்வாக்காலும் அவை ரீ.ரீ.ஏ பகுதிக்கு மாற்றப்பட்டன. அப்போது தமிழ் பேசும் தரப்பால் காட்டப்பட்ட எதிர்ப்பை தொழிற்சங்கங்களும், அவை சார்ந்த ஆட்சியாளர்களும் கண்டு கொள்ளவில்லை. இரவோடு இரவாகப் பெட்டி கட்டப்பட்டது. காலச்சுவட்டில் பதியப்பட்ட வேதனைச்சுவடு இது.

இதன்போது எதிர்ப்புக்காட்டத் தவறிய சில உள்துறைமுகவீதி அலுவலகப் பணியாளர்கள் இப்போது அதன் வேதனையை அனுபவிக்கின்றனர்.

திருகோணமலைத் துறைமுகத்தின் பிரதான மற்றும் நிர்வாகக் காரியங்களை சீனன்குடாவுக்கு இடம் மாற்ற வேண்டியதன் அவசியம் என்ன? அவற்றை மாற்றக்கூடாது என்பதற்கான வாதங்கள்என்ன? ஆகிய கேள்விகளுக்கான விடைகளில் பலவீனம் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே, இரு தரப்பின் நியாயங்களையும் நோக்க வேண்டியது அவசியமாகிறது.

திருமலை உட்துறைமுக வீதியில் உள்ள அலுவலகங்கள் வாடகைக்கட்டடத்தில் இயங்குகின்றன. அவற்றுக்கு மாதாந்தம் கணிசமான வாடகை செலுத்தப்படுகின்றது. இவற்றை விட சீனன் குடாவில் அதிகார சபையால் கட்டப்பட்டு முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீமால் திறந்து வைக்கப்பட்ட கட்டடம் பிரயோசனமற்று இருக்கிறது.

அந்தக்கட்டடத்தில் குடியமரலாம். அனைவரும் ஒருமித்து செயற்படலாம். இதுவே பிரதான காரியாலயத்தை இடம்மாற்றக் கோரும் ஒரு குழுவின் வாதம்.

இந்தக்குழு இடம் மாற்றியாக வேண்டும் என்ற துடிப்பில் அலுவலகர்களிடம் கையொப்ப வேட்டைக்குச் சென்று, கனத்த குரலில் கையொப்பம் பெற்று, சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பியதாக அறிய முடிகிறது. மேலும், சர்ச்சைக்குரிய அலுவலகக் கட்டடம் துறைமுகங்கள் அதிகார சபைக்குச் சொந்தமில்லாதது என்றும், தனியார் ஒருவருக்கு சொந்தம் என்றும் கூறி தம் பக்க வாதங்களை மேலும் நியாயப்படுத்துகின்றனர்.

இந்த வேலைத்திட்டத்தின் பின்னணியில் சிவப்புச் சாயம் நன்கு தெரிகிறது. மேலும், தீவிரவாதப் போக்குடையவர்கள் நன்கு ஒத்து ஊதுகின்றனர். சரியான நிலைமையைப் புரிந்துகொள்ளாது, சில தமிழர்களும் பக்க வாத்தியம் பாடியதாக கூறப்படுகிறது. நகரில் இவ்வலுவலகம் இருப்பதால் ஊழியர்கள் சிலர் தமது தேவைகளை அலுவலக நேரத்தில் நிறைவேற்றுவதாக குற்றம் சாட்டப்படுகிறது.

இவற்றின் காரணமாகவே அலுவலகம் இடம்மாற்றப்பட வேண்டும் என இவர்கள் கூறுகின்றனர்.

ஆனால், இவையெல்லாம் வலுவான காரணங்கள் இல்லை என்றும், போதிய நியாயபூர்வமான காரணங்களின் அடிப்படையில் இடம் மாற்ற வேண்டிய அவசியம் இல்லை என்றும் [illegible] மனையைச் சேர்ந்தவர்கள் வாதிடுகின்றனர்.

நகரில் இருந்து சம்பந்தப்பட்ட அலுவலகம் சீனன்குடாவுக்கு இடம் மாற்றப்படுமானால், நகருக்கும், அதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லாமல் போய்விடும். இவற்றை விடச் சிங்களப்பிரதேசத்தில் அலுவலகங்கள் அமைக்கப்படுவதன் மூலம் அதிகார பூர்வமாக சிங்கள மேலாதிக்கம் தோன்றப் போகிறது. இவை அனுபவிக்கப்பட்ட உண்மை.

இவை அனைத்துக்கும் மேலாக துரதிஷ்டவசமாக நாட்டில் மீண்டும் இனப்பிரச்சினை தோன்றின், நகர்ப்பகுதியில் இருந்து தமிழர்கள் எவரும் சீனன்குடாப் பகுதிக்கு கடமைக்குச் செல்ல முடியாத நிலை ஏற்படும். 1983, 1990 காலப்பகுதிகளில் இன வன்முறைகள், இனப் படுகொலைகள் நடைபெற்றபோது திருகோணமலை நகருக்கு வந்த தமிழர் சிலர் உயிருடன் டயர்த்தீயில் வெந்தனர். அப்போது படையினர் கயவர்களுக்கு ஆதரவாகவே செயற்பட்டனர். இந்தச் சந்தர்ப்பத்தில் துறைமுக அதிகாரசபையின் தமிழ்ப் பணியாளர்களும் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அது மட்டுமல்ல, திருகோணமலைத் துறைமுக அதிகாரசபையின் உதவி நிதி முகாமையாளரும், 1990 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் பௌத்த பேரினவாதிகளின் முயற்சியில் அலுவலகத்தில் இருந்து கடத்தப்பட்டு கொல்லப்பட்டவர் என்பது, ஏனைய ஊழியர்களின் நெஞ்சை உலுக்கிய வரலாற்று உண்மை.

அத்துடன் பெரும்பான்மைத் தொழிலாளர்கள் சிலர் கடமைக்குச் சமூகமளிக்காது மீன் வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் போது, அவர்கள் கடமைக்கு வந்ததாகப் பதிவு இடம்பெற வேண்டுமென வற்புறுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு செய்யாத உரிய பிரட்டு மேற்பார்வையாளர் அனுராதபுரச் சந்தியில் வைத்து இறக்கப்பட்டு நையப் புடைக்கப்பட்டு அனுப்பப்பட்டது மற்றுமொரு வரலாற்று உண்மை.

மேலும், பல காரியங்கள் மிரட்டல் தொனியிலேயே நிறைவேற்றப்பட்டுள்ளன. இங்கு பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள். பலாத்காரம் பிரயோகித்தவர்கள் சிங்களவர்கள். இவை அனைத்தும் நடந்து முடிந்த கசப்பான சம்பவங்கள். இவற்றைக் கண்டு கலங்கிப் போன தமிழர்கள் எவ்வாறு சீனன் குடாப் பகுதிக்கு வந்து பணி புரிவது?

மேலும், திருகோணமலையில் மீண்டும் ஒரு இனக்கலவரம் வெடித்தால், தமிழ் அலுவலர்கள் உட்துறைமுக வீதியில் இருக்கும் அலுவலகத்துச் சென்று கையொப்பமிட்டு,

(14 ஆம் பக்கம் பார்க்க)

– ரஹ்மான்–

'சுடர் ஒளி' வார மலர் விளம்பரக் கட்டணம்

அளவு	கறுப்பு/வெள்ளை	கலர்
முழுப்பக்கம்	ரூ.30,000.00	ரூ. 45,000.00
அரைப்பக்கம்	ரூ.15,680.00	ரூ. 23,520.00
C.M.	ரூ. 98.00	ரூ.147.00
Page Specified C.M.Cl	ரூ.122.50	ரூ. 183.75
Contract ADV.	ரூ. 70.00	ரூ. 110.00
([illegible] Col. Cms)		

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைப் பூங்கா

விழிப்போரைக் கண்டேன்

விழிப்போரைக் கண்டேன்
முகம் சுழிப்போரைப் பார்த்தேன்!
களிப்போரைக் காணேன்– பெரும்
பழிப்பாகும் என்றார்!
பிழைப்பாகக் கொண்டோர்– பதவிப்
பித்தாக நின்றோர்
விழப்போகும் குன்றை– சற்று
நிமிர்த்தெங்கே கூடும்!

இங்கன்று நின்றாய்– ஏன்
அங்கின்று சென்றாய்!
பங்கத்துக்குள்ளே –எமக்கு
பங்கொன்றும் வேண்டாம்!
சிங்கத்தைப் போன்று– அன்று
சங்கத்தின் முழக்கம்!
அங்கங்கள் குலுங்க –செய்த
ஆர்ப்பாட்டம் எங்கே!

ஆர்ப்பாட்டத்திற்குள்– உன்
போர்ப்பாட்டுக் கோட்டேன்!
வேர்பட்டுப் போக– உன்
தீர்ப்பின்று கண்டேன்!
யார் கேட்டில் இன்பம் –கான
விழைவோரின் பின்னே
தேரோட்டுகின்றாய்– சங்கத்
தேரை நீ வாட்டுகின்றாய்.

எலியாசன்
பூண்டுலோயா

தவமாக நீ

வெண்ணிலவின் சாயலிலே
வெளிவந்த வெண்நிலவே
வேண்டாமடி வேஷம்
வேதனைப்பட வைக்காதே......
தோல்விகளைத் தந்துவிட்டு
தொடராதே என் நினைவில்
தொன்று தொட்டு வந்ததென்று
தொகை நூல்கள் சொன்னதடி
பால் நிலவே உன் சிரிப்பு
பாசமற்றது என்றிருந்தால்
பள்ளியறைக் காதலை
பரிணமிக்க விட்டிருப்பேன்
தன்மானம் தலை குனிய
தடம் புரண்ட ரெயிலாகி
திசைமாறி ஓடுகின்றேன்–அன்பே
தவமாக நீ கிடைப்பாய் என்று

ந.வசந்தன்
முள்ளியவளை

மௌனம்

உதட்டுப் போர்களங்களின்
போரினால் நிகழ்ந்த
சமாதானத்திற்கான
யுத்த நிறுத்த உடன்படிக்கை

பொய்

உண்மை ஒன்றை
மறைப்பதற்காய்
புனையப்படும்
புனைகதை.

பத்திரிகையாளன்

தன்னலம் மறந்து
பிறர் நலம் பேண
அயராது உழைக்கும்,
அரசியல் வாதிகளுக்கு
வேண்டா நண்பன்.

க.அரவிந்தன்
மல்லாவி.

அன்பே என்னை மறந்து விடு

நடக்காதென்று தெரிந்து
நாடுகிறாய் என்னை
கிடைக்காதென்று புரிந்தும்
குழப்புகிறாய் உன்னை
நிஜங்களைத் தேடுகிறாய்
விதியின் தடையிது
விடைகாணா வினாவிது
கண்கள் தான் சந்தித்தன
கைகள் சேரவில்லையே
தயங்காதே!
நினைவுகளை இடிப்பது
சுமையானால்
நிலத்தினுள் புதைத்துவிடு
என்னையும் மறந்துவிடு

மானியூர்- அபி

உன் மனம்

அன்பான வார்த்தைகளும்
ஆசையான சிரிப்பும்
இன்புறும் உள்ளமும்
ஈகையாக மனமும்
உவகை தரும் உருவமும்
ஊனமற்ற நெஞ்சமும்
எதற்கும் அஞ்சாமையும்
ஏற்றத் தாழ்வற்ற பண்பும்
ஐயையில்லாத நற்குணமும்
ஒத்துயரும் எண்ணங்களும்
ஓய்வில்லாத உழைப்பும்
ஔடதமற்ற அனைத்தும்
எனக்குப் பிடித்தது–அதனால்
உன்னைச் சரணடைகிறேன்
அடைக்கலம் உண்டா
இருவடியதனில்.......?

நந்தபாரதி
லண்டன்

உதிர்வு

உதிர்ந்து போன –என்
ரோஜாவுக்காக
அழுவதால் பயன் ஏது
உனக்கு மட்டும் தானே
என்னால் கவியெழுத
முடியும்.

காதல்

எல்லோருக்கும் கிடைக்க
முடியாதது.
ஆனால்,
யாராலும் மறக்க
முடியாது.

ஏ.எம். பெறேஸ்
திருகோணமலை

விலகாத நினைவுகள்

இளமையின்
இனிமைகளில்
உன் திருவதன
ஞாபகங்கள்
அழிந்து போகாது
மறந்து போகாது
காலன் என்னைக்
கைது செய்யும் வரை!

தர்ஷன்
தொண்டமனாறு

காரணம் யாதோ கற்களுக்கு!
கண் காணுமிடமெல்லாம்
ஒரே கற்கள்.........
ஏனென்று புரிந்து கொள்ளச்
சிறு தாமதம்
ஓ.........
கற்புள்ள பெண்களுக்கான
சபிக்கப்பட்ட சாபமோ.
கால் பட்டு உயிர்த்தெழுவதற்கு....
அன்றி கற்களை மிதிக்கத்தான்
இராமர்கள் இல்லையோ
இன்று.........?

ஜெ.சுபாஷினி
நல்லூர்.

ஏன்

என் மூச்சுக் காற்று கூட
உன்மேல்படக் கூடாதென
உன் வீட்டு ஜன்னல்களை
மூடிக் கொள்கிறாயே......
நானென்ன!
கண்டதும் தூர ஓடும்
அந்தரெக்ஷா!

முபீனா
திருகோணமலை

வேஷங்கள்

காதலென்னும் நதியிலே
என்னோடு நீராட வந்தவளே
காளை என்னை மாயை காட்டி
நாயாய் அலைத்தவளே
நானொரு பேயனடி
நாலு பேர் சொல்கையிலே
நானும் அதை நம்பவில்லை
நடப்பதெல்லாம்பொய்யென்று
நானும் அதைத் தேடவில்லை
கள்ளி உந்தன் மாயையிலே
கண் பார்வை அற்றிருந்தேன்
எனக்குத் துணை நீயென
நாளும் அதை நம்பி வந்தேன்
நடப்பதெல்லாம் மாயையென்று
நானும் அதை அறியவில்லை
ஆயிரம் கனவுகளை சுமந்த நெஞ்சம்
அரை நொடிப் பொழுதிலே
ஆட்டம் கண்டு விட்டதடி
ஆசியக் கண்டத்தை
நீ கடந்து போகையிலே
யாரறிவார் என் நிலையை?

மா. உதயகுமார்
வவுனியா.

ஏக்கம்

அன்பானவனே!
நான் கண்களைத் தொலைத்துப்
பிறந்திருந்தால்
இந்தக் காதல் துயரமில்லை.
நீ இன்னொரு கிரகத்தில்
பிறந்திருந்தால்
இந்த ஏக்கம்
சிறிதுமில்லை!

கெ.மினி
ஹும்பிராய்.

பாதை மாறிய பயணங்கள்

எங்கே ஓர் திசையில்
நீயும் நானும்
ஜனனத்தின் பிடியில்
எதிர்காலப் பக்கங்களே
எங்கே என்று தெரியாமல்
எதிரிகளாய்
பயணித்தோம்.
புலம் விட்டுச் சென்றபோது
புதிய உறவுகளாய்
புதுப் புது அர்த்தங்கள்
அன்று கண்டோம்!
நாம் பேசாமல் இருந்தாலும்
நம் விழிகள் பேசியதில்
புதிய தொரு பாடத்தில்
நீயும் நானும் உறவுகளாய்.
பயணத்தின் பாதைகள்
பிரிந்த போது
பசுமை நினைவுகளுடன்
விழிகள் சுரைய.....
விலகிச் சென்றும்
விலகாதுள்ள உன்
நினைவுகளை
கல்லறையிலும் நான்
சுவாசித்தபடி!

மா. சிவசோதி
கரவெட்டி.

குட்டிக்கு

அப்பா குட்டி
அம்மா குட்டி
ஆசிரியர் குட்டி
இன்னும் எத்தனை பேர் குட்டியும்
எழுத வராத புத்தி
குட்டியைக் கண்டதும்
எழுத வந்தது
கவிதை குட்டி

திண்டுவளந்தான்
நல்லூர்

நட்பு

பிரியும் வரை
புனிதமான உறவு.

சொந்தம்

உருண்டோடும்
காலத்தில்
திசை மாறும்
கருவி.

டயறி

மீண்டும்
நினைவு கூற
சுமையேந்தும்
பொக்கிஷம்

வித்யா
சுந்தரலிங்கம்
உடையார் கட்டு

வீட்டுச்சாவி

சேவலின் கூவல்
விடியலின்
வீட்டுச்சாவி

கன்னி

இது ஒரு புதுக்கணனி

கலிகாதல்

அது ஒரு புதுக்கவிதை

காற்று

என்றும் வற்றாத ஊற்று

சசிகுமார்
ஹட்டன்

காதல் ஓவியம்

உன் நினைவெனும் காயத்தால்
என் தலையணையை நனைக்கும்
கண்ணீர்த் துளிகள்
உன்மீது நான் கொண்ட
முற்றுப் பெறாத காதல் காவியத்தின்
அத்தியாயத்தை அழிக்கின்றதா–அல்லது
புதிய பந்திசேர்க்கப்படுகின்றதா
புரியவில்லையடி எனக்கு

சந்திரமோகன்
முல்லைத்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுத்தீ அனர்த்தம் ஏற்படுவதைத் தவிர்க்க

அமெரிக்காவில் மிகப்பெரிய காடுகளும் தீயினால் எரிந்து சாம்பலாகி விடுவது வழக்கமாக இருக்கிறது. காட்டில் தீ பிடித்தால் நெருப்பை எவ்விதத்திலும் அணைத்துக் கட்டுப்படுத்திவிட முடிவதில்லை. அதற்குக் காரணம் நீண்டு வளர்ந்த மரங்கள், விறகுகள் போல் காய்ந்து போய் இருப்பது தான். கலிபோர்ணியா வனத்தில் ஒரு பழைய மரத்தை இரு அதிகாரிகள் ஆராய்ந்து பார்க்கும் காட்சி.

மசாலா மிக்ஸ்

பயங்கர சூறாவளி ஏற்படுத்திய அதிர்ச்சி



ஜப்பானுக்கு அருகிலுள்ள மரியானா தீவில் பயங்கர சூறாவளி அண்மையில் வீசியது. பெரும் சேதங்களும் ஏற்பட்டன.

மேற்படி சூறாவளி வீசிய வேளையில் நாஸா நிறுவனம் சூறாவளியின் தாக்கத்தைப் படம் பிடித்திருந்தது.

அந்தச் சூறாவளி மலைப் பிரதேசங்களில் வீசியிருந்தால் மேலும் அனர்த்தங்களை ஏற்படுத்தியிருக்கும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

உடலெங்கும் துளைபோட்டு 1900 மணிகளைச் சூடிய அழகி

காதுகளிலும் மூக்கிலும் துளை போட்டு ஆபரணங்களை அணிவது என்றாலே எத்தனையோ பெண்களுக்கு நடுக்கம் வந்து விடுகிறது. ஆனால், எலினா டேவிட்சன் என்னும் இந்த பிரேஸில் அழகி தனது உடலெங்கும் 1900 துளைகளைப் போட்டு அவற்றில் மணிகளைச் சூடியிருக்கிறார். அழகி எலினாவின் பெயர் கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பெறவிருக்கிறது.

வீதிக்கு வெள்ளம் வந்ததால் குதூகல படகுச் சவாரி



அடாது மழை பெய்து வெள்ளமும் வந்து விட்டால் அனைவருக்கும் பெரும் சவால்கள் தான்.

ஆனால், தெற்கு கரோலினாவில் அண்மையில் மழை பெய்து வீதியில் வெள்ளம் வந்த போது அழகி சீலியா ஸ்மித்துக்கு குதூகலம் ஏற்பட்டுவிட்டது. உடனே காற்றடைத்த பிளாஸ்டிக் படகு ஒன்றில் ஏறி சவாரி செய்யத்தொடங்கி விட்டார்.

துருவப்பிரதேசத்தில் அமெரிக்கத்தளம்

துருவப் பிரதேசத்திலுள்ள எரிபஸ் மலைப் பகுதியில் இம்முறை பனிப்படுகைகள் பெருமளவில் அதிகரித்திருக்கின்றன. அருவிகளிலும் பனிப்பாறைகளே காணப்படுகின்றன. மக்முர்டோவில் அமெரிக்கப் படைத்தளம் நிறுவப்பட்டுள்ள பகுதி மாத்திரம் அமைதியாகக் காணப்படுகிறது.

ஒளிந்திருக்கும் முகம் எது?

ஆகஸ்ட் 16, சுடர் ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகர் ஆனந்தராஜ். சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் ஐந்து அதிஷ்டசாலிகளின் பெயர், விவரம் வருமாறு:

1. சி.நிலா, மானிப்பாய் வீதி, சங்கானை. 2. மு.அனுசா, 12/5 காலி வீதி, கொழும்பு – 3. 3. வி.வின்சன், 876, யாழ் வீதி, கிளிநொச்சி. 4. எம். கயல்விழி, துறைமுக வீதி, திருகோணமலை. 5.வி. றினோஷா, பிரதான வீதி, கல்முனை.

சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

இந்தவாரம் ஒளிந்திருக்கும் இந்த முகம் யாருடையது?

இவர் ஓங்கி அடித்தால் சுருண்டு விடுவீர்கள் கவனம், இவரும் ஒரு கலைக்குடும்பத்தின் வாரிசு.

இந்த முகத்திற்குரிய நடிகரைக் கண்டுபிடித்து, அவர் பெயரைத் தபால் அட்டையில் ஒக்டோபர் 03 ஆம் திகதிக்கு முன்னர் எழுதி கீழ்வரும் எங்கள் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாரச்சி மாவத்தை,
கொழும்பு 14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியாகத்தின் எல்லையை மீறிய தியாகி திலீபன்

தியாகி திலீபன் உலக வரலாற்றிலே ஓர் புதிய அத்தியாயத்தின் ஆரம்பம் மட்டுமல்ல.... தமிழீழ மக்கள் புரட்சியின் திறவுகோல், ஈழ விடுதலைப் போராட்டத்தின் அகிம்சைத் தீ. அணையாவிளக்கு, அகிம்சையால் எழுந்த பாரதமெனும் நாட்டுக்கு, அகிம்சையின் அர்த்தம் கற்பித்த வீரன்.

இந்திய — ஸ்ரீலங்கா ஒப்பந்தமெனும் சூழ்ச்சிப் பொறியோடு, தமிழீழ மக்களின் துன்பங்களையும், வேதனைகளையும் வெட்டி வீழ்த்தி விடுவோமென்று கூறிக் கொண்டு பாரதப் படைகள் எம் மண்ணில் காலூன்றியபோது, தமிழீழ மக்களின் மகிழ்ச்சி உச்சிமேவிப் பிரவாகித்தது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின் தோற்றம் பெற்ற நிலைமைகளைக் கருத்தில் கொண்டு முன்வைக்கப்பட்ட 5 கோரிக்கைகளின் அடிப்படையில் தியாகி திலீபன் தனது நீர்கூட அருந்தாத சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை 1987 செப்டெம்பர் 15 ஆம் திகதி ஆரம்பித்தான்.

தனது உண்ணாவிரத காலத்தில் மக்களுக்கு உண்மை நிலையினை உணரவைத்து, போராட்டத்தின் அடுத்த கட்ட நகர்வுக்கு அவர்களைத் தயாராக்கிவிட்டு 26 ஆம் திகதி தியாகச் சாவினைத் தழுவிக் கொண்டான்.

ஆனால், இந்திய அரசின் கபடம் மெல்ல மெல்ல வெளிவரத் தொடங்கியபோது, ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து பன்னிருநாட்கள் தண்ணீருமின்றி உண்ணாநோன்பிருந்து தமிழீழ விடிவிற்காய் உயிர்த்தியாகம் செய்தான் தியாகி திலீபன்.

1963.11.27 இல் ஊரெழு என்னும் கிராமத்தில்பிறந்தஇராசையாபார்த்தீபன்என்னும் திலீபன் கல்வியில் சிறந்துவிளங்கி பல்கலைக்கழக மருத்துவபீட அனுமதியைப் பெற்றான்.

தமிழீழ மக்களின் இன்னல்கண்டு, தனது கல்வியை உதறித்தள்ளி 1983 காலப் பகுதியில் லெப். கேணல் பொன்னம்மான் அவர்களின் தொடர்பு மூலமாக, தன்னை விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைத்துக் கொண்டான்.

ஆரம்ப காலங்களில் இயக்க அரசியல் வேலைகளில் ஈடுபட்ட திலீபன், பின்னர் யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளராக நியமிக்கப்பட்டான். இக்காலப்பகுதியில் ஸ்ரீலங்காப் படைகளுடனான நேரடி மோதல்களிலும், தனது திறமையினை வெளிப்படுத்தி வந்தான். மக்கள் மத்தியில் மிக அன்பாகப் பழகியதுடன், அவர்களது முன்னேற்றத்துக்காக பல அமைப்புக்களையும் நிறுவினான். விடுதலைப் புலிகள் அமைப்பையும் பல புதிய பரிமாணங்களிற்கு இட்டுச் செல்ல வழிவகுத்துச்செயற்பட்டான்.

களத்தில், சுதந்திரப் பறவைகள் உட்பட பல பத்திரிகைகளை ஆரம்பித்து செயற்படுத்தினான்.

விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பு, மகளிர் அமைப்பு, சுதந்திரப் பறவைகள் அமைப்பு, தேச பக்தர் அமைப்பு என்பவற்றுடன் தமிழீழ கிராமிய நீதி மன்றங்கள், விழிப்புக் குழுக்கள், சர்வதேச உற்பத்திக் குழுக்கள், தமிழீழ ஒலி ஒளி சேவைக் கட்டுப்பாட்டுச் சபை, தமிழர் கலாசார அவை என இவன் ஆரம்பித்து நெறிப்படுத்திய பலவற்றை அடுக்கிக் கொண்டே போகலாம்.

இவ்வாறு விடுதலைக்காக தீவிரமாக உழைத்து வந்த லெப். கேணல் திலீபன் இந்திய — ஸ்ரீலங்கா ஒப்பந்தத்தை ஸ்ரீலங்கா அரசு மீறுவது கண்டு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலிலும், சிறைகளிலும் உள்ளோர் விடுவிக்கப்பட வேண்டும், புனர்வாழ்வு என்னும் பெயரில் தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் சிங்கள குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும், இடைக்கால அரசு நிறுவப்படும் வரை 'புனர்வாழ்வு' என்னும் சகல வேலைகளையும் நிறுத்தவேண்டும்.

வடக்கு — கிழக்கில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது நிறுத்தப்படவேண்டும், இந்திய அமைதிப் படையினர் மேற்பார்வையில் உள்ள ஊர்காவற் படையினரின் ஆயுதங்கள் திரும்பப் பெறப்பட்டு தமிழ்க் கிராமங்கள், பள்ளிக்கூடங்கள் என்பவற்றில் குடியிருக்கும் இராணுவ பொலிஸ் நிலையங்கள் அகற்றப்பட வேண்டும் என ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து பல்லாயிரக்கணக்கான மக்கள் திரள் முன் தண்ணீருமின்றி தன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தான் திலீபன்.

பன்னிரு நாட்கள் தன்பாராமுகத் தன்மையினால் திலீபன் என்னும் தியாக வீரனை சாவின் வாய்க்குத் தீனியாக்கியது பாரத அரசு.

'மக்கள் புரட்சி வெடிக்கட்டும், சுதந்திர தமிழீழம் மலரட்டும்' என்று கூறி மரணித்த அந்த மாவீரனின் 17 ஆம் ஆண்டு நினைவுடன் ஒன்றுபட்ட மக்கள் சக்தியாய் எழுந்து நிற்கிறது எம்மினம்.

என் உயிரினும் மேலான மக்களே!

தியாகி திலீபன் தனது உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்து 72 மணித்தியாலங்கள் கடந்த நிலையில் அங்கு கூடியிருந்த மக்களுக்கு ஆற்றிய உரை.



எனக்கு முன் பேசிய ஒரு சில பேச்சாளரின் பேச்சால்தான் நான் பேசவேண்டும் என நினைக்கின்றேன். இது எமது இலட்சியப் போராட்டம். இதை யாரும் கைவிடுமாறு என்னைக் கேட்காதீர்கள்.

எனது முடிவு எனக்குத் தெரியும். ஏற்கனவே நான் உயிர்வாழ்வது அதிசயமாய் இருக்கின்றது. ஏனெனில், நான் முதல்நாள் உண்ணாவிரதம் இருந்ததைவிட அதற்கு அடுத்த நாள் மேலும் உற்சாகமாய் இருந்தேன்.

இன்று அதைவிட உற்சாகமாய் இருக்கிறேன். காரணம் நீங்கள் தரும் ஆதரவும், நீங்கள் இந்தப் புரட்சிக்குத் தயாராகிவிட்டதும் தான். அதற்காகத்தான். அந்த ஒன்றே போதும் நான் சாகலாம்.

650 பேருடன் 651வனாக நான் போகிறேன். என்னைப்பற்றி யாரும் வீணாகக் கவலைப்படாதீர்கள். அலட்டிக்கொள்ளாதீர்கள். ஆனால் நீங்கள் புரட்சிக்குத் தயாராகுங்கள். எனது அவயவங்கள் செயல் இழப்பதை நான் உணர்கிறேன். இனியொரு மனிதனாக என்னால் வாழ முடியாது என்பது எனக்குத் தெரியும். எனவே, அதுமட்டுமல்ல இது ஒரு இலட்சியப் போராட்டம்.

எமது வீரர்கள் ஒவ்வொருவரும் கொள்கைக்காக உயிரைக் கொடுக்கக்கூடியவர்கள். அவர்களும் என்னைத் தொடர்ந்து வருவார்கள். அவர்களையும் தடுக்காதீர்கள். நாங்கள் நான்கு, ஐந்து பேர் சாவதால் எதுவித தீங்கும் ஏற்படாது. மக்கள் புரட்சி வெடிக்கவேண்டும்.

நான் மூன்று தடவைகள் பேசியிருக்கிறேன். மூன்று தடவையும் திரும்பத்திரும்ப ஒரே கருத்தைத்தான் கூறுகின்றேன். எனவே, தயவுசெய்து இலட்சியத்தைக் கைவிடுமாறு கேட்கவேண்டாம். நீங்கள் அவ்வாறு கேட்பது இலட்சியத்தை அவமதிப்பது போல் இருக்கும். நாங்கள் சாதாரணமாக ஆவவேண்டுமென்ற ஆசையாலோ, வாழவேண்டுமென்ற ஆசையாலோ இயக்கத்துக்கு வரவில்லை. எம் தலைவரும் எம்மை அவ்வாறு வளர்க்கவில்லை.

எமது இயக்கம் அவ்வாறில்லை. தயவுசெய்து மீண்டும் கேட்கின்றேன் மன்றாட்டமாகக் கேட்கின்றேன். என்மீது கொண்ட அனுதாபத்தின் காரணமாக அவ்வாறு கேட்காதீர்கள். இலட்சியத்தை அவமதிக்காதீர்கள். தயவுசெய்து எனக்கு உண்மையில் (சிரிப்புடன்) பெரும் ஆச்சரியமாய்த்தான் இருக்கிறது. ஏறக்குறைய 72 மணித்தியாலங்கள் கடந்துவிட்டன.

உண்மையில் நான் (சிரிப்புடன்) நேற்றையைவிட அதிக உற்சாகமாக இருக்கிறேன். எனது உடல்நிலையைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒருவேளை அனைவரதும் பிரார்த்தனையோ எனக்குத் தெரியாது.

ஆனால், மீண்டும் மீண்டும் கேட்பது ஒன்றைத்தான். எமது போராட்டம் தொடரப்போகிறது. மக்கள் புரட்சி வெடிக்கப்போகிறது. அந்தப் போராட்டத்திற்கு நீங்கள் தயாராகுங்கள். எனது பேச்சிலேயே நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள். நான் இன்று எவ்வளவு தூரம் உற்சாகமாய் உள்ளேன் என்று.

நேற்று என்னால் பேசமுடியவில்லை. ஆனால், இன்று (சிரிப்புடன்) தாராளமாகப் பேச முடிகிறது. ஏனோ தெரியவில்லை. எனவே, நான் உங்களிடம் மீண்டும் மீண்டும் கேட்கிறேன். நீங்கள் போராடுங்கள். நான் மேலேயிருந்து நீங்கள் தமிழீழம் அமைப்பதைப் பார்த்துக் கொண்டிருப்பேன். நாம் என்றும் உங்களை விட்டுப்போகமாட்டோம். எங்கள் உடல் மட்டும்தான் போகும்.

உயிர் என்றும் உங்களோடு ஒட்டியிருக்கும். அதை மறந்து விடாதீர்கள். எம்மைத் தொடர்ந்து எமது தோழர்கள் வருவார்கள். சகோதரிகள் வருவார்கள். அவர்களையும் நீங்கள் தடுக்காதீர்கள். அவர்களுக்கும் வழிவிடுங்கள். நான் ஏற்கனவே பல தோழர்களிடம் கூறிவிட்டேன். நான் உங்களை [illegible] கொண்டிருப்பேன். ஏனைய தோழர்களும் அங்கு உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்பர். அவர்களையும் மறுக்காதீர்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை அவர்களுக்கு, அவர் இலட்சியம் தான் முக்கியம். உயிர் முக்கியமல்ல. அவர்களது வாழ்வு முக்கியமல்ல. சாப்பாடோ தண்ணீரோ முக்கியமல்ல. அவர்களது இலட்சியம்தான் முக்கியம். அதை நிலைநாட்டத்தான் நான் தலைவரால் முதல் முதலாக நியமிக்கப்பட்டேன். தலைவருடன் சண்டையிட்டுத்தான் இவ் அனுமதியைப் பெற்றேன்.

எனவே எனக்கு எனது முடிவு தெரியும். எனவே தயவு செய்து நீங்கள் அலட்டிக் கொள்ளாதீர்கள். தயவு செய்து என்மீது கொண்ட பாசத்தாலோ அல்லது வேறு எந்தக் காரணத்தாலோ தயவு செய்து பேச்சாளர் எவரும் இந்தக் கருத்துடன் மேடையில் பேசவேண்டாம்.

இது என்னை அவமதிப்பதுபோல் [illegible] என்னைத் தண்ணீர் குடிக்குமாறு கேட்பது, என்னை அவமதிப்பதுபோல் உள்ளது. நான் அதற்காக இங்குவந்து இருக்கவில்லை. அதைத்தான் உங்களிடம் மீண்டும் மீண்டும் கேட்கிறேன். உண்மையைச் சொல்கிறேன்.

எனது மூளை ஒன்றையுமே கிரகிக்கவில்லை. (சிரிப்புடன்) ஒரு வேளை மூளை மாறாட்டமாய் போய் விட்டதோ எனக்குத் தெரியவில்லை. தயவுசெய்து மன்னியுங்கள். நான் ஒரே விடயத்தைத் திரும்பத் திரும்பச் சொல்வது எனக்குத் தெரிகிறது. தயவு செய்து மன்னியுங்கள். நான் பேசுவதாக இருக்கவில்லை. எனக்கு முன்பேசிய பேச்சாளரால்தான் பேசவேண்டி வந்தது.

தயவு செய்து இதைத் தவிர்த்து, நீங்கள் மக்களை எழுச்சியூட்டும் வகையிலாகப் பேசுங்கள். நான் எந்த இலட்சியத்துக்காகச் சாகிறேனோ, அந்த இலட்சியத்தை அடையக்கூடிய வகையில் மக்களை எழுச்சியூட்டும் வகையில் தயவுசெய்து பேசுங்கள். அதனைத்தான் விரும்புகிறேன். அதைத்தான் மீண்டும் உங்களிடம் நான் கேட்கிறேன். இறுதியாக என் உயிரினும் இனிய மக்களிடம் இருந்து விடைபெறுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூச்சி மருந்தும் குடல் புழு வெளியேற்றமும்

கேள்வி:பெண், வயது 30. குழந்தைகள் மூன்று. கருத்தடைச் சத்திர சிகிச்சை செய்துள்ளேன். கடந்த நான்கு மாதங்களாக மாதவிலக்கு ஏற்படவில்லை. அதற்கு முன்னர் மாதவிலக்கு ஒழுங்காகவந்தது. இதற்குப் பரிகாரம் என்ன?

பதில்: ஒழுங்காக வந்த மாதவிலக்கு திடீரென்று வராமல் இருந்தால், பெண்கள் அனைவருமே கொஞ்சம் பயப்படத்தான் செய்கின்றார்கள். கர்ப்பமாக இருக்கின்றீர்களா என்று சிறுநீர்ப் பரிசோதனையை முதலில் செய்யவும். கருத்தடைச் சத்திரசிகிச்சை செய்த பின்னரும் கருத்தரிக்கச் சாத்தியமுண்டா என்று திகைக்கின்றீர்களா?

பயப்படாதீர்கள். சத்திர சிகிச்சையின் பின்னர் வெட்டப்பட்ட பெலோப்பியன் குழாய்களின் முனைகள் திரும்பவும் பொருந்திக் கொள்ளும் (RECANALISATION) சாத்தியம் லட்சத்தில் ஒன்று தான். என்றாலும், அப்படி ஒரு சந்தேகத்தை போக்கிடவே சிறுநீர்ப் பரிசோதனை செய்யச் சொல்கின்றேன். நிச்சயம் அது கருத்தரிக்க வில்லை என்ற செய்தியைத் தான் தரும் என்றாலும், இப்படியான சூழ்நிலையில் ஒரு மருத்துவர் எப்படி இந்தப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்று வரை முறைப் படிகள் (STEPS) உண்டு. இதில் ஒன்றுதான் இந்த சிறுநீர்ப்பரிசோதனை.

சிறுநீர்ப்பரிசோதனையில் கருத்தரித்தல் சந்தேகம் தீர்க்கப்பட்டால் அடுத்தது, உங்களை ULTRASONIC SCAN என்ற கேளா ஒலி பரிசோதனையில்வயிற்றைச்சோதிக்கவேண்டும். கருப்பையில் கட்டிகள் வளர்ச்சிகள்,சூலகங்களில் கட்டிகள், வளர்ச்சிகள் என்பன கூட மாதவிலக்கைத் தாமதப்படுத்தும். அப்படி ஏதாவது காணப்பட்டால் அதற்குரிய சிகிச்சைகள்மேற்கொள்ளப்படவேண்டும்.இதுதவிர உடலில் போஷாக்கு குறைந்திருந்தால் இரத்த சத்து (HAEMOGLOBIN) குறைவுபட்டாலும் மாதவிலக்குத் தாமதமாகலாம். இரத்தச்சத்தின் அளவு அறியப்பட வேண்டும். மேலும், ஒரு சிலருக்கு 30 வயதிலேயே மாதவிலக்கு நின்றுவிடும் (MENAPAUSE) காலம் ஆரம்பிப்பதுண்டு . எனவே நோய்க்காரணிகள் எதுவும் காரணமில்லை எனில் பொறுத்திருந்து பாருங்கள். மாதவிலக்கை ஏற்படுத்தும் மருந்துகள் உண்டு. தகுந்த வைத்தியரிடம் சிகிச்சை பெற வேண்டும்.

கேள்வி:— ஆண். வயது 40. திடீரென்று எனக்கு ஒன்றிலும் விருப்பமில்லாத மனோநிலை. எதிலும் ஈடுபட்டு வேலை செய்ய முடியவில்லை. கடமைக்காக வேலைக்குச் சென்று வருகின்றேன். எனக்கு இதுவரை எதுவித நோயும் வரவில்லை. இரவில் தூக்கமில்லை. தூக்கம் வந்தாலும் இடையிடையே கண் விழித்து விடுவேன். குடும்ப வாழ்க்கையிலும் ஈடுபாடு இல்லை. என்னிடம் நிறைய மாற்றங்கள் தெரிவதாகக் குடும்பத்தாரும், நண்பர்களும் சொல்கின்றார்கள். எனக்கு என்ன நோய்? ஏன் இப்படி இருக்கின்றேன்?

பதில்:— நூற்றுக்கு தொண்ணூற்றைந்து வீதம் உங்களுக்கு பெரிய நோய் ஒன்றும் ஏற்பட்டிருக்காது என்று நம்புகிறேன். இதுவரை தேகாரோக்கியமாக இருந்த ஒருவர் திடீரென்று உங்கள் குணம் குறிகளைச் சொல்லுகின்றார் என்றால் கட்டாயம் சோதித்துப் பார்த்து முடிவெடுப்பது நல்லது. உங்களைப் போன்றவர்களுக்கு திடீரென்று ஒன்றிலும் ஈடுபாடு, விருப்பம் இல்லாமல் போவதை 'BLUES, என்று மேற்கத்திய நாடுகளில் குறிப்பிடுவார்கள். தொடர்ந்து வேலை செய்வது— வேலைக்குரிய பலன்கள் கிட்டாமல் இருப்பது— உங்கள் முயற்சிகளை முதுகில் தட்டிக்கொடுத்து தெம்பு ஊட்ட மேலதிகாரிகள் தவறுவது போன்றவை மனதில் சலிப்பூட்ட வைத்து இம் மாதிரியான மனோபான்மையைத் தரும். இம் மாதிரியான 'BLUES' மேற்குலகில் காணப்படுகிறது. திடீர் திடீரென ஏற்படும் மாற்றங்களைத்தான் —BLUES

என்ற வார்த்தை தருகிறது. ONCE IN A BLUE MOON என்ற சொற்றொடரில் BLUE MOON என்பது என்றோ — எப்போதோ இருந்துவிட்டு நடைபெறும் காரியம் என்பதைச் சுட்டிக் காட்டுவது போல், எமது நாட்டில் — என்ன உனக்கு அமாவாசை பிடித்திருக்கிறதா? என்று கேட்போமே அது போல் இந்த நிகழ்வு மனிதர்கள் வாழ்வில் திடீரென நிகழலாம்.

இப்படி மனோநிலை ஏற்படும் போது— மேற்கத்திய நாட்டவர்கள் வேலைக்கு லீவு போட்டு— குடும்பத்தை அழைத்துக் கொண்டு — பிக்னிக் போய் சந்தோஷமாக ஒரு வாரம் கழித்துவிட்டு வருவார்கள். மனமும், உடலும் ஆறுதல் பெறும். அமைதி பெறும். எனவே நீங்களும் அப்படிச் செய்து பாருங்கள்.

என்றாலும் ஓர் எச்சரிக்கை— சில புற்று நோய்கள், சிறுநீரக செயல் இழப்புகள், நீரிழிவு, அதி உயர் இரத்த அழுத்தம், தைரொயிட் சுரப்பு குறைவு, MANIC DEPRESSIVE ILLNESS என்ற மனோ நோய்கள் கூட சில வேளை இம்மாதிரி விளக்கமில்லாத அலுப்பு, சலிப்பு, சோர்வு என்பவற்றுக்குக் காரணமாகின்றன. எனவே முழு உடல் மருத்துவப் பரிசோதனை(FULL MEDICAL CHECK UP) ஒன்று செய்து சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளவும்.

கேள்வி:—என் பேரனுக்கு வயது 10.பூச்சிக்கு மருந்து கொடுத்தேன். அடுத்த நாள் காலையில் அவன் வாந்தி எடுத்த போது பெரிய குடல் புழு ஒன்று வாந்தியுடன் வெளியே வந்தது.பயந்து டாக்டரிடம் பேரனைக்காட்டிய போது—இதுசாதாரண சம்பவம்என்றுசொன்னார். இது ஏன் ஏற்பட்டது? வயிற்றில் நிறையப் புழுக்கள் இருந்தால் பூச்சி மருந்து கொடுத்தால் இப்படியாகும் என்று நண்பர்கள் சொல்கிறார்கள். வசுவாசி, கராம்பு அவித்த கஷாயம் கொடுத்தால் வயிற்றில் உள்ள பூச்சி இறந்துவிடும். இம் மாதிரி வாந்தியுடன் புழுக்கள் வெளியேறாது என்கிறார்கள். மேலும்,எமது காலத்தில் — அன்ரிபார், சின்னப்பொடியன் என்ற மருந்துகள் இருந்தன.ஏன் அவை இன்று பாவனையில் இல்லை? இன்று குடல் புழுக்களுக்கு எப்படி வைத்தியம் செய்கிறார்கள்?

பதில்:— நீங்கள் கூறிய 'சின்னப்பொடியன்' என்ற விநோதமான பெயரையுடைய பூச்சி மருந்தின் சரியான மருத்துவப் பெயர் சென்ன பொடியம் (CHENA PODIUM). இது கொக்கிப்புழுக்களை (HOOK WORM) அழிக்க சிறந்த மருந்து. இது அப்போது உபயோகத்திலிருந்து — அதனது பக்க விளைவுகள், குடித்த பின் தவிர்க்கப்பட வேண்டிய எண்ணெய் பொருட்கள் போன்ற காரணங்களால் — ஆங்கில வாகடத்திலிருந்து (FORMULARY) நீக்கப்பட்டுவிட்டது. அடுத்த ANTEPAR என்ற மருந்து இரசாயனப் பெயர் PIPERAZINE CITRATE. இது வட்டப்புழுக்களை (ROUND WORM) மாத்திரமே அழிக்கவல்லது. இன்று விஞ்ஞான ஆராய்ச்சிகளின் பலனாக — பாரிய பின்விளைவுகள் அற்ற, பக்க விளைவுகள் அற்ற பத்தியம் எனப்படும் உணவு வகைகள் கட்டுப்பாடுகள் எதுவுமில்லாத, பிப்பரஸன், சென்னபொடியம் போல்— ஒரு வகை குடல் புழுக்களுக்கே என்று ஒதுக்கிவைக்கப்படாத மருந்து வகைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை தான் இன்று நடைமுறையில் பாவனையில் உள்ளன. இவை MEBENDAZOLE வகை இரசாயனத்தைச் சேர்ந்தவை. இவை மெபண்டசோல், அல்பெண்டசோல், லெவமிசோல் என்ற மருவிய (DERIVATIVES) குழுக்களைச் சார்ந்தவை. இவற்றின் விசேட குணம் என்னவென்றால் — பலவகையான குடல் புழுக்களுக்கும் ஒரே மருந்தை உபயோகிக்கலாம் என்பதே. அத்துடன் மருந்து சாப்பிடும் போது உணவுக்கட்டுப்பாடு போன்ற எதுவித பத்தியமும் தேவைப்படாது. பெரிய பக்க விளைவுகளே இல்லை என்று சொல்லலாம். எனவே மருத்துவர்கள் தாராளமாகவே இதனை உபயோகிக்கின்றனர்.

இந்த மருந்துகள் குடல் புழுக்களை மயக்கமடைய வைக்கின்றன. மயங்கிய புழுக்கள் குடலின் வழமையான PERISTALSIS என்கிற முன்னோக்கித் தள்ளும் இயக்கத்தினால் மலத்தோடு வெளியேறும். அல்லது உயிரிழந்த நிலையில் ஜீரண நொதியங்களால் சாதாரண புரதங்களைப் போல் சமிபாடு அடையப்பட்டுவிடும். சிலவேளைகளில் சரிவர மயங்காத புழுக்கள் குடல் இயக்கத்துக்கு எதிராக தத்தளித்து எதிர்நீச்சல் போட்டு வயிற்றை அடைந்து வாந்தியுடன் வாயினூடாக மூக்குத்துவாரங்களூடாக வெளியேறலாம். இது பற்றிப் பயப்பட வேண்டிய அவசியமில்லை. புழுக்களின் எண்ணிக்கை அதிகளவில் இருந்தாலும்— உபயோகப்பட்ட மருந்தின் அளவு குறைந்திருந்தாலும் இப்படி ஏற்படலாம். சித்த வைத்தியத்தில் வசுவாசி, கராம்பு கஷாயங்கள் வெற்றிகரமாக உபயோகப்பட்டிருக்கின்றன. அப்பொழுதும் கூட வாயினால் புழு வெளியேறுவது நடைபெறலாம். வசுவாசி—கராம்பு கஷாயங்கள் செறிந்த அளவில் உட்கொள்ளப்பட்டால் வயிற்றுளைச்சல் ஏற்படலாம்.

மேற்கூறிய புதிய மருந்துகளை குழந்தைகளுக்கு ஆண்டுக்கு ஒரு தடவை உபயோகிக்கலாம். குடும்பத்தில் உள்ள அனைவரும் குழந்தைகளுக்கு பூச்சி மருந்து கொடுக்கும்போது, தாமும் பூச்சி மருந்தை எடுப்பது CROSS INFECTION எனப்படும். இது ஒவ்வொருவருக்கிடையே ஏற்படும் தொற்றைத் தடை செய்யும். உதாரணமாகக் குழந்தைகளும், பெற்றோரும் ஒரே படுக்கையில் உறங்குவதால் அல்லது பணியாளர் உள்ள வீடுகளில் குழந்தைகளுக்கு மட்டும் பூச்சி மருந்தை கொடுத்தால் போதாது. புழுக்களின் முட்டைகள் படுக்கையிலிருந்து அல்லது பணியாளர்களிடமிருந்து திரும்பவும் குழந்தைகளுக்கு பரவும். எனவே தான் பூச்சி மருந்து எடுக்கும்போது — வீட்டில் குழந்தைகளுடன் ஊடாடும் அனைவரும் எடுக்க ஆலோசனை சொல்வது வழக்கம்.

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஐயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
கொழும்பு – 14

பார்க்கக் கூடாத படங்கள்

பெண் ஆசை, மண் ஆசை, பொன் ஆசை— இந்த மூன்றும் தான் மனிதனைப் பல குற்றங்கள் செய்ய வைக்கின்றன. பெண்ணுக்கோ, மண்ணுக்கோ அல்லது பொன்னுக்கோ ஆசைப்படுவது தவறில்லை என்றாலும், இவற்றின் மீதான மனிதனின் தகாத ஆசைகள் தான் இவனை வம்பில் மாட்ட வைத்து வருகின்றன.

பிறருக்குச் சொந்தமானதைக்கூட, தான் உரிமை கொண்டாட நினைக்கும் அளவுக்கு இவன் ஆசைகள் விரிவதால், பல பிரச்சினைகளை விலைக்கு வாங்கிக் கொள்கிறான். ஆசை என்பது ஆசையாக இருக்கும் வரை வம்பில் மாட்டாதவன், அதுவே பேராசை என்றாகும்போது பெருந் தொல்லைகளுக்கு முகம் கொடுகக வேண்டியவனாகிறான்.

இன்றைய யுகத்தில் கணினியும், இணையமும் இருப்பதால் பலவற்றை வெகு சுலபமாக விரல் நுனிக்கே கொண்டுவந்து விடுகிறோம். இந்த வரிசையில் பாலியல் படங்களை இணையத்தில் பார்ப்பது என்பது இன்று பலருக்குப்பிடித்த பொழுதுபோக்காக மாறி இருக்கிறது. இது திருமணமானவர்கள், தனிக்கட்டைகள் என்று எல்லோரையும் மயக்கித் தன் பிடியில் வைத்திருக்கிறது.

அண்மைக்காலங்களில் பல மனோதத்துவ வியலாளர்களும், சமூக சேவையாளர்களும் இந்தப் பாலியல் படங்களைப் பார்ப்பதால் வரும் தாக்கங்களைச் சுட்டிக்காட்டத் தொடங்கியிருக்கிறார்கள். முன்பெல்லாம் இது மத ரீதியாக ஒழுங்கற்றது எனச் சொல்லப்பட்டு வந்த விடயம், இன்று பெரிய அளவிலான தாக்கத்துக்குப் பலரிடையே இடம் கொடுத்து இருக்கின்றது.

கிளர்ச்சியூட்டும் இந்தப் பாலியல் படங்களைப் பார்ப்பதால், ஆண், பெண் உறவு மாற்றி அமைக்கப்படுகிறதென்பது இவர்களின் விவாதமாக இருக்கின்றது. அடிக்கடி பாலியல் படங்களைப் பார்க்கும் ஆண்கள், தாம் படங்களில் பார்த்த அசாதாரணமான செய்கைகளை தமது பெண்களிடமும் எதிர்பார்க்கிறார்கள் என்று வல்லுனர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

இப்படியான படங்களைப் பார்க்க இணையத்தில் ஏராளமான பக்கங்கள் மலை போலக் குவிந்து கிடக்கின்றன. Cyber Pron என்றழைக்கப்படும் இந்தப் பாலியல் படக்காட்சிகளைக் காண, இலவசமாகச்சில படங்களைக் காட்டி, தங்களுடன் அங்கத்தவராக இணையும்படி இவை வலை வீசுகின்றன. இதில் சிக்கிக் கிடப்போர் ஏராளம். ஏராளம். இப்படி இணையம் மூலம், பாலியல் படங்களைப் பார்க்கும் பழக்கத்தில் உள்ளவர்களில் 15 வீதமானவர்களது வாழ்க்கை பெரிய பாதிப்பை அடைகின்றது என்கிறார் ஓர் ஆய்வாளர்.

இங்கே ஒரு கேள்வி எழுகின்றது. இந்தப் பொழுது போக்கு என்பது பொல்லாத ஒன்றாகிவிடுமா என்பது தான் அந்தக் கேள்வி. பொழுது போக்குபவருக்கு இது தவறில்லை என்று மனதில் பட்டாலும், பொதுவாக இப்படியான விடயங்களில் மற்றையோரின் பார்வைகள் எப்படியிருக்கிறன என்பதை அறியவேண்டியுள்ளது.

அமெரிக்காவின் ரெக்ஸாஸ் மாநிலப் பல்கலைக் கழகத்தின் கருத்துப்படி, அதிகமான பாலியல் படங்களை ஆண்கள் பார்க்கப் பார்க்க , பெண்களைப் பாலியல் ரீதியாக வர்ணிக்கும் மனோபாவம் அவர்களுக்குள் வளரும் என்று எச்சரிக்கின்றது.

இன்னொரு பல்கலைக்கழகம் இதுபற்றிக் குறிப்பிடுகையில், இந்தப் பழக்கத்துக்கு அடிமையானவர்கள், பெண் என்றால் அவளுக்குக் கவர்ச்சியான மார்பகங்கள், வெறியூட்டும் கால்கள் , போதையூட்டும் பின்னழகு என்று மூன்றும் சேர்ந்த கலவை தான் இருக்கின்றது என்று எண்ணத் தலைப்பட்டுவிடுவார்கள் என்று எச்சரிக்கிறது.

இன்னொரு மனோதத்துவ நிபுணர் கருத்தோ வேறுபட்டதாக இருக்கிறது. மனைவிமாருக்குத் தெரியாமல் பலான படங்களைப் பார்ப்பது தவறில்லை. அவரின் மன உழைச்சலுக்கு இந்தப் படங்கள் சந்தோஷத்தைக் கொடுக்குமானால், அவர் இவற்றைப் பார்க்கலாம். ஆனால், மனைவிக்குத் தெரியாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்கிறார் இந்த அமெரிக்க நிபுணர். ஆனால், இப்படி ஒளிப்பது, மனைவிக்கு நம்பிக்கைத் துரோகம் இழைப்பது போலாகும் என்று வாதாடுகிறார்கள் இன்னொரு சாரார். பல மனைவிமார், இப்படியான பலான படங்களைப் பார்ப்பதும், இன்புறுவதும், இன்னொரு பெண்ணுடன் போய் உறவு வைத்துக் கொள்வதற்கு ஒப்பானது என்றே நினைக்கிறார்கள் என்று அபிப்பிராயம் தெரிவிக்கிறார்கள் இவர்கள்.

ஓர் இளம் பெண்ணின் கருத்து இப்படியிருக்கிறது. தன்னுடைய சினேகிதன் கணினித் திரைகளில் வரும் பெண்களின் உடலமைப்புகளைப் பார்த்துவிட்டு தன்னிடம் அவற்றை எதிர்பார்ப்பதால், தான் சங்கடமான நிலையில் இருப்பதாக அப்பெண் கூறுகிறாள். சத்திர சிகிச்சை மூலம் மார்புகளைப் பெரிதாக்கிக் கொள்ளும் எண்ணம் தனக்கு ஏற்பட்டிருப்பதாகவும் அப் பெண் கூறுகிறாள். தனது சினேகிதன் தன்னை விட்டுப் போய்விடக் கூடாது. அவனைத் திருப்திப்படுத்த வேண்டும் என்பது தான் இப்படி ஓர் எண்ணத்தை அவர் மனதில் விதைத்திருக்கிறது.

பச்சை விளக்குக் காண்பிக்காத, இந்தச் சிவப்பு விளக்குச் சமாச்சாரங்களை நீலப்படங்களாகக் காட்டும் இந்த விவகாரம் வெள்ளைஉள்ளங்களைக் கறுக்க வைப்பது வேதனைக்குரிய விடயம் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை; மு.கா.வின் மாற்றுத்திட்டம் எப்போது?

தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள வடக்கு– கிழக்கு இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்கு மாற்றீடான யோசனைகள் அடங்கிய பிரேரணை ஒன்றை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விரைவில் முன்வைக்கும் என்று அதன் தேசியத் தலைவர் ரவூப் ஹக்கீம், நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மிடம் தெரிவித்துள்ள கருத்து முஸ்லிம்கள் மத்தியில் நகைப்புக்கிடமான ஒரு கதையாகவே பார்க்கப்படுகிறது.

கடந்த ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியின்போது தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டது முதல் இன்றுவரை முஸ்லிம் காங்கிரஸ் உருப்படியான காரியம் எதையும் மேற்கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டு இருந்து வருகிறது.

முஸ்லிம் காங்கிரஸும், அதன் தலைமைத்துவமும் முன்னுக்குப்பின் முரணான கருத்துக்களை வெளியிட்டு வருவதோடு, தாம் கூறியவற்றில் ஒன்றைக்கூட செயற்படுத்திக் காட்டவில்லை.

முன்னைய ஐக்கிய தேசிய முன்னணி, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தபோது, முஸ்லிம்களின் பிரச்சினைகள், உரிமைகள் மற்றும் அபிலாஷைகள் தொடர்பில் அரசுடனும், புலிகளுடனும் சமாந்தரமாக அமர்ந்து பேசுவதற்கு தனித்தரப்பு அங்கீகாரத்தை முஸ்லிம் காங்கிரஸ் கோரிவந்தது.

எனினும், பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகக் கலந்து கொள்வதற்கு அனுமதி கிடைக்கவில்லை.

அதேவேளை, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அமைச்சர் என்ற ரீதியில் அரச தரப்பில் பங்கேற்றார்.

இரண்டாம் சுற்றில் தனித்தரப்பு கிடைக்கும் எனவும், அதற்கான உத்தரவாதத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனக்குத் தந்திருக்கிறார் எனவும் அப்போது ரவூப் ஹக்கீம் கூறினார்.

ஆனால், ஆறுசுற்றுப் பேச்சுக்கள் இடம் பெற்று முடிந்தபோதிலும், தனித்தரப்புக்கான அங்கீகாரம் கிடைக்கவில்லை.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும், அதன் தலைவர் ஹக்கீமும், முஸ்லிம் சமூகத்துடன் ஒப்புக்குச் சப்பாணியாகவே காலம் கடத்தி வந்தனர். ஆக்கபூர்வமான செயல்திட்டங்கள் எதனையும் முன்னெடுக்கவில்லை.

செய்தி ஊடகங்களிலும், மேடைகளிலும் காட்டமான அறிக்கைகளையும், வீரப் பேச்சுக்களையும் குறைவில்லாது செய்து வந்த ரவூப் ஹக்கீம், ஒரு புறம் முஸ்லிம் சமூகத்திற்காகக் குரல் கொடுக்கவும், அதற்கான வேலைத்திட்டத்தை செயலுருப்படுத்தவும் பெரும் பணிகளைச் செய்ய வேண்டியிருந்தபோதிலும், மறுபுறம் தான் அமைச்சுப்பதவி வகித்த ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் கடமைப்பட்டு– கட்டுப்பட்டு செயற்பட நிர்ப்பந்திக்கப்பட்டார்.

அதனால், சமாதான முயற்சிகளில் முஸ்லிம் சமூகத்தின் சார்பில் பங்காற்றுவதற்கு முஸ்லிம் காங்கிரஸுக்கு கிடைத்த நல்ல பல சந்தர்ப்பங்களை தலைவர் ரவூப் ஹக்கீமினால் நன்கு பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சந்திப்புக்கு சந்தர்ப்பம் கிடைத்த போது, முஸ்லிம்களின் ஏகப் பிரதிநிதிகள் முஸ்லிம்காங்கிரஸே எனக் கூறிக்கொண்டு மு.கா. உறுப்பினர்களை மட்டும் அழைத்துக்கொண்டு வன்னி சென்று, புலிகளின் தேசியத் தலைவர் பிரபாகரனை ரவூப் ஹக்கீம் சந்தித்தார்.

அதுவே பின்னர் புலிகளின் நிராகரிப்புக்கும் காரணமாயிற்று. புலிகளுடன் முஸ்லிம் காங்கிரஸ் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் கைவிடப்படுவதற்கு முஸ்லிம் தலைவர்களின் முரண்பட்ட போக்குகளே வழிவகுத்தன.

அதற்கான முழுப் பொறுப்பையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸே ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏகப் பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டு இறுமாப்பாக செயற்பட்டதன் எதிர்ஒலியை மு.கா.காலம் கடந்தே புரிந்து கொண்டது.

அதனால்தான் மு.கா.தலைவர் ரவூப் ஹக்கீம் அண்மைக் காலமாகஏகபிரதிநிதி என்கின்ற கோஷத்தைக் கைவிட்டு, அனைத்து முஸ்லிம் தலைவர்களையும் கலந்தாலோசித்து முஸ்லிம்களின் விவகாரம் கையாளப் படும் என்று கூறிவருகின்றார்.

எவ்வாறாயினும் அது காலம் கடந்த ஞானமே. இதனை முஸ்லிம் காங்கிரஸ் அப்போதே உணர்ந்திருக்குமானால் முஸ்லிம்கள் விடயத்தில் ஓரளவு முன்னேற்றத்தைக் கண்டிருக்காலாம்.

ஐ.தே.மு அரசின் ஆட்சியில் தொடரப்பட்ட சமாதானப் பேச்சுக்களின்போது இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை புலிகள் கோரியபோது, அது தொடர்பான மாற்று ஆலோசனைகளை 2004 ஜனவரி முதலாம் திகதி முஸ்லிம் காங்கிரஸ் முன்வைக்கும் எனத் தலைவர் ரவூப் ஹக்கீம் கூறியிருந்தார்.

வடக்கு–கிழக்கு பிராந்தியத்திற்கு மட்டுமல்லாது இலங்கை தேசம் முழுவதற்குமான இடைக்கால யோசனைகளை தாம் பிரேரிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்கு மாற்றிடாக முஸ்லிம்களுக்கு என இடம்பெற வேண்டிய விசேட ஏற்பாடுகள் குறித்த ஆலோசனைகளை முன்வைக்க வேண்டிய முஸ்லிம் காங்கிரஸ், தேசம் முழுவதற்குமான திட்டம் ஒன்றைத் தயாரிக்கிறோம் என்று கூறிக் கொண்டே காலம் கடத்திவிட்டது.

ஜனவரி மாதம் முதலாம் திகதி கடந்த ஒன்பதரை மாதங்களாகியும் இன்னும் முஸ்லிம் காங்கிரஸின் யோசனைகள் வெளியிடப்படவில்லை.

-அஸ்லம் எஸ்.மௌலானா-

இந்நிலையிலேயே எரிக்சொல்ஹெய்முடனான சந்திப்பின்போது, புலிகளின் தன்னாட்சி அதிகாரசபைக்கு மாற்றீடான திட்டத்தை விரைவில் சமர்ப்பிப்போம் என தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்திருக்கிறார்.

கடந்த ஒரு வருடகாலமாக அவர் இக் கருத்தைக் கூறிவருகின்ற போதிலும், அது தொடர்பில் எந்த ஒரு அம்சத்தையும் இன்னும் வெளியிடவில்லை.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உண்மையில் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்கான மாற்றுத்திட்டத்தை தயாரித்துள்ளதா? அல்லது இப்போதுதான் தாயாரித்து வருகின்றதா அல்லது இன்னும் அது குறித்துப் பரிசீலிக்கவே இல்லையா? என்ற கேள்விகள் முஸ்லிம்கள் மத்தியில் எழுப்பப்படுகின்றன.

ஏனெனில் முஸ்லிம் காங்கிரஸின் யோசனைகள் அனைத்து முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் வழங்கப்பட்டு, அவை தொடர்பில் அவர்களின் ஆலோசனைகளும், கருத்துக்களும் உள்வாங்கப்படும் என்று மு.கா. தலைவர் ஹக்கீம் முன்னர் அறிவித்திருந்தார்.

ஆனால், அது குறித்து ஒரு அம்சம் கூட இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை.

எனவே, இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை கட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸின் ஆலோசனைகளையும் உள்ளடக்கியதாகவே ஏற்படுத்தப்பட வேண்டும் என்று கூறிவருகின்ற முஸ்லிம் காங்கிரஸ், அந்த ஆலோசனைகளை முஸ்லிம் மக்களினதும், ஏனைய கட்சிகளின் முஸ்லிம் பிரதிநிதிகளினதும் பார்வைக்கு வெளியிடுவாரா?

வேலை வாய்ப்பு

நீர்கொழும்பில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள சுப்பர் மார்க்கட் (Super Market) ஒன்றுக்கு அனைத்துத் துறையிலும் வேலைவாய்ப்பு உண்டு. இருபாலரும் கிராம சேவகர் சான்றிதழ் மற்றும் ஏனைய சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

ஜெயக்கொடி சுப்பர் மார்க்கட்
75, ஐயரத்ன ரோட்,
நீர்கொழும்பு.

COLOMBO SILVER LANKA வழங்கும்
Diploma In English

இப் பாடநெறியினை பூரண தமிழ் விளக்கத்துடன் தெளிவான வழிகாட்டலில் பேச, எழுத, வாசிக்க கற்று Diploma சான்றிதழ் ஒன்றை பெற நீங்களும் தயாரா?

கட்டணங்கள் அரசாங்கத்தினால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இப்பாட நெறிகளுக்காக விண்ணப்பிக்கும் அனைத்து மாணவர்கட்கும் இலங்கை கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட வீரன் அரவிந்த டி சில்வாவின் கையொப்பமிடப்பட்ட அழகான Gold Bat Keytac. ஒன்றும் அடையாள அட்டை ஒன்றும் இலவசமாக வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு:
4/= முத்திரை இரண்டினை அனுப்பிபெற்றுக் கொள்ளவும்

SLI
9/1/2, J.M.Post, Office Building, Colombo-10
Tel: 0777-426589, 071-4884295, 071-4099396,
Fax: 0094-11-2688094

31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
22 ✻ 09 ✻ 1954

மறைவு
22 ✻ 08 ✻ 2004

திருமதி ஜெகதீஸ்வரி தவபாலசிங்கம்

அன்புத் தெய்வமே!
கண்ணோரம் நீர் கசிந்து முடியவில்லை
31 ஆம் நாள் ஆனதம்மா!
மாறாத நினைவுதனை மனதினிலே
வரைந்து கொண்டு
தவறாமல் உமையே தினம் தினம்
எண்ணுகின்றோம் அம்மா!
ஆறுதலுக்கு ஆயிரம் உறவுண்டு.
ஆனால், அம்மா என்றழைக்க
யாருமில்லையே!

கடந்த 22.08.2004 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், 20.09.2004 திங்கட்கிழமை மதிய போசனமும் நடைபெறும். இந் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கிறோம்.

நிரந்தர முகவரி:
V.C. றோட், மயிலிட்டி, காங்கேசன்துறை.
தற்காலிக முகவரி:
K. அம்பிகைபாலன்
பழைய பொலிஸ் நிலைய வீதி,
சுன்னாகம் தெற்கு. தொ.பே: 071 2524546

பிள்ளைகள்,
மருமக்கள், அப்பா,
சகோதரர்கள்,
மச்சான்மார்கள்,
மச்சாள்.

நல்லதொரு வாய்ப்பு
Institute of Computer Studies
கணினிக் கல்வி நிறுவனம்

பிரதான வீதி, பண்டத்தரிப்பு. Main Street, Pandaterruppu.

Certificate Courses
*Microsoft Windows
*Microsoft Word
*Microsoft Excel
*Microsoft Access
*Microsoft PowerPoint

சிறுவர்களுக்கான Microsoft Kids Programme

உங்கள் கணினி தொழில்நுட்பத்தை வளர்த்துக்கொள்ள எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள்

பிரத்தியேக ஆங்கில வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்படும்

பலரது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்கமுடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோய் உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்தும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோத்துவ வைத்தியம்(PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரை செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஒடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

கொழும்பில்...
செப்டெம்பர் 22 - 27 வரை சந்திக்கலாம்
New Ahmed Turist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427, Cell. 0722 910796
Hot Line: 0777 569205

கல்முனையில்..
ஒக்டோபர் 02 - 03
திகதிகளில் சந்திக்கலாம்
T.M.M. பாமசி கல்முனை
Tel No. 067 2229329
Hot Line: 0777 569205

வவுனியாவில்...
ஒக்டோபர் 10 - 11 ஆம் திகதிகளில்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

யாழ்ப்பாணத்தில்...
ஒக்டோபர் 12 - 16
A.S.N. சுற்றுலாவிடுதி
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No. 021 2223181
021 222 5399
பதிவுகளை முன்கூட்டியே செய்துகொள்ளுங்கள்

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road
Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி

செப். 19 – 25, 2004

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14. டெலிபோன்: 011–4734401—6
பாக்ஸ் : 011 – 4734404
E-mail: editorial@sudaroli.com

சமாதானப் பேச்சு இனி எப்போது?

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகி இம்மாதம் 16 ஆம் திகதியுடன் இருவருடங்கள் கழிந்துவிட்டன.

2002 செப்டெம்பர் 16 ஆம் திகதி தாய்லாந்தின் சட்டாஹிப் நகரில் உள்ள கடற்படைத் தளத்தில் இரு தரப்பினரும் முதலாவது சுற்றுப் பேச்சை நடத்தி இருந்தனர்.

முதலாவது சுற்றுப் பேச்சின் பின்பு, அப்பேச்சில் கலந்து கொண்ட மதியுரைஞர் அன்டன் பாலசிங்கமும் இலங்கை அரசு தரப்பு தலைமைப்பிரதிநிதி ஜி.எல்.பீரிஸும் பேச்சுக்கள் குறித்து திருப்தியும் மகிழ்ச்சியும் தெரிவித்திருந்தனர்.

20 வருடகால இலங்கையின் இன மோதல்களுக்கு தீர்வு வரப் போகிறது என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் ஏற்பட்டது.

ஜப்பானின் ஹக்கோனே நகரில் ஆறாவது சுற்றுப்பேச்சு நடைபெற்று 17 மாதங்கள் தற்போது கழிந்துவிட்டன. பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதில் முட்டுக்கட்டை நிலைமை தொடர்கிறது.

இரு தரப்பினரும் யுத்தத்துக்குச் செல்லத் தயாராக இல்லாத போதிலும் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது பெரும் சவாலாகவே இருக்கிறது.

ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் கடந்து ஐந்து மாத கால ஆட்சியில் நிலைமை மேலும் மோசமடைந்து விட்டது. தற்போதைய நிலைமை தொடர்ந்தால் பாரிய விளைவுகள் ஏற்படலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் சமாதான முயற்சிகளில் புதிய அணுகு முறைகளைக் கையாண்ட நோர்வே, முட்டுக்கட்டை நிலையை நீக்கி பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதில் இன்னும் நம்பிக்கை இழக்காமல் செயற்பட்டுவருகிறது.

இரு தரப்பினரையும் மீண்டும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுத்துவது மூலம் இலங்கையின் இன மோதல்களுக்கு நிரந்தர முடிவு கட்டி விடமுடியும் என்று நோர்வே நம்புகிறது.

2002 பெப்ரவரி 24 ஆம் திகதி முதல் அமுலில் இருந்து வரும் யுத்த நிறுத்தம் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருவது ஓரளவு ஆறுதலை அளிக்கின்ற போதிலும், முட்டுக்கட்டை நிலை நீங்குவதற்கான எந்த வித அறிகுறியும் இன்றி காலம் கடந்து போய்க் கொண்டிருக்கிறது.

இரு தரப்புக்கும் இடையில் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் முயற்சிகளை விட இருதரப்புக்கும் இடையிலான உறவுகள் மேலும் சீர்கெட்டுப் போகாமல் தடுப்பதும், யுத்தநிறுத்தத்துக்கு ஆபத்து ஏற்படாமல் பார்த்துக் கொள்வதுமே தற்பொழுது நோர்வேயின் சமாதான அனுசரணையாளர் எரிக்சொல் ஹெய்ம் எதிர் நோக்கும் பிரதான சவால் ஆகும்.

ஐந்து நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்த எரிக்சொல் ஹெய்ம் அரசியல் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் விடுதலைப் புலிகள் ஆகியோரைச் சந்தித்து விரிவான பேச்சுக்களை நடத்த உள்ளார்.

தம்மீதான தாக்குதல்கள் குறித்து தாம் பொறுமை இழந்து வருவதாக புலிகள் தெரிவிக்கின்றனர்.

இராணுவம் போர்நிறுத்தத்தை மீறும் செயற்பாடுகளில் ஈடுபடுவதானது தமது சினத்தை தூண்டுவதாகவும் சமாதான முயற்சிகள் முறிவடையும் நிலை ஏற்படலாம் என்றும் தமிழ் மக்களினதும் அவர்களது தலைமைத்துவத்தினதும் பொறுமை எல்லை மீறிப்போய்க் கொண்டிருப்பதாகவும் புலிகள் எச்சரிக்கின்றனர். இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கும்படி அவர்கள் கோரி வருகின்றனர்.

மறுபுறம் ஜே.வி.பி, இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டால் முழு நாடுமே புலிகளின் பொறியில் சிக்கி விடும் என்கிறது. ஜே.வி.பியின் சம்மதம் இன்றி பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க முடியாத நிலைமை அரசுக்கு இருந்து வருகிறது.

ஆகவே, பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது இன்னும் வெகு தூரத்திலேயே இருக்கிறது.

சமாதான முயற்சிகளில் பிரதமரை ஓரம்கட்டச் சதி!

ஏப்ரல் 2 பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு வெற்றி அடைந்தவுடன் புதிய பிரதமர் யார் என்ற கேள்வி எழுந்தது.

தனது நம்பிக்கைக்கு மிகவும் பாத்திரமான லக்ஷ்மன் கதிர்காமரை பிரதமராக்க ஜனாதிபதி விரும்பினார். ஜே.வி.பியினரோ தமது நெருங்கிய சகாவான அநுரா பண்டாரநாயக்காவை பிரதமர் ஆக்குவதில் முனைப்பாக இருந்தனர்.

இந்தப்போட்டியில் இரு தரப்பினருமே வெற்றி அடையவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் உள்ள சிரேஷ்ட உறுப்பினர்களின் கையே ஓங்கியது. மஹிந்த ராஜபக்ஷ பிரதமரானார். மஹிந்த ராஜபக்ஷவின் பதவி ஏற்பு வைபவத்தைக்கூட ஜே.வி.பியினர் பகிஷ்கரித்திருந்தனர்.

தேர்தல் முடிந்து ஐந்து மாதங்கள் கடந்துவிட்டன. மஹிந்த ராஜபக்ஷ ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு அரசில் இன்னும் ஒரு சர்ச்சைக்குரிய நபராகவே இந்து வருகிறார். அவரை ஓரம் கட்டும் முயற்சிகள் திரைமறைவில் இடம்பெற்று வருகின்றன.

மஹிந்த ராஜபக்ஷவுக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் முரண்பாடும், முறுகலும் நீடிப்பது பற்றிய அரசல்புரசலான செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

அவற்றில் ஒன்றுதான், நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்முடனான உத்தியோக பூர்வ சந்திப்பை ஜனாதிபதி ரத்து செய்தது ஆகும்.

எனினும், பின்னிரவில் உத்தியோக பூர்வமற்ற முறையில் சொல்ஹெய்முடன் இரகசியப் பேச்சு நடத்தி அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கின்றார் மஹிந்த ராஜபக்ஷ.

5நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்த சொல்ஹெய்ம் சமாதான முயற்சிகள் தொடர்பான தனது அனுசரனைப் பணியில் ஒருகட்டமாக பலதரப்புக்களுடன் பேச்சு நடத்தினார்.

ஸ்ரீலங்காமுஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ,அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா , பாதுகாப்பு அமைச்சின் செயளாளர் சிறில் ஹேரத், அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால, விடுதலைப்

புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் மற்றும் ஜனாதிபதி, எதிர்க்கட்சித்தலைவர் ஆகியோருடன் சொல்ஹெய்ம் உத்தியோகபூர்வப் பேச்சுக்களை நடத்தினார். இந்தஅடிப்படையிலேயே பிரதமருடனும் பேச்சுக்களை நடத்த விரும்பினார்.

மகிந்த ராஜபக்ஷவுக்கு பிரதமர் பதவி வழங்கப்பட்டாலும், அதுதனது கட்சிச் செல்வாக்கால் அவர் பிடுங்கி எடுத்துக்கொண்ட பதவி என்பதே பலரினதும் கருத்து.

இதனால்தான் அவருக்குப் பொறுப்பான வேறு அமைச்சுப் பொறுப்புக்கள் எதுவும் வழங்கப் படவில்லை. அவருக்கு பெரும் தெருக்கள் அமைச்சுப் பொறுப்பு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. அதில் கூட கிழக்கு பெரும்தெருக்கள் விவகாரம் பிடுங்கி எடுக்கப்பட்டு அதாவுல்லாவுக்கு வழங்கப் பட்டுள்ளது. அரசியல் தலைவர்களையும் அரசியல் பிரமுகர்களையும் எரிக் சொல்ஹெய்ம் இம்முறைசந்தித்ததன் முக்கிய நோக்கம் போர் நிறுத்தத்தை இருவரும் மீறாதவகையில் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தவே. இந்த வகையில் பிரதமருடனான சந்திப்பும் மிகவும் அவசியமானது என்று சொல் ஹெய்ம் கருதினார். 14ம் திகதி இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடாகி இருந்தது.

ஆனால், இந்தச் சந்திப்பில் பங்குபற்ற வேண்டாம் என்று கடைசி நேரத்தில் ஜனாதிபதி தரப்பிலிருந்து பிரதமருக்கு தகவல் பறந்ததாகக் கூறப்படுகிறது.

எரிக் சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுநடத்திய பின்பு பிரதமரைச் சந்திக்கலாம் என்பதே ஜனாதிபதியின் திட்டமாக இருந்தது.

சந்திப்புக்கு ஒதுக்கப்பட்ட நேரம், கொழும்பில் இருக்காமல் தவிர்த்துக் கொள்ளும் படியும், சந்திப்பு இரத்தானதற்கு இதனைக்காரணமாகத் தெரிவிக்கும் படியும் மஹிந்த ராஜபக்ஷவிடம் கூறப்பட்டதாம். பிரதமர் கொழும்புக்கு வெளியே புறப்பட்டுச் செல்வதற்காக ஹெலிக் கொப்டரும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாம்.

எனினும் சொல்ஹெய்ம் போன்ற இராஜ தந்திரப்பிரமுகர் ஒருவரைச்சந்திப்பதற்கு முன்கூட்டியே நேரம்ஒதுக்கிக் கொடுத்து விட்டு, கடைசிநேரத்தில் அதனை ரத்துச் செய்வதற்கான பொறுப்பை தம்மால் ஏற்க முடியாது என்று பிரதமர் தெரிவித்து விட்டாராம்.

சொல்ஹய்ம் – பிரதமர் சந்திப்பை தவிர்ப்பதற்காக இந்த சந்திப்புக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் பிரதமரைத் தனது மாளிகைக்கு ஜனாதிபதி அழைத்து அமைச்சுப் பொறுப்புக்களை மாற்றி அமைப்பது குறித்து பேச்சுநடத்தினார் என்றும் இதனால் சொல்ஹெய்முடனான உத்தியோக பூர்வ சந்திப்பு இடம் பெறவில்லை என்றும் கூறப்படுகின்றது. எனினும், கொழும்பில் இரகசியமான ஓர் இடத்தில் சொல்ஹெய்மை பிரதமர் சந்தித்துப் பேசினார்.

உத்தியோக பூர்வசந்திப்பு ரத்தானதற்கான பின்னணிகளையும் சொல்ஹெய்மிடம் எடுத்துக் கூறினார்.

-சஞ்சாரன்-

இரண்டும் கெட்டான் நிலையில் தத்தளிக்கும் ஜனாதிபதி!

ஏற்கனவே உள்கட்சி முரண்பாடுகளினால் குழம்பிப்போயிருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு அரசு இலங்கைத் தொழிளாலர் காங்கிரஸின் வருகையால், மேலும் குழப்பங்களை எதிர்நோக்கி வருகிறது. இரண்டும் கெட்டான் நிலையில் ஜனாதிபதி தத்தளிக்கிறார்.

கடந்த வாரம் இ.தொ.காவைச் சேர்ந்த இருவர் அமைச்சராகவும், பிரதி அமைச்சராகவும் பதவி ஏற்றனர். முன்பெல்லாம் அரசுக்கு ஆதரவுவழங்கும்அறிவிப்பைஇ.தொ.கா விடுக்கும் போது, மலையகத்தின் முன்னேற்றமே காரணமாகக் காட்டப்பட்டு வந்தது. மலையகத்தை முன்னேற்றவே தாம் அரசுக்கு ஆதரவு வழங்க முடிவு செய்ததாக இ.தொ.கா தெரிவிப்பது வழக்கம்.

ஆனால், இம்முறை இ.தொ.காவின் ராகம் காலத்துக்கு ஏற்ப மாறிவிட்டது. முட்டுக்கட்டை நிலையை அடைந்துள்ள சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்பதற்காக தாம் அரசுக்கு ஆதரவு வழங்க முடிவு செய்ததாக இ.தொ.கா தலைவர் ஆறுமுகன் தொண்டமான் கூறுகிறார். அத்துடன் வடக்கு– கிழக்கிற்கான இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையின் யோசனைகளின் அடிப்படையிலேயே சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கிறார்.

ஆனால், அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி, இ.தொ.காவின் நிலைப்பாட்டை வன்மையாக எதிர்க்கிறது.

இ.தொ.கா தற்பொழுது அரசில் இணைந்துள்ளதால் அரசின் கொள்கையை அது பின்பற்றவேண்டும் என்கிறார் ஜே.வி.பியைச் சேர்ந்த சிறு கிராமிய கைத்தொழில் அமைச்சர் கே.டி.லால்கந்தா.

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்காகத்தான் இ.தொ.கா அரசுக்கு ஆதரவு தருகின்றது என்றால் இ.தொ.காவுக்கு அரசின் கொள்கை தெரியாது என்றும் ஜே.வி.பி சீறுகிறது.

ஆனால், இ.தொ.காவின் புதிய அமைச்சர் முத்து சிவலிங்கம், ஜே.வி.பியை வழிக்குக் கொண்டு வருவது ஜனாதிபதியின் பொறுப்பு என்கிறார். கூட்டமைப்புக்குள் புதிதாக குத்துவெட்டு. சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக ஜே.வி.பி கடைப்பிடித்து வரும் கடும் போக்கு ஜனாதிபதியையே குழப்பத்தில் ஆழ்த்திவருகிறது.

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க முன்னர் ஜே.வி.பி தலைவர்களுடன் தாம் பேச இருப்பதாகவும், ஜே.வி.பியின் சம்மதத்துடனேயே சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும் என்றும் ஜனாதிபதி கூறி இருந்தார்.

ஆனால், பின்பு கடந்த வாரம் மஹியங்கனையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் ஜே.வி.பியை வன்மையாகக் கண்டித்திருந்தார். ஜே.வி.பி சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டைபோடுவதாக மஹியங்கனைக் கூட்டத்தில் ஜனாதிபதி குற்றஞ் சாட்டி உள்ளார்.

"இனப் பிரச்சினைக்கு நிரந்தர சமாதானம் ஏற்படுத்தப்படவேண்டும். நாட்டில் உள்ள மக்களில் 99 சதவீதமானோர் யுத்தத்துக்கு எதிராக உள்ளனர். ஒரு வீதமானோரே யுத்தம் மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்கின்றனர். இவர்களும் கமிஷன் அடிப் போரும் பைத்தியக்காரர்களும் தான்" என்று ஜனாதிபதி மஹியங்கனையில் கூறி இருந்தார்.

99 சதவீதமான மக்கள் சமாதானத்துக்கு ஆதரவு என்றால், ஜனாதிபதி சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதில் என்ன தடங்கல் இருக்கிறது?

அரசுக்கு இ.தொ.கா ஆதரவு வழங்குவதால் அரசுக்கு பெரும்பான்மை பலம் கிடைத்து விட்டது என்பது ஐக்கிய தேசிய முன்னணியின் நிலைப்பாடு. அரசு சமாதானப் பேச்சை ஆரம்பித்தால் ஐக்கிய தேசிய முன்னணி ஆதரவு வழங்கும் என்று ஐ.தே.மு. பேச்சாளரும், முன்னாள் அமைச்சருமான ஜீ.எல். பீரிஸ் கூறுகிறார்.

ஆனால், ஜனாதிபதி பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு தயங்குகிறார். இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு ஜே.வி.பி.தெரிவித்து வரும் எதிர்ப்பே இதற்குப் பிரதான காரணம். இ.தொ.கா அரசுக்கு ஆதரவு வழங்கினாலும் ஜே.வி.பியே பிரதான பங்காளிக்கட்சி.

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் புலிகள் உறுதியாக இருந்து வருகின்றனர்.

இந்த நிலையில் தான் அரசியல் கட்சித் தலைவர்கள், மதத் தலைவர்கள் அடங்கிய தேசிய ஆலோசனைச் சபை ஒன்றை நிறுவவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் இணைத்தலைவர்களாக நியமிக்கவும் ஜனாதிபதி திட்டமிட்டார்.

ஆனால், இந்த யோசனையை ஐக்கிய தேசிய முன்னணி ஏற்க மறுத்ததை அடுத்து இதுவும் குழம்பிப்போய்விட்டது.

இது தொடர்பான பேச்சுக்களுக்கு ஜனாதிபதி எதிர்க்கட்சித் தலைவர் ரணிலை அழைத்த போது, தனது கட்சித் தலைவர்கள் சிலரின் எதிர்ப்புக்கு மத்தியிலேயே அவர் சந்திப்புக்கு இணங்கி இருந்தார்.

வழமை போன்று 40 நிமிடம் வரை அவரைக் காக்க வைத்த பின்னர் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் இணக்கம் எதுவும் எட்டப்படவில்லை. சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக அரசு தனது நிலைப்பாட்டை முதலில் அறிவிக்கட்டும். அதன் பின்பு தேசிய ஆலோசனை சபை குறித்து ஆலோசிக்கலாம் என்று ரணில் கூறுகிறார்.

ஆனால், தேசிய ஆலோசனைச் சபையை நிறுவுவது மூலம் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் மத்தியில் கருத்தொருமைப்பாடு காணலாம் என்று ஜனாதிபதி நம்புகிறார்.

சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக ஆளும் கூட்டமைப்புக்குள்ளேயே கருத்தொருமைப்பாடு கிடையாது. அப்படி இருக்க, எப்படி தேசிய ஆலோசனைச் சபையில் உடன்பாடு காண முடியும்? தேசிய ஆலோசனைச்சபை என்பது காலத்தை இழுத்தடிப்பதற்கான மற்றொரு தந்திரமே.

இரா.புத்திரசிகாமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்தமுள்ள அனர்த்தங்கள்...

நள்ளிரவு பன்னிரண்டு மணி ஆகியும் தூக்கம் வராமல் புரண்டு, புரண்டு படுத்த நந்தினி கண்களைத் திறவாமல் கால்களை அருகிலே படுத்திருந்த கணவன் மீது போட்டவாறு, அந்த இக்கட்டான அவலம் தோய்ந்த நாட்களை நினைத்து சிந்தனையை ஓடவிட்டாள்.

இனிமை என்னும் பக்கங்களுக்குப் பதிலாக சோகம், துயரம், அவலம் என்பவையே அவள் உள்ளத்தில் படர்ந்து கிடந்தன. வாழ்வில் ஒரு வசந்தம் வீசாதா? என்று எண்ணாத நாட்கள் குறைவு. பசி, பட்டினி, வறுமை எல்லாம் அவள் வயிற்றுக்குத் தோழர்கள்.

நான்கு பெண்களில் மூத்தவள்தான் நந்தினி. நந்தினிக்குப் பதின்நான்கு வயதாய் இருக்கும் பொழுதே மாங்குளம் சந்தியில் இடம் பெற்ற விமானக் குண்டுத் தாக்குதலில் தந்தையைப் பலி கொடுத்தாள். தாய் பாக்கியம் பிட்டு அவித்து விற்றுத்தான் பிள்ளைகளை வளர்த்து வந்தாள். கணவன் இறந்த சோகத்தால் பக்கவாத நோயால் பீடிக்கப்பட்டு சிறிது நாளில் பாக்கியமும் உலகை விட்டுப்பிரிந்தாள்.

விண்ணில் மேகங்கள் மோதுவதற்குப் பதிலாக குண்டுகள் மோதிக்கொண்டிருந்த காலம் அது. எங்கு பார்த்தாலும் இடி ஓசை. சீறிக்கொண்டெழும் வேட்டுச் சத்தங்கள். செல் விழுந்து சிதறிய வீடுகள். பற்றைக்காடுகளுள் இறந்து கிடக்கும் கால்நடைகளின் துர்நாற்றம். நிரந்தரம் இல்லாத வாழ்க்கை. இத்தனைக்கும் மத்தியில் இந்தப் பெண் சகோதரிகளை பருவ வயது வரைக்கும் எப்படிப் பாதுகாப்பது? என்னிடம் குடும்பப் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு மறைந்துவிட்டீர்களே?

அம்மாவின் தொழிலையே தானும் செய்து மூன்று சகோதரிகளையும் பருவ வயது வரைக்கும் வளர்த்துவிட்டாள். இளமையில் ஒரு பெண் எவ்வாறு பொலிவு பெற்றிருப்பாளோ அந்தப் பொலிவையும், செழிப்பையும் இவள் இழந்து வெகுநாட்களாகிவிட்டன.

தூரத்துச் சொந்தம் ஒன்றின் தொடர்பால் இரண்டாவது தங்கைக்கு வரன் ஒன்று வந்தது. மாப்பிள்ளை நல்லவர். ஆசிரியத் தொழில் செய்பவர். மணம் முடித்துவைத்தாள். மூன்று நாட்கள் தங்கிவிட்டு மாப்பிள்ளையின் இடமான கிழக்கு மாகாணத்துக்கே தங்கை சென்றுவிட்டாள். சின்ன வயதிலிருந்தே ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியாத பாசமுள்ள சகோதரிகளாக இருந்தமையினால், அவள் பிரிந்து செல்லும் பொழுது ஏற்பட்ட சோகமும், துக்கமும் அவளை வெகுவாய்ப் பாதித்தன.

பசி, பட்டினி அவர்களை வாட்டி எடுத்த போது குறுணல் சோற்றையும், குறிஞ்சாச்சுண்டலையும் பிரட்டி கவளம் பிடித்துச் சாப்பிட்டு அரை வயிற்றை நிரப்பிய காலங்கள் ஏராளம். நிலா ஒளியை விளக்காக்கி வாழ்ந்த காலங்கள் அதிகம்.

ஒரு நாள் வெள்ளிக்கிழமை மாலை நான்கு மணியிருக்கும். நல்லதம்பி மாமா நந்தினியின் வீட்டுக்கு வந்தார். நந்தினியின் அம்மாவின் ஒன்றுவிட்ட அண்ணன்.

''நந்தினி உனக்கு ஒரு நல்ல இடத்து சம்பந்தம் கிடைச்சிருக்கு... பொடியன் லண்டன் சிட்டிசன். என் மனைவியின் உறவுக்காரன். ஒரு மாத லீவில் வந்திருக்கிறான். போகும்போதே பெண்ணையும் கையோடு கூட்டிக்கொண்டு போகலாம் என்கிறான். நீ என்ன சொல்றாய்? பெண் பார்க்க வரச்சொல்லட்டா?'' என வினாவினார் சுந்தரம்.

உச்ச நரம்புகள் அத்தனையும் ஊடுருவிப்பாயும் சந்தோஷம் அவளை ஆட்கொண்டது. உலக உருண்டையே தொண்டைக்குள் வந்து அடைத்துவிட்டாற்போல ஒரு பிரமை தோன்றியது. மௌனத்தை மொழியாக்கி சம்மதம் கூறினாள்.

ஒரு திங்கட்கிழமை பெண் பார்க்க மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் வந்தார்கள். கல்யாணக் கனவுகளோடு ஆயிரம் ஆயிரம் கற்பனைகளை சுமந்துகொண்டு நின்றிருந்தாள் நந்தினி. அவளை ஏறெடுத்துப் பார்த்த மாப்பிள்ளை ஏனோ தெரியவில்லை, அருகே நின்றிருந்த கடைக்குட்டி மீது பார்வையைச் செலுத்தினார். சற்று நேரத்தில் அருகே அமர்ந்திருந்த நல்லதம்பி மாமாவின் காதில் மாப்பிள்ளை ஏதோ சொன்னார். மாமாவின் முகம் வாடியது. மாமா தயங்கித் தயங்கி விஷயத்தைச் சொன்னபோது தான் உண்மை புரிந்தது.

மாப்பிள்ளைக்கு கடைக்குட்டியைப் பிடித்திருப்பதாகவும், முடிந்தால் அவளைத் திருமணம் செய்துவைக்குமாறும் சொல்லியிருந்தார்.

உடலழகு, தோலழகு, எடையழகு என்று நாகரீக மோகம் வேரூன்றியிருக்கும் இக்காலகட்டத்தில், தன்னைப்போன்ற பெண்களின் சராசரி ஆசைகள் நிராகரிக்கப்படுவதில் தவறில்லை என்பதை நந்தினி உணர்ந்தாள். வேதனையின் வெப்பத்தால் அவளிடம் இருந்து பெருமூச்சு வெளியேறிக்கொண்டிருந்தது.

வேறு வழியின்றித் தன் தங்கையான கடைக்குட்டியை கல்யாணம் பண்ணிக் கொடுத்தாள். கடைக்குட்டி லண்டன் போகப்போகிறாளே என்று நினைக்கையில் அவளுக்குள்ளே இருந்த கனவு மேகங்கள் கலைந்து கனிவு பிறந்தது. இருவருக்கும் பதிவுத்திருமணம் செய்து வைத்தாள்.

தன் இரு தங்கைகளுக்கு நல்லபடியாக திருமணம் நடந்தாலும், மூன்றாவது தங்கையான பானுவை நினைக்கத்தான் அவள் மனம் இறுகி விழியில் நீர் சுரந்தன.

பானு அழகானவள். அறிவானவள். துறுதுறுப்பானவள். இன்று அவள் ஒரு சிறகொடிந்த பறவை. அவளுக்கா இறைவா இப்படி ஒரு நிலைமை? அவள் மனம் கலங்கிக்கொண்டிருந்தது.

பானுவுக்கு பத்து வயதாய் இருக்கும் பொழுது இராணுவத்தினரின் வருகையினால் மாங்குளத்தில் இருந்து கிளிநொச்சிக்கு அகதிகளாக ஓடிய அவ்வேளையில், அவசரத்தில் பானு பாதையை விட்டு விலகி ஓடும் போது அவளின் வலது கால் பொறி வெடியில் சிக்கியது. அந்தப் பத்து வயது பிஞ்சு உள்ளம் முகம் குப்புற விழுந்து ஓ...வெனக் கத்தி அலறியது இன்னும் நந்தினியின் கண்முன்னாலேயே நிற்கிறது.

உலகமே புரியாத வயதில் ஊன்றுகோலுடன் நடைப்பிணமான பானுவின் எதிர்காலம் குறித்து நந்தினி கலங்காத நாட்களில்லை. கால் இல்லாத அவளை திருமணம் செய்ய யாரும் முன்வருவார்களா? இல்லாவிட்டால் அவள் வாழ்க்கை சூனியமாகிவிடுமா? ஏங்கித் தவித்துக் கொண்டிருந்த அவளுக்கு இன்ப அதிர்ச்சி ஒன்று காத்திருந்தது.

வன் செயலினால் கால்களை இழந்த பொதுமக்களுக்கு வெளிநாட்டு நிறுவனம் ஒன்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் செயற்கைக் கால்களை வழங்குவதற்கு விபரங்களை மாங்குளத்தில் திரட்டிக் கொண்டிருந்தனர். அதில், பதிவு செய்து விட்ட அவளுக்கு ஒரு நிம்மதிப் பெருமூச்சு... இனி என் பானு ஊன்றுகோல் இன்றி நடக்கும் நாட்கள் வெகு தூரமில்லை.

நிமிடத்திற்கு நிமிடம் மனதை வாட்டி எடுக்கும் மரண பயத்தோடு இருக்கும் பொழுதுதான், அந்தக் கடிதம் ஐ.சி.ஆர்.சி. பிரதிநிதி ஒருவர் மூலம் கிடைத்தது அவளுக்கு.

அது அவள் கடைக்குட்டி லண்டனில் இருந்து எழுதிய கடிதம்.

அக்கா! நாங்கள் இருவரும் இங்கு நலமாக இருக்கிறோம். உங்களைப் பார்க்காத குறையைத் தவிர வேறெதுவும் எனக்கில்லை. மட்டக்களப்பில் சின்னக்கா நலமாக இருக்கிறாரா?

அக்கா முக்கியமான விடயம் என்னவென்றால் உனக்கு லண்டனில் மாப்பிள்ளை பார்த்திருக்கிறோம். அவரின் பெயர் அஜித். என் கணவரோடு பொம்மைகள் பொதி செய்யும் நிறுவனமொன்றில் வேலை செய்கிறார். நல்ல குணம் உடையவர். குடி வெறி எதுவுமே கிடையாது. உன்னுடைய போட்டோவைக் காட்டினேன். பிடித்திருக்கிறது என்று சொன்னார். நம் குடும்ப நிலைமைகளையும் விபரமாய் அவரிடம் எடுத்துச் சொன்னேன். அவரும் ஒரு காலத்தில் வறுமையில் வாடியவர் என்பதை சொல்லாமல் சொன்னார். உன் குணத்திற்கு ஏற்றவர் என்பதை நான் புரிந்து கொண்டேன். அவர் உன்னை மனதாரப் பிடித்திருப்பதாகச் சொல்லி திருமணத்திற்கு நாள் குறிக்கும்படியும் சொல்லிவிட்டார்.

அக்கா! வழமையாகச் சொல்வதுபோல் இதையும் வேண்டாமெனச் சொல்லாமல், யோசித்து ஒரு நல்ல முடிவை எடுக்கவும். அத்துடன் அவரின் கொழும்பு உறவினர் ஒருவரின் விலாசத்தையும் தந்திருக்கிறார். உன்னையும் பானுவையும் அங்கு போய் இருக்கும்படி சொல்லச் சொன்னார். கொழும்பு வீட்டு தொலைபேசி இலக்கத்தையும் என்னிடம் தந்திருக்கிறார். எனவே, அக்கா! யோசிக்காமல் யாரையாவது பிடித்துக் கொழும்பில் உள்ள அவ்வீட்டிற்குச் செல்லவும். மிகுதியை போனில் கதைக்கிறேன். இப்படிக்கு பாசமிகு தந்தை மேரூஜா என எழுதப்பட்டிருந்தது.

வாசித்து முடித்ததும் அவள் கண்களைக் கண்ணீர் சூழ்ந்துகொண்டது. ஏக்கப்பெருமூச்சை உள்ளிழுத்த அவள் மனதில் இருந்த மரண பயம் சற்றுத்தணிந்து, மனசுக்குள் ஏதோ ஒரு சந்தோஷக்காற்று வீச ஆரம்பித்தது போல் இருந்தது. தெரிந்த ஐ.சி.ஆர்.சி நண்பனின் உதவியுடன் அவர்களின் வாகனத்திலேயே கொழும்புக்குப்புறப்பட்டுச் சென்று குறித்த விலாசமுடைய வீட்டை அடைந்தாள். அங்கு சொல்லி வைத்தாற்போல் இவர்களை இன்முகத்தோடு வரவேற்று உபசரித்தனர். வீட்டின் ஒரு அறையை இவர்களுக்காக ஒதுக்கிக் கொடுத்தனர்.

நடக்கும் மாதம் ஆவணி மாதமாக இருந்தமையினால் கல்யாண நாள் எடுப்பதற்கு அவர்களுக்கு இலகுவாக இருந்தது. லண்டனிலிருந்து மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான முயற்சியினால் பயணத்திகதியும் குறிக்கப்பட்டுவிட்டது.

மட்டக்களப்பில உள்ள தங்கை குடும்பத்தாரும், பானுவும் வழியனுப்ப விமான நிலையம் வரை வந்தனர்.

தங்கைமார்களிடம் இருந்து விடைபெற்றுக் கொண்டு கண்ணாடி அறைக்குள் நுழைந்தாள் நந்தினி.

கண்களில் இருந்து கண்ணீர் பெருக... தனது வலது கையைத் தூக்கி டாட்டா காட்டிவிட்டு இறுகிய முகத்தோடும், கனத்த நெஞ்சோடும் நடந்து சென்று விமானத்தில் ஏறி, தனது 28ஆம் இலக்க ஆசனத்தில் அமர்ந்து கொண்டாள்.

பதினொரு மணி நேர பறப்பின் மூலம் விமானம் லண்டன் ஹீத்ரு விமான நிலையத்தை வந்தடைந்தது. அங்கு தங்கையும், கணவரும் இவளது வருகைக்காக காத்திருந்தனர். இவர்களுடன் அஜித்தும் வந்திருந்தார். அஜித் அவளைப் பார்த்து ஹலோ என்றார். பதிலுக்கு அவளும் புன்னகைத்து தலையசைத்தாள்.

ஊர்ப்புதினங்கள், அழிவுகள் பற்றியெல்லாம் விலாவாரியாகக் கேட்டறிந்துகொண்டனர்.

குறித்த தினத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு மண்டபத்தில் அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து திருமணம் நடந்தது.

நண்பர்களின் வீடுகள், கிளப்புகள், பீச்சுகள், பார்க்குகள் என்று கணவருடன் சுற்றித்திரிந்ததில் மூன்று மாதங்கள் சென்றதே நந்தினிக்குத் தெரியவில்லை. வழமை போல் கொழும்பில் இருக்கும் தங்கை பானுவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டாள் நந்தினி.

அன்று ஏஜென்ஸ் மூலம் அவளை லண்டனுக்கு எடுப்பதைப்பற்றிக் கதைக்க நினைத்தாள் நந்தினி. ஆனால், அவள் வாய்க்குப் பூட்டுப்போட்டுவிட்ட மாதிரி ஒரு விடயம் சொன்னாள்.

அக்கா கொழும்பு வீட்டு மாமாவின் மகன் இளங்கோவன் என்னை விரும்புவதாகக் கூறினார். நானும் வேறு வழியின்றி விரும்பிவிட்டேன். அவர் நல்லவர் அக்கா என்றாள்.

இதனைக் கேட்டதும் அவளின் அடிவயிற்றிலிருந்தே ஒரு தாய்மை உணர்வு பிறந்தது. சந்தோஷத்தால் விக்கித்துப்போனாள். என் பானு குடும்பப் பெண்ணாகப் போகிறாளே என்ற சந்தோஷம் உடலெங்கும் பரவியது. தன் சம்மதத்தைத் தெரிவித்து, திருமணச் செலவுக்குப் பணம் அனுப்புவதாகக் கூறினாள்.

பதின்நான்கு வயதிலேயே குடும்பப் பழுவைத் தலையில் சுமந்து, யுத்தமும், அதன் அனர்த்தங்களும் மனதை அழுத்த.. ஒரு நிரந்தரம் இல்லாத வாழ்க்கையில், நிம்மதி இழந்து பல உளவியல் உளைச்சல்களுக்கு ஆளாகி அகதிகளாக அங்கும், இங்கும் இந்த வாழ்க்கை நிலைக்குமா? என நீறுபூத்த நெருப்பாய் உள்ளத்தில் பொங்கி எழும் உணர்வுகளுக்கு விடை தேடிக்கொண்டிருந்த அந்த நாட்கள் நந்தினியின் மனதில் மறக்க முடியாத பதிவுகளே.'' பொங்கி எழும் பாலை ஒரு துளி நீர் தெளித்து அடக்கி விடுவது போல் அவள் உள்ளத்தில் எழுந்த கொந்தளிப்புகளை ஆசுவாசப்படுத்திக்கொண்டிருந்தாள்''

ஐரோப்பிய நாடுகளில் வசிக்கும் எம் நாட்டு ஆண்களுக்கு வடக்கு– கிழக்கில் இருந்து அழகான பெண்களைத் தெரிவு செய்து அனுப்பிக்கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில், வேண்டாப் பொருளாய் இருந்த அவளை, நேரில் முகத்தைக்கூடப் பாராமல் நிழற்படத்தைப் பார்த்தே திருமணம் செய்து கொண்ட அவள் கணவனின் மனநிலையை நினைக்கையில் அவளுக்கு மெய் சிலிர்த்தது. கள்ளம், கபடமற்ற அந்த உயர்ந்த உள்ளத்துக்கு காலமெல்லாம் சேவை செய்வதே தலையாய பணி என நினைத்துக் கொண்டாள். அவள் உள்ளத்தில் உறங்கிக்கிடந்த அர்த்தமுள்ள அனர்த்தங்கள் வெளிப்பட்டுக் கொண்டிருந்த வேளை இரு விழிகளாலும் வழிந்துகொண்டிருந்தது நீர்.

– எஸ்.சிவம் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாராஷ்டிரா தேர்தல் காங்கிரஸுக்கு சவால்

கடந்த மே மாதம் நடந்த லோக்சபாத் தேர்தலுக்குப்பின்பு முதன் முறையாக இந்தியாவின் மாநில சட்டமன்றம் ஒன்றுக்கான தேர்தல் அக்டோபர்13ம் திகதி நடை பெற்றவுள்ளது.

மகாராஷ்டிர மாநிலமே அது. நாட்டின் முக்கிய வியாபார மையமான மும்பை நகரை தலை நகராகக் கொண்டது மகாராஷ்டிரா மாநிலம். அங்கு காங்கிரஸ்—தேசியவாதக் காங்கிரஸ் கட்சிகளின் கூட்டணி பதவியில் உள்ளது. எதிர்க்கட்சியான பி.ஜே.பி —சிவசேனைக் கூட்டணி தேர்தலில் வெற்றி பெறுவதற்கான சகல உபாயங்களையும் முடுக்கி விட்டுள்ளது.

கடந்த மாதம் சிறைவைக்கப்பட்ட பி.ஜே.பியின் முன்னாள் மத்தியப் பிரதேச முதல்வர் உமாபாரதியை முன்னிறுத்தி பெரும் தெருவோரப் பேரணியை பி.ஜே.பி நடத்தி வருகின்

மன்மோகன் சிங்

றது.1994இல் கர்நாடகாவில் ஊரடங்குச்சட்டத்தை மீறி முஸ்லிம்களும்,இந்துக்களும் உரிமைகோரும் ஒரு மைதானம் நோக்கி பேரணிநடத்தி மதக்கலவரத்தைத் தூண்டினர் என உமா பாரதி குற்றம் சுமத்தப்பட்டார்.

காவிஉடை தரித்த சன்னியாசியாகி நெருப்புப் பொறி பறப்பதுபோல் மதவெறி உரைகளை நிகழ்த்துவதில் உமாபாரதி பேர் பெற்றவர். அயோத்தியில் பாபர்மசூதியை உடைப்பதில் முன்னின்றவர். கர்நாடகா அரசு அவர் மீதான வழக்குகளைத் தீவிரமாக முன் னெடுக்காததால் கடந்த மாதம் வரை அவர் மத்திய பிரதேச முதல்வராக இருந்தார்.

எனினும் மத்திய அரசில் குற்றவாளிகள் அமைச்சராக இருப்பதாக பி.ஜே.பி நெருக்குதல் கொடுத்ததிலிருந்து பி.ஜே.பிக்கு ஒரு பாடம் படிப்பிக்கும் நோக்கில் கர்நாடகாவின் காங்கிரஸ் அரசுஉமாபாரதி மீதான 1994ஆம் ஆண்டு வழக்கை புதுப்பித்து அவரைக் கைது செய்ய நீதி மன்றிடம் அனுமதி கோரியது. உமாபாரதி மீது ஜாமீனில் வெளிவர முடியாத கைது உத்தரவு பிறப்பிக்கப்பட்டதை அடுத்து, அவர் முதல்வர் பதவியை ராஜினாமாச் செய்ய நேரிட்டது.

எனினும் சர்ச்சைக்குரிய மைதானத்தில் தேசியக் கொடியை ஏற்றவே தான் சென்றதாக உமா பாரதி பெரும் வாதப் பிரதிவாதத்தைக் கிளப்பகர்நாடகா அரசு, அவர் மீதான வழக்குகளை வாபஸ் பெற்று கடந்த வாரம் அவர் விடுவிக்கப்பட்டார்.

இப்போது உமாபாரதி கர்நாடகாவிலிருந்து மகாராஷ்டிராவரை பெரும் தெருவோரப் பேரணியை நடத்தி வருகின்றார். பெரும் திரளான பி.ஜே.பி ஆதரவாளர்கள் அதில் சேர்ந்து கொண்டுள்ளனர். மகாராஷ்டிரா மாநிலத் தேர்தலில் காங்கிரசைத் தோற்கடிக்க இந்தப் பேரணியை பயன் படுத்த பி.ஜே.பி முடிவு செய்துள்ளது . மதரீதியான கலவரங்களுக்குப் பேர் பெற்ற மகாராஷ்டிராவில் பி.ஜே.பியின் செல்வாக்கை இது அதிகரிக்கவும் கூடும். தவிரவும் 5வருடங்கள் ஆட்சியிலிருந்த மாநில காங்கிரஸ் கூட்டணி அரசு மீது மக்கள் அதிருப்தியும் உண்டு. இவற்றால் காங்கிரஸ் கூட்டணி மகாராஷ்டிரா மாநில ஆட்சியை இழக்க நேரிடலாம் .

வழமையாக மத்தியில் புதிய அரசு ஒன்று அமைந்தால் அதனை அடுத்து வரும் மாநிலத் தேர்தல்களில் மத்தியில் பதவியிலுள்ள கட்சியே வெல்வது வழமை. இம்முறை அது நடக்காது போகலாம்.

குறிப்பாக மன் மோகன் சிங்பதவி யேற்ற கெட்டகாலமோ என்னவோ, உலகசந்தையில் பெற்றோலிய விலை அதிகரிப்பால் இந்தியாவின் பணவீக்கம் கடந்த ஆறு ஆண்டுகளில் இல்லாத அளவு உச்சத்தைத் தொட்டுள்ளது.இதுவே மத்திய காங்கிரஸ் கூட்டணிக்கு பாதகமான அம்சமாகும்.

இவற்றைக்கவனத்தில் கொண்டோ என்னவோ மகாராஷ்டிராவில் காங்கிரஷின் கூட்டணியான சரத் பவார் மாநிலத்தை இரண்டாகப் பிரிக்கும் முடிவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார். மகாராஷ்டிராவின் இரண்டாவது பெரிய நகரான நாக்பூரை தலை நகராகக் கொண்டு விதர்ப்ப என்ற மாநிலம் அமைவதற்கு கால் கோள் இடப் பட்டு வருகின்றது.

விதர்ப்ப மாநிலக் கோரிக்கை நெடுங் காலமாக அப்பிரதேச காங்கிரஷ் தலைவர்களாலேயே விடுக்கப்பட்டு வந்த ஒன்றாகும். நேரு இந்திரா ராஜீவ் காலத்தில் இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு இருந்திராத அச்சுறுத்தல் 1990 களின் பின் இருந்து வரு

பக்கத்து வீடு

கின்றது.

இதனை சமாளிக்கும் ஒரு பிரதான உத்தி பென்னம்பெரிய மாநிலங்களை உடைத்து புதிய மாநிலங்களை உருவாக்குவதாகும் .

சமீபத்தில் லோக்சபாத் தேர்தலில் ஆந்திராவைப் பிரித்து தெலுங்கானாவை தனி மாநிலமாக புதிதாக உடைக்க காங்கிரஷ் இணங்கியது. இப்போது அதற்கான நடவடிக்கைகள் மத்திய அரசால் எடுக்கப் பட்டு வருகின்றன.

அந்நிலையில் இந்தியாவில் இப்போது இரண்டாவது பெரிய மாநிலமாக இருக்கும் மகாராஷ்டிராவும் உண்டாக்கப் படப் போகின்றது. தெலுங்கானா உண்டாகினால் ஆந்திராவைக் கலக்கும் நகசலைட் தீவிரவாதம் வலுவிழந்து போகலாம். இது இந்திய அரசியல் வாதிகளின் அதிகாரப் பரவலாக்கல் மனப்பான்மைக்கு எடுத்துக்காட்டு.

மாநிலங்களைப் பென்னம் பெரியதாக வைத்துக் கொண்டிராமல் சிறுசிறு பிராந்தியங்களாக அந்தப் பிராந்திய மக்களின் அபிலாசைகளுக்கு மதிப்பளிக்கும் விதத்தில் உருவாக்குவது பிரிவினை வாதத்துக்கு ஆப்பு வைக்கும் ஒரு உத்தியாகும்.1998இல் உத்தரப் பிரதேஷை உடைத்து உத்திராஞ்சல் பீகாரிலிருந்து ஜார்கண்ட் உமாபாரதி மத்தியப் பிரதேஷிலிருந்து சத்தீஷ்கர் என மாநிலங்கள் வாஜ்பாய்அரசால்உண்டாக்கப் பட்டன.

இப்போது காங்கிரஸ் தெலுங்கானா, விதர்ப்பா என்ற மாநிலங்களை உண்டாக்கப்போகிறது. அண்டை நாடானஇலங்கையில் சமஷ்டி ஆட்சி என்றாலே முழியைப் பிரட்டும் சிங்கள அரசுகளுக்கு இந்தியாவின் இந்த புதிய மாநில உருவாக்கங்கள் சிறந்த பாடம் ஆகும்.

இதற்கிடையில், இந்திய மத்திய அரசு, நீண்டகாலம் திட்டமாக இருந்தசேது சமுத்திர திட்டத்துக்கும் உருக்கொடுக்க முன்வந்துள்ளது.

தமிழக அரசியல்வாதிகளின் நெடுநாள் கனவான சேது சமுத்திரம் யாழ் குடாநாட்டின் நீர்ச் சமநிலையை பாதிக்கும் என இலங்கையின் சூழலியல் நிபுணர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இந்தியாவின் கிழக்குக் கரையிலிருந்து மேற்குக் கரைக்குப் பயணம் செய்வதற்கு இலங்கையை சுற்றிச் செல்லும் நிலையைத் தவிர்த்து பாக்கு நீரிணை ஊடான கடல் வழியை உண்டாக்கும் சேது சமுத்திரம் திட்



உமாபாரதி

டம் தூத்துக்குடி துறைமுகத்தின் முக்கியத்துவத்தை பெரிதும் அதிகரிக்கும்.

திட்டம் முழு வீச்சில்தயாராகிவரும் இந்த நிலையில்தமிழகத்தின் கட்சிகள் போட்டி போட்டக்கொண்டு இதற்கு உரிமை கோரிவருகின்றன. காங்கிரஸ் அரசை நிர்ப்பந்தித்தது தாமே என தி.மு.க, பா.ம.க, ம.தி.மு.க என்பன தனித்தனியாகவும், அ.தி.மு.க.வே இத்திட்டத்தை காலம் காலமாக பரிந்துரைத்து வந்தது என ஜெயலலிதாவும் கூறிவருகின்றனர்.

-எஸ். சுரேந்திரஜித்-

சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

நேரம்	திங்கள்	செவ்வாய்	புதன்	வியாழன்	வெள்ளி	சனி	ஞாயிறு
6.30	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா		
6.59	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	நிகழ்ச்சி ஆரம்பம்	நிகழ்ச்சி ஆரம்பம்
7.00	எம்.டி.வி நிகழ்ச்சி	எம்.டி.வி நிகழ்ச்சி	எம்.டி.வி நிகழ்ச்சி	எம்.டி.வி நிகழ்ச்சி	எம்.டி.வி நிகழ்ச்சி	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா
7.05	எம்.டி.வி நிகழ்ச்சி	எம்.டி.வி நிகழ்ச்சி	எம்.டி.வி நிகழ்ச்சி	எம்.டி.வி நிகழ்ச்சி	எம்.டி.வி நிகழ்ச்சி	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங்ஸ்ரீலங்கா
7.30	எம்.டி.வி நிகழ்ச்சி	எம்.டி.வி நிகழ்ச்சி	எம்.டி.வி நிகழ்ச்சி	எம்.டி.வி நிகழ்ச்சி	எம்.டி.வி நிகழ்ச்சி	சங்கீதமேடை 7.55 அன்பு மடல்	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா 7.55 அன்பு மடல்
8.00	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்டி சுட்டி	ஒருகதையின் கதை
8.30	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்மோர்னிங் ஸ்ரீலங்கா	குட்டி சுட்டி	சிறுவர் நிகழ்ச்சி
9.00	கோலங்கள்	கோலங்கள்	கோலங்கள்	கோலங்கள்	கோலங்கள்	ஹோலிவூட் மூவி	அரட்டை அரங்கம்
9.30	கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55	கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55	கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55	கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55	கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55	குட்டி சுட்டி	ஞாயிறு சமையல்
10.00	பெப்சி உங்கள் சொய்ஸ்	தில்லானா தில்லானா	பாட்டுக்குப்பாட்டு	நம்ம நேரம்	கொண்டாட்டம்	ரீபீஏ	சப்தஸ்வரங்கள்
10.30	நெஞ்சில் நின்ற ராகங்கள்	சுகமான ராகங்கள்	ஆடலும் பாடலும்	இனிய கானங்கள்	இசைத் தென்றல்	ரீபீஏ	டாப்10 மூவிஸ்
11.00	மெட்டி ஒலி	மெட்டி ஒலி	மெட்டி ஒலி	மெட்டி ஒலி	மெட்டி ஒலி	இப்படிக்கு நீங்கள்	கோல்டன் மூமன்ஸ் ஒப் கிரிகெட்
11.30	ஆனந்தம்	ஆனந்தம்	ஆனந்தம்	ஆனந்தம்	ஆனந்தம்	சினி சொய்ஸ்	சின்ன சின்ன ஆசைகள்
12.00	நட்சத்திரம்	திரை வானம்	சண்டே சமையல்	மங்கை	மங்கை	ரிலாக்ஸ் டைம்	சின்ன சின்ன ஆசைகள்
12.30	செய்திகள்(எம்.ரீ வி)	செய்திகள்(எம்.ரீ.வி)	செய்திகள்(எம்.ரீ.வி)	செய்திகள்(எம்.ரீ வி)	செய்திகள்(எம்.ரீ.வி)	ரிலாக்ஸ் டைம்	ஸ்டார் ஸ்பெஷல்
1.00	மதிய செய்திகள்	மதிய செய்திகள்	மதிய செய்திகள்	மதிய செய்திகள்	மதிய செய்திகள்	வீக் என்ட் மேட்னி	வீக் என்ட் மேடனி
1.30	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	வீக் என்ட் மேட்னி	வீக் என்ட் மேட்னி
2.00	(றொமான்ஸ்)	(அக்சன்)	(கொமடி)	(கிளசிக்)	(பமிலி)	வீக் என்ட் மேட்னி	வீக் என்ட் மேட்னி
2.30	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	வீக் என்ட் மேட்னி	வீக் என்ட் மேட்னி
3.00	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	வீக் என்ட் மேட்னி	வீக் என்ட் மேட்னி
3.30	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	சக்தி மேட்னி	சக்தி மேடனி	சக்தி மேட்னி	வீக் என்ட் மேடனி	வீக் என்ட் மேட்னி
4.00	டிஸ்னி வேல்ட்	டிஸ்னி வேல்ட்	ஒரு கதையின் கதை	கில்லி	கில்லி	விக்கிரமாதித்தன்	ஜீ பூம்பா
4.30	கார்ட்டூன் நிகழ்ச்சி	கி—மேன்	தமிழ் கார்ட்டூன்	தமிழ் கார்ட்டூன்	மலரும் மொட்டும்	விக்கிரமாதித்தன் அன்பு மடல் 4.55	ஓப்போடு
5.00	கொண்டாட்டம்	சினி சொய்ஸ்	ஸ்டார் ஸ்பெஷல்	சுப்பர் சீன்ஸ்	என்றும் கலாட்டா	மிஸ்டர்.பீன்	"24" அக்ஷன் நாடகம்
5.30	இசைத்தென்றல்	இசைத்தென்றல்	இசைத்தென்றல்	இசைத்தென்றல்	இசைத்தென்றல்	ஸ்டாருடன் ஒரு நாள்	"24" அக்ஷன் நாடகம்
6.00	களம்	இளைய கானம்	ஓப்போடு	பாடல்கள்/இளந்தளிர் 6.15	கோல்டன் மொமன்ஸ் ஒப் கிரிக்கட்	ஸ்டாருடன் ஒரு நாள்	மின்னல் 5.55 அன்பு மடல்
6.30	மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55	மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55	மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55	மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55	மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55	திமி தக்க தா	மின்னல்
7.00	காவ்யாஞ்சலி	காவ்யாஞ்சலி	காவ்யாஞ்சலி	காவ்யாஞ்சலி	காவ்யாஞ்சலி	அலைய்ஸ்	வேலன்
7.30	நீ நான் அவள்	நீ நான் அவள்	நீ நான் அவள்	நீ நான் அவள்	நீ நான் அவள்	அலைய்ஸ்	வேலன்
8.00	சக்தி செய்திகள்	சக்தி செய்திகள்	சக்தி செய்திகள்	சக்தி செய்திகள்	சக்தி செய்திகள்	சக்தி செய்திகள்	சக்தி செய்திகள்
8.30	அண்ணாமலை	அண்ணாமலை	அண்ணாமலை	அண்ணாமலை	அண்ணாமலை	ருத்ர வீணை	இளைய கானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்தன் பதில்கள்

எஸ். வீரக்குட்டி—ஜீவா—தாண்டியடி.

கேள்வி:— பித்தா! ஒரு ஆடவன் ஒரு பெண்ணிடம் தன் விருப்பத்தினை சொல்ல ஏன் தயங்குகிறான்?

பதில்:— பெண்கள் காலில் செருப்பு அணிவதனால்.

சொ. திருச்செல்வம்
பதுளை தமிழ் வித்தியாலயம்

கேள்வி:— இலஞ்சம் வாங்கும் அரச ஊழியர்கள் பற்றி உமது கருத்து என்ன?

பதில்:— அலைச்சல் இல்லாமல் அல்லது அரச நடைமுறைகளுக்கு ஒவ்வாமல் — அவசரமாக தங்கள் வேலையை முடித்துக் கொள்வதற்காக சிலர் கொடுப்பதும் சிலர் வாங்குவதும் தான் இலஞ்சம். இதனை அரச ஊழியர்கள் என்ற மட்டத்துடன் அடக்கி விடாதீர்கள். இப்போது அமைச்சர்கள் அதற்கு மேல் உள்ளவர்கள் எல்லாம் அடித்துப்பிடித்து வாங்குவதுதான் இலஞ்சம். அதிலும் முன்னைய காலங்களில் தான் அதற்குப் பெயர் இலஞ்சம். இப்போ இது செய்து தந்த உதவிக்கு சந்தோஷமாக கொடுப்பது என்ற கௌரவப் பெயரிலேயே வழங்கப்படுகிறது. இது அங்கு இங்கு என எங்கும் நிறைந்திருப்பதால் தான் அதனைப் பற்றி கருத்துக் கூற முடியாதுள்ளது.

சி. ஜசிகரன் — புளியங்குளம்.

கேள்வி:— வணக்கம்! ஒரு பெண்ணைக் காதலித்துக் கதைக்கும் போது ஒருவர் முதன் முதலில் கேட்கும் கேள்வி நீங்கள் என்னை ஏமாற்றி விடமாட்டீர்களே என்பதே. ஏன் இப்படிக் கேட்கிறார்கள் பித்தா?

பதில்:— இதற்கு முன்னர் பல பேருடன் கதைத்து அவர்கள் எல்லாம் ஏமாற்றியிருப்பார்கள் போலும். அதனால்தான் கேட்கிறார் போலும்.

எஸ். மோகனதாஸ்— முறிகண்டி.

கேள்வி:— அன்புடன் பித்துக்கு, முக்கால் வாசி வணக்கம். ஏன் சார் எல்லாத் தொழிலுக்கும் முன் அனுபவம் கேட்கிறார்கள்? திருமணத்துக்கு மட்டும் முன் அனுபவம் கேட்பதில்லையே ஏன்?

பதில்:— ஐயா.. ராசா.. சாமி.. தொழில் என்பது ஒருவருடைய வாழ்க்கையில் முன்னேற்றத்தை, சுதந்திரத்தை, வருமானத்தை எல்லாம் பெற்றுத் தருவது. இவ்வாறான வசதிகளை எல்லாம் உங்களுக்கு பெற்றுத் தரும் தொழிலை நீங்கள் சிறப்பாக செய்வீர்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காகவே முன் அனுபவம் கேட்கப்படுகிறது. தொழில் கிடைப்பது என்பது சந்தோஷமான விடயம். ஆனால், திருமணத்தின் கதையே வேறு. முன்னேற்றம், சுதந்திரம், வருமானம் எல்லாம் பறிபோய் முன் அனுபவம் என்று கேட்கப் போய் எல்லா மாப்பிள்ளைகளும், பொம்பிள்ளைகளும் முன் அனுபவம் தேடிப் போனால் அடடா திருமண வாழ்க்கையில் இவ்வளவு கஷ்டங்கள் உண்டா? அப்படி என்றால் எமக்கு இந்த திருமண வாழ்கையே வேண்டாம் என்று எஸ்கேப் ஆகி விடுவார்களே....! முதுகிலே பொதியைச் கட்டிச் சுமக்கும் வேலைக்கெல்லாம், முன் அனுபவம் கேட்டால் நியாயமா? அது சரி மோகனதாஸ்... எங்கே எனது மிகுதி கால்வாசி வணக்கம்?

ஞா. ரூபி— அம்பலப் பெருமாள் சந்தி

கேள்வி:— மை.டியர் பித்தா பெண்களிடம் சீதனம் கேட்கும் காலம் மாறி இந்த நவீன காலத்தில் ஆண்களிடம் சீதனம் கேட்கும் காலம் வந்தால் எப்படிஇருக்கும்?

பதில்:— பல ஆண்கள் முதிர் இளைஞர்களாகி — 40—50 வயது வரை திருமணம் முடிக்காமல் கண்ணீரோடு காலம் கரைக்கும் நிலை ஏற்படும். சீதனக் கொடுமை செய்ததற்காக பல மனைவியர் — கணவன் மாரால் கொலை செய்யப்படுவர்.

கே.என். குருபரன்— கருநாட்டுக்கேணி.

கேள்வி:— பித்தா! சண்டை நடக்கையில் நல்லவர்களாய் இருந்த இளம் வட்டங்கள் எல்லாம் சமாதான காலத்தில் கெட்டுப் போய்விட்டது. போல் உள்ளதே?

பதில்:— ஆம். சண்டைக் காலத்தில் கெட்டுப் போக வாய்ப்புக்கள் குறைவு. எப்போ குண்டு வெடிக்குமோ எங்கே தாக்குதல் நடக்குமோ எப்போ படைகள் கைது செய்வார்களோ என்ற பயம். ஆனால், இப்போ குளிர்விட்டுப் போய்விட்டது. எந்தப் பயமும் இல்லை. முன்னர் தென்பகுதிக்கு வந்து செல்வதென்றால் பயம். ஆனால், இப்போ அடிக்கடி தென்பகுதிக்கு விசிட். இவைகளால் இன்றைய இளவட்டம் கெட்டு குட்டிச் சுவராகி கொண்டிருக்கிறது. சில வேளைகளில் இன்றைய இளைஞர்கள் பண்ணும் தாங்க முடியாத அட்டகாசத்தை பார்க்கும் போது.... அடடா மீண்டும் எப்போ சண்டை வரும் என்ற ஆதங்கம் எழுகிறது.

இ. காந்திமதி— ஆனைவிழுந்தான்

கேள்வி:— பித்தா! நீங்கள் நல்ல ஜோக் விடுகிறீர்களே எங்கே எனக்கு ஒரு ஜோக் கூறுங்கள் பிளீஸ்?

பதில்:— ஒரு மத போதகர் மேடையில் நின்று பிரசங்கம் செய்து கொண்டிருந்தார்:—

இந்த நாட்டில் மதுவை ஒழிக்க வேண்டும். இந்த நாட்டிலே உள்ள மதுப்போத்தல்களை எல்லாம் கடலிலே தூக்கி வீசிவிட வேண்டும் என்று உணர்ச்சிகாரமாக பிரசங்கம் செய்து கொண்டிருந்தார்.

கூட்டத்திலே இருந்த மதபோதகரின் பிரசங்கத்தை கேட்டுக்கொண்டிருந்த இளைஞன் ஒருவன் உணர்ச்சி வசப்பட்டு எழுந்தான் 'ஆமாம் அதுதான் சரி அப்படியே

செய்யுங்கள்' என்று கூறினான்.

இதனைக் கேட்ட மதபோதகர் அந்த இளைஞனைப் பார்த்து ''சகோதரனே உன்னைப் பாராட்டுகிறேன் உனது துணிவை வரவேற்கிறேன். அது சரி நீ என்ன வேலை செய்கிறாய்?'' என்று கேட்டார்.

இளைஞன் ''நான் கடலிலே மூழ்கி முத்தெடுக்கிறேன்'' என்றான்.

வெ.வடிவேல்— அச்சுவேலி

கேள்வி:— பித்தா நீர் உமது மனைவியுடன் வருகிறீர் உமக்கு எதிரே ஓர் பெண் அரை

குறை ஆடையுடன் வருகிறாள் என்று வைத்துக் கொள்ளும். அவளைப் பார்த்து ரசிப்பீரா? அல்லது மனைவிக்குப் பயந்து வேறு பக்கம் பார்த்துக் கொண்டு போய் விடுவீரா?

பதில்:— வேறு பக்கம் பார்த்துக் கொண்டு கடைக்கண்ணால் அந்த அரைகுறை அழகை முழுவதுமாக ரசிப்பேன். நான் என்ன முனிவரா அல்லது சாமியாரா?

ச.முகிலின்— ஆவரங்கால்.

கேள்வி:— விஜய்யின் 'மதுர' படம் பற்றி சின்ன விமர்சனம் தாருமேன்?

பதில்:— படம் படு மசாலா. நம்பவே முடியாத கதை. முன்னர் வந்த படங்களான 'பாட்ஷா', 'தூள்' போன்றவற்றின் கலவை தமிழ் நாட்டின் ஒரு மாவட்டமான மதுரையில் உயர் பொலிஸ் அதிகாரியாக இருந்த மதுரவேல் சென்னைக்கு வந்து தலை மறைவு வாழ்க்கை வாழ்கிறார். மதுரையில் பிரபல்யமாக தினமும் அதிரடி நடவடிக்கைகளால் தொலைக்காட்சிகளிலும், பத்திரிகைகளிலும் அவலாக அமைந்த விஜய்— சென்னையில் வந்து அதே கெட்—அப்பில் காய் கறிக் கடை நடத்துகிறார். ஆனால், மக்கள் எவருமே அவரை அடையாளம் காணவில்லையாம். என்ன பம்மாத்து...? இயக்குநர் மாதேஷ் — ரசிகர்களை மண்டை கழன்ற கேஸுகள் என்று நினைத்து விட்டார் போலும். மற்றப்படி விஜயின் மச்சம். ஒரு பூசணிக்காய் நடிகையுடனும் — ஒரு தக்காளிப்பழ நடிகையுடனும் கும்மாளம் போட முடிகிறது. வழமைபோல் வடிவேலு இந்தப் படத்திலும் முகத்திலே கரியைப் பூசி —



வாயிலே புகைவிட்டு கொமடி பண்ணுகிறார். இவ்வாறு அரைத்த மாசாலாக்கள்தான் அரைக்கப்படுகிறது. படம் சக்கை போடு போடுகிறது.. வசூலில்.

எஸ்.ரி. கஜன்—வரணி

கேள்வி:— பித்தா! சிறு துளி கவர்ச்சி கூட காட்டுவது இல்லை என்று சொல்லி விட்டு ஆயுத எழுத்தில் மாதவனுடன் கவர்ச்சித் தென்றல் வீசிய மீராஜஸ்மின் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்:— ஐயா.. பணத்துக்காக நடிக்க வருபவர்கள் நடிகைகள். வரும்போது போர்த்து மூடித்தான் வருவார்கள். இரண்டு படம் படுத்தவுடன் — இனிமேல் போர்த்து மூடினால் பிழைப்புக் கெட்டுவிடும் என்று புடைவையைத் தூக்கி எறிந்து விடுவார்கள். இது திரைப்பட வரலாற்றில் வழமை. உதரணமாக நடிகை கௌசல்யாவை எடுத்துக் கொள்ளுங்கள். குடும்பப் பாங்கான நடிப்பில் பெயர் பெற்றவர். கவர்ச்சி காட்டும் அளவுக்கு அவரது உடம்பில் சதைப் பிடிப்பும் கிடையாது. அவரே அண்மையில் வெளிவந்த 'மனதில் ' என்ற படத்தில் கவர்ச்சி மழை பொழிந்திருக்கிறார். அவரே அப்படியென்றால் கொத்தும் குலையுமாக இருக்கும் மீராஜஸ்மீன் பற்றி சொல்லவும் வேண்டுமோ?

ஆர். கேதீஸ்— ஒட்டிசுட்டான்.

கேள்வி:— டியர் பித்தா! தேசிய தலைவர் பிரபாகரனை ஆஜராகுமாறு நீதிமன்ற அழைப்பானை அனுப்பியுள்ளமை பற்றி என்ன நினைக்கிறீர்?

பதில்:— பிரபாகரன் அவர்களை ஆஜராகும்படியும் — அந்த ஆணையை முன்னாள் பிரதமர் ரணிலின் வீட்டுக்கு அனுப்பும் படியும் வடிவமைக்கப்பட்ட தீர்ப்பை கேள்விப்பட்டு விழுந்து விழுந்து சிரித்தேன்.. ஆனாலும் அந்த நீதியரசருக்கு சரியான நகைச்சுவை உணர்வு இருக்கிறது.

அருணாசலம் பன்னீர்— தண்ணீருற்று.

கேள்வி:— அன்பின் பித்துக் குட்டி இருபது வயதில் இளமைக் காதல் அறுபது வயதில் அனுபவக் காதல் இது இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?

பதில்:— இருபது வயதில் வரும் காதல் உடலின் ஏற்ற இறக்கங்களைப் பார்த்து வருவது. அறுபது வயதில் வரும் காதல் வாழ்க்கையின் ஏற்ற இறக்கங்களைப் பார்த்து வருவது.

ரி.ஆர் — உடையார்கட்டு
து.ராஜ்குமார்— மொரட்டுவ.

கேள்வி:— பித்தா! உமக்கு என்னடா வாழக்கை என்று வாழ்கையை வெறுக்கும் சம்பவம் ஏதாவது நடந்துள்ளதா?

பதில்:— ஆம் ஒவ்வொரு வாரமும் நடக்கும். ஏற்கனவே பதில் அளித்துக் களைத்துப் போன கேள்விகளை நீங்கள் மீண்டும் மீண்டும் எழுதி அனுப்பும்போது வாழ்க்கை வெறுக்கும். உதாரணமாக இந்த வாரத்தில் மட்டும் தருமபுரம் — து.சுஜி, வட்டக்கச்சி — ஆர். நக்கீரன், வவுனியா— எம். நிமால், ஆலடிவேம்பு— வெ. நக்கீரன், அவிசாவளை — து. அருந்தவன் ஆகியோர் ஆண்கள் காதலில் தோற்றால் தாடி வளர்கிறார்க்ள். பெண்கள் என்ன செய்வார்கள் என்று கேட்டு தனித்தனியாக கடிதம் எழுதியிருந்தார்கள். இதேபோல் நண்பனாக பழகினேன் காதல் என்கிறார்கள், காதலித்த பெண் ஏமாற்றிவிட்டாள் என்ன செய்வது என்றெல்லாம் கேட்டு எழுதிக்கொண்டிருக்கிறார்கள். வெறுப்பாக போய்விடுகிறது. இந்தத் தொழிலை விட்டு விட்டு காய்கறி வியாபாரம் செய்யப் போகலாமா என்று கூட தோன்றுகிறது.

புவிதா— திருநெல்வேலி.

கேள்வி:— பேச்சு மேசைக்கு கிட்ட யாரையும் நகர விடாமல் முட்டுக்கட்டையாக இருக்கும் பாவிகள் பற்றி உங்கள் கருத்து என்ன பித்தா?

பதில்:— முட்டுக்கட்டை போடும் விறகு கட்டைகள் நாளை பெட்டி பெட்டியாக சிங்கள இளைஞர்கள் கட்டையிலே போகும் போது தான் தாங்கள் நொட்டை சொல்லி குழப்பி விட்ட குட்டையால் வந்த விபரீதத்தை அறிந்து கொட்டம் அடங்குவார்கள்.

செ.சசிகலா — கொழும்பு — 13

கேள்வி:— காதலிக்கும் போது தபால்காரன் தெய்வமாகிறான் என்கிறார்கள். அப்படியானால் கல்யாணத்தின் பின் எப்படித் தெரிவான்?

பதில்:— காதலிக்கும் போது தெய்வமாகத் தெரியும் போஸ்ட் மன் (Post man) கல்யாணத்தின் பின் வேஸ்ட்மன் (Waste man).

பித்தனின் கேள்வி

கேள்வி:— ஒலிம்பிக் போட்டியில் இலங்கை வீராங்கனை சுசந்திகா பங்குபற்றாதது ஏன்?

வாசகர் பதில்கள்

இ. கந்தையா, மட்டக்களப்பு.

நிச்சயம் வெற்றிபெற முடியாது என கருதிய காரணத்தினால்.

ராஜன், யாழ்ப்பாணம்

ஆடத்தெரியாதவளுக்கு மேடைகோணல் எனும் பழமொழிக்கு ஓர் எடுத்துக்காட்டாக இருக்க விரும்பியுள்ளார் போலும்.

ரீட்டா, கொழும்பு.

குழுவின் தலைவி என்ற காரணத்தினால் பங்குபற்றினால் வெற்றி அடைய வேண்டும் என்ற இக்கட்டாண நிலை இதற்கு காரணமாக அமைந்திருக்கலாம்.

டொமினிக், ஹட்டன..

தன்னம்பிக்கை இல்லாத வீர, வீராங்கனைகளை பெயரளவில் மட்டும் விளையாட்டும்போட்டிகளில் இணைந்து கொள்வதினாலோ என்னவோ.

ரூபன், திருகோணமலை.

தோல்வியைச் சந்திக்கும் மனோதிடம் இவரிடம் இல்லாது இருந்திருக்கலாம்.

பித்தன்மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:—

நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பித்தன் பதில் தருவார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்களும் பதில் அளியுங்கள்.

ஐந்து தரமான — குறும்பான — யதார்த்தமான — பதில்கள் பிரசுரிக்கப்படும். பதில்களை செப்டம்பர் 26 திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

கேள்வி:— பித்தன் அண்ணலே இந்த உலகத்தில் யாரை நம்பலாம்? யாரை நம்பக் கூடாது?

பதில்:— உமக்கு கடன் கொடுத்தவரை நம்பலாம் — உம்மிடம் கடன் வாங்கியவனை நம்பக்கூடாது.

இந்தக் கேள்விக்கு பித்தன் அளித்த பதில் மேலே. நீங்கள் பதில் அனுப்ப வேண்டிய முகவரி.

பித்தனுக்கு எங்கள் பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85,ஜெயந்தமல்லிமாராய்ச்சி வீதி,
கொழும்பு — 14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'துணிச்சல்'
ஷவானி–அருண்குமார்

'ஆசாமி'

காதல், மோதல், நட்பு மனித உணர்வுகளை மையமாகக் கொண்டு பொழுதுபோக்கு அம்சத்துடன் சொல்லப்படும் படம் 'ஆசாமி'. 'திருநெல்வேலி', 'கலகலப்பு', 'ஷக்கலக்க பேபி', விரைவில் வெளிவரவிருக்கும் கஸ்தூரி ராஜாவின் 'ஜாதி' மற்றும் 'விண்ணைத் தாண்டி வருவாயா' ஆகிய படங்களில் நடித்த உதயா இப்படத்தின் கதாநாயகனாக நடிக்கிறார். இதுவரை திரை உலகில் சொல்லப்படாத கதாபாத்திரம் இது என்பதால், இப்படத்தினை முடிக்கும் வரை இவர் வேறு படங்களை ஒப்புக் கொள்வதில்லை என்று முடிவெடுத்திருக்கிறார். இப்படத்தின் படப்பிடிப்பு இம்மாதம் சென்னையில் தொடங்கி பெங்களூர், ஒசூர் ஆகிய இடங்களில் ஒரே கட்டமாக தொடர்ந்து நடைபெறுகிறது. பாடல் காட்சிகளை குலுமனாலி, சுவிட்சர்லாந்து, அவுஸ்திரேலியா, லண்டன் ஆகிய இடங்களில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இப்படம் மார்கழி மாத இறுதியில் வெளியிடப்படவுள்ளது.

நர்மதா

அந்நியனில் வைரமுத்து...

ஷங்கர் இயக்கத்தில் விக்ரம்–சதா நடிக்க, ஆஸ்கார் பிலிம்ஸ் வி.ரவிச்சந்திரன் 'அந்நியன்' என்ற பிரமாண்டமான படத்தைத் தயாரித்து வருகிறார்.

இசையமைப்பாளர் ஹரீஸ் ஜெயராஜ் இசையமைத்த சுகமான மெட்டுக்கு, கவிஞர் வைரமுத்து பாடல் எழுதியிருக்கிறார்.

படத்தின் கதைப்படி, காதலனும், காதலியும் அய்யங்கார் வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்குப் பொருந்தும் வகையில் நாலாயிரம் திவ்விய பிரபந்த மொழி நடையில், பாடலின் சரணங்களை வைரமுத்து அமைத்திருக்கிறார்.

அந்தப் பாடல் வரிகள்–

காதலன்– அய்யங்காரு வீட்டு
அழகே
உன் போல் அழகி
பிறக்கவுமில்லை
இனிமேல் பிறந்தால்
அது எம் பிள்ளை

காதலி–உன் போல் சமர்த்து
உலகினில் இல்லை
காதலன் சமர்த்து
காதலின் தொல்லை.

காதலன்– அறியாமை தான்
இங்கே
பேரின்பம் அன்பே
காதலன் வகுப்பில்
மாணவன் தான் பண்டிதனே

காதலன்– மகரந்தப் பொடிகளை எடுத்து
அதில்
மஞ்சள் தங்கம் கொஞ்சம் இட்டு இடித்து
திருக்கன்னம் எங்கும்
சுண்ணம் பூசி
வண்ணம் செய்தேனோ–ஒரு
கோடிப் பூக்கள் கொண்டு
ஜோடிப் பூக்கள் செய்தேனோ?

காதலி– வான் மழையில் நனைந்தால்
பயிர்கள் உருவாகும்
ஆண் மழையில் நனைந்தால்
உயிர்கள் உருவாகும்.

வருகுதப்பா விருந்து

'ஷக்' படத்தில் மேலாடை இல்லாமல் நடித்துச் சர்ச்சை ஏற்படுத்தி உள்ளார் கிஷா.

ஷக் ஹிந்திப்படத்தில் கதாநாயகியாக ஜானகிஷா நடித்துள்ளார். இந்தப்படத்தில் ஜானகிஷா மேலாடை இல்லாமல் நடித்த காட்சி இடம்பெற்றுள்ளது.

கல்லூரியில் மாணவ–மாணவிகள் இடையே நடக்கும் ஈகோ போட்டியில் அனைத்து மாணவர்கள் முன்னிலையில் ஜானகிஷா தனது மேலாடையை முற்றிலுமாகக் கழற்றி அரை நிர்வாணமாக நிற்கிறார்.

படத்தில் இந்தக்காட்சி இடம்பெற மும்பை தணிக்கைக் குழு இரண்டு முறை தடை விதித்தது. ஆனாலும், படத்தின் தயாரிப்பாளர் நடுவர் மன்றத்துக்குச் சென்று காட்சியின் முக்கியத்துவம் பற்றி விளக்கி அனுமதி வாங்கிவிட்டார்.

இந்திய சினிமாவில் கதாநாயகி மேலாடை இல்லாமல் தோன்றும் காட்சி இடம்பெறுவது இதுவே முதல் முறையாகும்.

ஜானகிஷா ஏற்கனவே மனிஷாகொய்ராலாவுக்கு டூப் போட்டுச் சர்ச்சையை ஏற்படுத்தியவர். ஒரு சின்ன லவ் ஸ்டோரி படத்தில் மனிஷா கொய்ராலாவுக்குப் பதிலாக நிர்வாணமாக நடித்தார். இதை எதிர்த்து மனிஷா கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. கவர்ச்சி, கிளுகிளு நிறைந்த இப்படம் வருகிற 17ஆம் திகதி தமிழக திரையரங்குகளில் திரையிடப்படவுள்ளது.

'காதல் திருடா'
செரின்– குணால்

சிநேகாவுக்கு டும் டும் இல்லை

நடிகை சிநேகாவுக்கு தற்போதைக்கு திருமணம் செய்யும் திட்டம் இல்லை என அவரது தந்தை ராஜராம் தெரிவித்துள்ளார். சிநேகா மீது காழ்ப்புணர்ச்சி கொண்ட சிலர் அவருக்குத் திருமணம் என்ற செய்தியை பரப்பியுள்ளார்கள். திரையுலகில் அவர் வளர்ந்து வரும் நேரம் இது. இத்தருணத்தில் அவருக்குத் திருமணம் செய்து கொள்ளும் திட்டம் இல்லை. சிநேகா தற்போது டுபாயில் இருக்கின்றார். நல்ல கதையம்சம் உள்ள படங்களைத் தேர்வு செய்து நடிக்க விரும்புகிறார் சிநேகா. அதனால்தான் அதிகமான படங்களில் அவர் நடிக்கவில்லை. அவருக்கு இப்போதைக்குத் திருமணம் கிடையாது. இந்த செய்தியைப் பரப்பியது யார் என்பது எனக்குத் தெரியும். அவர்களைப் பற்றிக் கூறிஅவர்களை இனம் காட்ட விருப்பமில்லை. அவர்களைக் கடவுள் பார்த்துக் கொள்வார்.

'காதல் எப்.எம்'
ஷவாணி, மணிகண்டன்

என் கா...

இன்றைய தலைமுறையை...
வைத்திருக்கும் பிழையான கருத்...
தயாராகிறது.

இந்தப் படத்துக்கு 'என் காதலே...
புதுமுகங்கள் ஆர்.கணேஷ்...
கதாநாயகன்–கதாநாயகியாக அறி...
இவர்களுடன் நாசர், செந்தில்...
கிராப் வேல்முருகன், டி.பி.கஜேந்தி...
கோவை சரளா அம்மா –ம...
வேடங்களில் நடிக்கிறார்.
நித்யா ஒளிப்பதிவு செய்...
இசையமைப்பாளர் அறிமுகம் ஆகி...
பாடல்களை– கபிலன், யுக...
எழுதுகிறார்கள். எடிட்டிங்– எ...
பிருந்தா, நசீர்பாபு, அக்ஷன்– பிரக...
பல இயக்குநர்களிடம் உதவி...
கார்த்திக், இந்தப் படத்தை இயக்கு...
வசனத்தையும் இவரே எழுதுகிறார்...
பல படங்களில் தயாரிப்பு...
ராமமூர்த்தி இப்படத்தைத் தயாரிக்கி...
இந்தப் படத்துக்காக ஹ...
ஸ்ரீராம், தேவன், பாப் ஷாலினி, மா...
பாட, 6 பாடல்கள் பதிவு செய்யப்ப...
படப்பிடிப்பு சென்னையில் நட...

'கிச்சா வயசு 16' ஆகாஷ்–
சிம்ரன்– மணிகண்டன்

சூர்யா-ஜோதி இ...

பாலாவின் சொந்தத் தயாரிப்பில் உ...
படத்தை இயக்கிய ராம் சத்யா தான் இயக்கு...
இந்தப் படத்தில் சூர்யாவுக்கு ஜோடியா...
தவிர, சேது படத்தைத் தொடர்ந்து கருத்...
ரத்னவேலுவும், இயக்குனர் பாலாவும் ம...
கோர்த்திருக்கிறார்கள்.
சூர்யாவோடு சேர்ந்து பேரழகன் படத்தி...
மிகவும் பிடித்துவிட்டதாம். அதனால், இர...
இருந்து பிரிந்த நண்பர்களை ஒன்று சேர்...

சினிமா சினிமா சினிமா சினிமா சினிமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ராம்' ஜீவா— கஜாலா

...காதலே

...லமுறையைப் பற்றி மூத்த தலைமுறைகள் ...ழயான கருத்தை தகர்த்தெறிவது போல் ஒரு படம்

...'என் காதலே' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

...ஆர்.கணேஷ், சுபாஷினி ஆகிய இருவரும் ...ாயகியாக அறிமுகமாகிறார்கள்.

...ாசர், செந்தில், சார்லி, டெல்லி கணேஷ்,ஆட்டோ ..., டி.பி.கஜேந்திரன் மற்றும் பலரும் நடிக்கிறார்கள்.

... அம்மா —மகளாக, முதன் முதலாக இரட்டை ...றார்.

...பதிவு செய்கிறார். ஹித்தேஷ் என்ற புதிய ...அறிமுகம் ஆகிறார்.

...கபிலன், யுகபாரதி, முத்து விஜயன் ஆகியோர் ...ாடிட்டிங்— எம்.என்.ராஜா, நடனம்— சிவசங்கர், ...புக்ஷன்— பிரகாஷ், தயாரிப்பு நிர்வாகம்— தங்கராஜ்.

...ளிடம் உதவி இயக்குநராகப் பணி புரிந்த நவீன் ...த்தை இயக்குகிறார். படத்தின் கதை, திரைக்கதை, ...ர எழுதுகிறார்.

... தயாரிப்பு மேற்பார்வையாளராக பணி புரிந்த ...தைத் தயாரிக்கிறார்.

...துக்காக ஹரீஷ் ராகவேந்திரா, அனுராதா ... ஷாலினி,மாணிக்க விநாயகம், சுஜாதா ஆகியோர் ...திவு செய்யப்பட்டுள்ளன.

...ன்னையில் நடைபெறுகிறது.

...ஆகாஷ்— ...ண்டன்

...ஜோதி இணைகின்றனர்

...தயாரிப்பில் உருவாகும் படத்தில் சூர்யா நடிக்கிறார். ரெட் ...ா தான் இயக்குநர் என்பது ஏற்கனவே தெரிந்த செய்தி தான். ...வுக்கு ஜோடியாக ஜோதிகா நடிக்கிறார் என்பது புதிய தகவல். ...தொடர்ந்து கருத்து வேறுபட்டதால் பிரிந்த படப்பிடிப்பாளர் ...ர் பாலாவும் மனக்கசப்பை மறந்து இந்தப்படத்துக்காக கை ...

...பரழகன் படத்தில் பணியாற்றிய ரத்னவேலுவை சூர்யாவுக்கு ... அதனால், இரண்டு பேருக்கும் நடுவில் சமாதானப்புறாவாக ...ளை ஒன்று சேர்த்தாராம் சூர்யா.

அன்னைத் தமிழைக் காப்போம்

தமிழ்ப் பாதுகாப்பு இயக்கம் சார்பாக ஒகஸ்ட் 18ஆம் நாள் நடந்த தமிழைக் காப்போம் என்ற கருத்தரங்கில் தமிழ்த் திரைப்படங்களுக்குத் தமிழில்தான் பெயர் வைக்க வேண்டும் என்பதற்கான இறுதி வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இந்தக் கருத்தரங்கு தமிழர் தேசிய இயக்கத் தலைவர் திரு. பழ. நெடுமாறன் தலைமையில் இடம்பெற்றது. அரசியலில் வட துருவம், தென்துருவம் என விளங்கும் பாட்டாளி மக்கள் கட்சி மருத்துவர் எஸ்.இராமதாஸ் மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு பொதுச் செயலர் தொல். திருமாளவன் இருவரும் தமிழின் தூய்மை காக்க இணைந்திருப்பதை வரவேற்கிறோம். அண்மைக்காலமாக தமிழினப் பகைவர்கள் தமிழ்மொழியின் தூய்மையை கெடுத்தே தீருவதெனப் பந்தயம் கட்டி தமிழ்த் திரைப்படங்களுக்கு ஆங்கிலப் பெயர்களைச் சூட்டி வருகிறார்கள். அத்தோடு திரைப் பாடல்களிலும் ஆங்கிலச் சொற்களை தாராளமாகப் புகுத்தி எழுதி வருகிறார்கள். தமிழை மூலதனமாக வைத்துப் பிழைப்பவர்களுக்கே மொழித் தூய்மையில் அக்கறையில்லாமல் இருப்பது எமக்கு ஏமாற்றத்தை அளிக்கிறது. ஐக்கிய நாடுகள் சபை அறிக்கை, அடுத்த ஒரு நூற்றாண்டில் வழக்கொழியப் போகும் 150 மொழிகளில் தமிழும் ஒன்றெனத் தெரிவித்துள்ளது. இது தமிழ்மொழியின் தூய்மையை மட்டுமல்ல, அதன் பயன்பாட்டை வீட்டிலும், கோயில்களிலும் பேணிக் காக்க வேண்டிய கட்டாயத்தை எடுத்துக் காட்டுகிறது.

எனவே, திரைப்படங்களுக்கு தமிழில் பெயர் வைக்க வேண்டும் எனத் தமிழ்ப் பாதுகாப்புக் கழகம் விடுத்துள்ள வேண்டுகோளை, எமது அமைப்பு வாழ்த்தி வரவேற்கிறது. இந்த இறுதி வேண்டுகோளுக்குத் தமிழ்நாடு திரைப்படத் தயாரிப்பாளர்கள் மற்றும் இயக்குநர்கள் நல்ல மனதோடு ஏற்றுக் கொண்டு, தமிழின் தூய்மையைக் காப்பாற்ற முன் வருவார்கள் என மனதார நம்புகிறோம். மீறி ஆங்கிலப் பெயர்கள் தாங்கிய தமிழ்ப்படங்களைத் தொடர்ந்து வெளியிட்டு தமிழின் தூய்மையைக் கெடுப்பார்களாயின், அப்படியான திரைப்படங்களை எதிர்வரும் தமிழ்ப்புத்தாண்டு (பொங்கல் நாள் 2005) முதல் புறக்கணிக்குமாறு தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் தமிழ் உணர்வாளர்கள் அனைவரையும் அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

'ஆசாம்' உதயா— நெகா

கோடி கோடியாகச் சம்பாதித்தாலும் உடம்பை மட்டும் தேற்றாமல் வைத்திருக்கிறாரே தனுஷ். சாப்பிடுவாரா, சாப்பிட மாட்டாரா எனப் பலர் புலம்புவது தனுஷ் காதில் விழத்தான் செய்கிறது. இருந்தாலும் மன்மத ஆட்டம் போடுவதற்கு வசதியாகவே உடம்பை இப்படி ஒல்லியாக வைத்திருக்கிறாராம்.

சிம்ரன் சினிமாவிலிருந்து ஒதுங்கிக் கொண்டதாலும், கிரண் தெலுங்குப் பக்கம் ஒதுங்கிவிட்டதாலும், அவர்களுக்குப் போக வேண்டிய வாய்ப்புகள் எல்லாம் ரீமாசென்னுக்குப் போகின்றதாம்.

தமிழ்த்திரை உலகின் புதிய கவர்ச்சிப்புயல் நமிதா பெயரிலேயே பணிவை வைத்திருக்கிறார். இவரது பெயருக்கு எல்லோரையும் வணங்குபவள் என்று அர்த்தமாம். என்னுடைய பணிவு தான் என் வெற்றிக்குக் காரணம் என்கிறார் அவர்.

''சினிமா மற்றும் டி.விகளில் பெண்களை இலக்கணங்கள் மீறி வெளிச்சம் போட்டுக்காட்டுகிறார்கள். வெறும் உடல் கவர்ச்சியால் வெற்றி பெற முடியாது. மின்னுவதெல்லாம் பொன்னல்ல'' என்கிறார் காவேரி.

மனிஷா பார்ட்டி

நடிகைகளில் பார்ட்டிகளில் கலந்து கொள்வதில் அதிக ஆர்வம் காட்டுவது மனிஷா கொய்ராலா தான். இதை அவரே ஒத்துக் கொள்கிறார்.

''வாரத்தில் ஒரு நாளாவது நண்பர்களுடன் பார்ட்டிகளில் கலந்துகொள்ள வேண்டும். அப்படி இல்லையென்றால் எனக்கு எதையோ இழந்தது போல் இருக்கும்'' என்கிறார் மனிஷா கொய்ராலா. பார்ட்டி என்றவுடன் தான் நினைவுக்கு வருகிறது! மனிஷா அடுத்தடுத்து கலந்து கொண்ட மூன்று பார்ட்டிகளுக்கு தனது காதலர் சினசல் அந்தோனியைக் கூட்டி வரவில்லையாம். இதையே அவர்கள் இருவருக்குமிடையில் பிரிவு ஏற்பட்டதற்கு உதாரணமாகக் காட்டுகிறார்கள் பலர்.

ஆனால்,அதை மறுக்கிறார் மனிஷா. இரவு பத்து மணியாகி விட்டாலே அந்தோணி தூங்குவதற்கு சென்றுவிடுவார். இரவு பார்ட்டி எல்லாம் அவருக்கு ஒத்துவராது என்று நினைத்துத் தான் அவரை அழைத்துச் செல்லவில்லை என்கிறார் மனிஷா.

விந்தியா

சத்தியராஜ் காட்டில் மழை முந்தாஜ் ஔவையா?

முன்னணி நடிகர்கள் கூட சத்யராஜைப் பார்த்து பொறாமைப்படுகிறார்கள். அந்தளவுக்கு சத்யராஜின் படப்பிடிப்புகள் அதிகமாக இருக்கின்றன. அந்தப் பொறாமைத் தீயில் பெற்றோலை ஊற்றுகிற மாதிரி வருகிறதாம் 'மகாநடிகன்'. இதில் சினிமாவில் இருந்துகொண்டே முதலமைச்சர் நாற்காலியைக் குறிவைக்கும் நடிகர்களை வாரு வாரென்று வாரியிருக்கிறாராம் சத்யராஜ். ஆனால், அவரையே வாரிவிட்டார். அப்படத்தில் நடித்துக்கொண்டிருக்கும் ஆட்டோகிராப் மல்லிகா.

'மகா நடிகன்' படத்தில் நடிக்க வேண்டும் என்று என்னிடம் கேட்டவுடன், எந்தக் கேள்வியும் கேட்காமல் ஓ.கே சொல்லிவிட்டேன். காரணம் இப்படத்தின் ஹீரோ சத்யராஜ் என்றார்கள். அது தான் காரணம் என்றார். மல்லிகா சத்தியராஜ் விசிறியா என்ன? இல்லையில்லை.... மல்லிகாவின் அம்மா சத்யராஜின் பரம விசிறியாம். அதனால் தான் கேட்டவுடன் நடிக்க ஒப்புக்கொண்டேன் என்று சொல்லி முடிக்குமுன்,உங்க அம்மா என்னோட ரசிகைன்னு சொல்லி வயசைக் கெடுத்திட்டியே... என்றார் சத்யராஜ். சுற்றியிருந்தவர்கள் கலகலவென்று சிரித்துக்கொண்டிருக்கும்போதே அதிர்ச்சியளிக்கும் இன்னொரு தகவலைச் சொன்னார் சத்தியராஜ்.

இப்படத்தில் மும்தாஜ் ஔவையாராக நடிக்கிறாராம். 'ஐயோ அப்படியென்றால் மும்தாஜின் கவர்ச்சி ஆட்டம் இல்லையா' என்றால், 'இருக்கே அது தனி... 'என்றார் பக்கத்தில் இருந்த டைரக்டர் ஷக்தி சிதம்பரம்.

மும்தாஜுக்கு ஔவையார் வேடமா? இதை ஒப்புக் கொள்ள முடியாது என்று மகளிர் அமைப்புகள் கொதிக்காமல் இருந்தால் கோடி புண்ணியம்.

இயற்கைச் சூழலில் திறந்த வெளி அரங்கில் 1000 இருக்கைகளுடன் கூடிய திருமணம் மற்றும் அனைத்துவிதமான வைபவங்களுக்கான இட வசதிகள்...

PULEY'S BALMORAL
(GUEST HOUSE)
(opp. of Vavuniya Railway Station) Vavuniya. Tel.: 024 2222364.
Head Office: Hotel Swarkka,
No. 33, Soosaipillaikulam Street, Vavuniya. Tel.: 024 2221291.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்சிலம்பம் போட்டி இல.126

சொற்சிலம்பம் 126 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்க வேண்டிய கடைசித் தினம் செப்டெம்பர் 26 ஆம் திகதி ஆகும். விடைகள் ஒக்டோபர் 03 ஆம் திகதி சுடர்ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஒக்டோபர் 10 ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.124க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

சொற்சிலம்பம் போட்டி இல.126



சொற்சிலம்பம் போட்டி இல.124

1 வி	2 க	ட	3 க	4 வி	■	5 உ	6 ப
7 வ	டு	■	8 வ	ழி	9 ப	ட	ல்
10 சா	ம்	11 பா	ர்	■	12 தி	ன்	■
யி	■	13 ச	த	ம்	■	14 பா	15 வி
■	16 க	ன	ல்	■	17 க	டு	கு
18 உ	ர	ம்	■	19 உ	ரு	■	தி
20 த	ண்	■	21 க	ரு	ம்	22 பு	■
23 வி	டி	வெ	ள்	ளி	■	24 கை	மை

சொற்சிலம்பம் போட்டி இல.126

இடமிருந்து வலம்

1. வெளிச்சம்/ ஒளிமயம்.
5. இது இரண்டொழிய வேறில்லை.
7. வரவேற்பதற்கு வைப்பது. ஆலயத்திலும் வைப்பர்.
8. கூந்தல்/ முடி.
09. இப்போது வாழ்வுக்கு அத்தியாவசியமானது இதுதான்.
11. கழித்தல் குறி.
12. அறுக்கும் கருவி.
13. கோல்/ நடப்பட்ட மரம்.
16. தலைவன்.
18. இனிப்புப்பொருள்.
20. சேர்ந்தது அல்ல.
21. யாழ்ப்பாணம் இந்தவடிவத்தை உடைய நாடு என்பர்.
22. ஆட்களை வைத்து சுமந்து செல்வது இதில்.

மேலிருந்து கீழ்

1. பிசகு பண்ணல்.
2. அழகானது/யௌவனம்.
3. ஒரு மூலப் பொருள். கரியில் அதிகம் இருப்பது.
4. மனைவி.
5. இறப்பு.
6. அரைக்கும் இயந்திரம்.
8. தம்பதிகளின் பெற்றோருக்கு இடையிலான உறவுமுறை.
10. மேல்நாட்டு குடிவகை.
11. பழக்க தோசம்.
14. ஒளி/ மறை.
15. இளம்பெண்.
16. பாதி.
17. இதற்குத்தான் அரசியல்வாதிகள் போட்டியிடுவர்.
19. ஆட்டில் ஆண்.

சொற்சிலம்பம்-123 பரிசு பெறுவோர்.

1. ஆர்.காயத்திரி,
28,ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி.

2. பொ.சோபனா,
விலசன் வீதி,
இரணைமடு,
கிளிநொச்சி.

3. நா.இராஜேந்திரன்,
18/, குடியிருப்பு,
வவுனியா.

பாராட்டுப்பெறுவோர்

1. வே. லலிதாவாணி,
வட்டக்கச்சி,
கிளிநொச்சி.
2. மா.நிர்மலாதேவி,
உப அஞ்சல் அலுவலகம்,
தாளையடி.
3. த.சோபனா,
ஹெந்தல,
வத்தளை.
4. கே.இராஜகோபால்,
கந்தசுவாமி கோவிலடி,
வட்டுக்கோட்டை.
5. எஸ்.மோகனதாஸ்,
கடல் மீன் ரயர்வேக்ஸ்,
முறிகண்டி.
6. க.அல் ஆஸாத்
பழைய சந்தை,
ஏறாவூர்.
7. கே. அன்ரனி தாஸ்,
கூழாவடி ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.
8. ஜே.மலர் விழி,
மேபீல்ட் லேன்,
கொழும்பு—13.
9. ஞா. கிறிஸ்ரிராசா,
லூர்து மாதா கோவிலடி,
தும்பளை.
10. ஆர்.கஜேந்திரா
அரியாலை,
யாழ்ப்பாணம்.

திருமலை துறைமுக நிர்வாக பிரிவை..

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமது வரவைப் பதிவு செய்து கொள்ள முடியும். சீனன்குடா அலுவலகத்துக்குச் சென்று வீணாக செத்துமடிய வேண்டியதில்லை. அத்துடன் சம்பளமற்ற விடுமுறைக்கு ஆளாக வேண்டிய அவசியமும் ஏற்படாது.

மேற்சொன்ன காரணங்களே அலுவலகம் இடம்மாற்றப்படுவதை ஆட்சேபிக்க போதியளவு நியாயங்களாகின்றன. ஆயினும், இவற்றுடன் மேலும் பல காரணங்கள் ஆட்சேபனைக்கு வலுச் சேர்க்கின்றன.

ஆரம்பம் முதலே பிரதான அலுவலக வளாகத்தில் இயங்கி வந்த மத்திய இயக்கப் பகுதியுடன் போக்குவரத்துப்பிரிவு, உப களஞ்சிய சாலை என்பன ரீ.ரீ.ஏக்கு இடம் மாற்றப்பட்டன. இப் பகுதிகளில் முழுக்க முழுக்க ஆண்கள் பணியாற்றுவதால் ஓரளவுக்குப் பொறுத்துக் கொள்ளலாம்.

இப்போது, அகதிகளவு பெண்கள் பணிபுரியும் அலுவலகங்கள் இடம் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்பதிே ·யே குறியாய் இருக்கின்றனர். ஒரு சில அலுவலகர்கள் சில சலுகைகள் அனுபவிப்பதை பொறுக்க முடியாத பேரினவாதிகளே இதற்குத் துடிக்கின்றனர்.

இந்த அலுவலகங்களில், திருகோணமலையைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல வடக்குக் கிழக்கைச் சேர்ந்தவர்களும், அதற்கு அப்பாற்பட்டவர்களும் பணி புரிகின்றனர். பொதுவாக மூவினத்தவர்களும் உள்ளனர்.

இவர்களுக்கு விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. இத்தகையவர்கள் நகர்ப்புறத்திலேயே வாடகை வீடுகளை எடுத்துள்ளனர். சில அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட விடுதிகளும் இப் பகுதியிலேயே உள்ளன. பாடசாலை, வைத்தியசாலை, பிரத்தியேக வகுப்பு நிலையங்கள், போக்குவரத்து வசதி, சந்தை மற்றும் அலுவலகத் தொடர்புகள், வங்கிகள் என சகலதும் நகரிலேயே உள்ளன. இவற்றில் பழக்கப்பட்டவர்கள் எதுவுமில்லாத சீனன்குடாவில் என்ன செய்வது?

சீனன்குடாவில் புதிய கட்டிடம் உள்ளதை தவிர, வேறு எந்த வசதிகளும் இல்லை. காடும், மலையும், கடலோரமும் சார்ந்த ஒரு பயங்கர இடமாகவே அந்த அலுவலகச் சூழல் காணப்படுகிறது. இவற்றை விட புதிய கட்டடம் கட்டப்பட்டதன் நோக்கம் ரீ.ரீ.ஏ பிரிவில் உள்ள அலுவலகங்களை இடம் மாற்றி இயங்க வைப்பதற்கே. அவற்றுக்கு அக்கட்டிடம் போதுமானது. மாறாக இவற்றுடன் பிரதான அலுவலக வளாகத்தில் உள்ள சகல அலுவலகங்களையும் இங்கு கொண்டுவந்து இயக்க கூடிய இடமும் இல்லை, வசதியும் இல்லை. இவை தெரிந்தும் பேரினவாதிகள் சிலரின் முயற்சி காழ்ப்பு மனப்பான்மையையும் சூழ்ச்சியையும் காட்டுகிறது. வதிவிட முகாமையாளர் விடுதி உட்பட விருந்தினர் விடுதிகள் சகலதும் நகரில் உள்ளதால் அது குறித்த அலுவலகங்களும் அப்பகுதியிலேயே இருக்க வேண்டியது அவசியமாகின்றது.

சீனன்குடாப் பகுதியில் ஊழியர்கள் வாடகைக்கு வீடு எடுப்பதற்கு உரிய இடம் இல்லை. மேலும், மதுவுக்கும், போதைப் பொருளுக்கும் அடிமைப்பட்டவர்களின் தொல்லை அதிகம், அவசர சிகிச்சையின் (பாம்பு கடித்தல், மகப்பேறு) பொருட்டு வைத்திய வசதி இல்லை. நகருக்கு வருவதற்கு மாலை 7 மணிக்குப்பிறகு வாகன வசதியும் இல்லை. மேலும் நிலக்கரிக்கப்பல் வருவதால் அப்பகுதியில் நிலக்கரி களஞ்சியப்படுத்துவதால் ''பேர்மா முகாம்'' ஆண்கள் விடுதியில் உள்ளவர்களே அல்லல்படுகின்றனர்.

இந்நிலையில், புதிய அலுவலகத்தில் பணிபுரிவது மிகுந்த சிரமமானதே. பல்வேறு வசதிக்குறையுடன் இருக்கும் இடத்துக்கும் கட்டடத்துக்கும் இடம் மாற்றம் செய்யப்படுவதை விடுத்து பழைய இடத்திலேயே இயங்குவது, வங்கிகளில் பணம் பெறுவதற்கும், அதிகார சபை வங்கியில் பணம் பெறுவதற்கும் நகர அலுவலகமே பாதுகாப்பானது.

கட்டடத்துக்கு வாடகை வழங்குவது என்பது வசதிக்குறையுடன் ஒப்பிடுகையில் மிக்க சாதராணமாகவே உள்ளது. அத்துடன் அதிகார சபைக்குச் சொந்தமான கட்டடமும் அங்கு உள்ளது. இதுவரை வெவ்வேறு இடங்களில் பிரிந்து இருந்தே செயல்பட்டவர்கள் இப்போது இணைந்து செயற்பட நினைப்பது வேடிக்கையாக உள்ளது.

இடம் மாற்றம் கோரி சில தமிழ் இளைஞர்கள் (ஊழியர்கள்) கையொப்பம் பெற்று திருகோணமலை நாடாமன்ற உறுப்பினர் ஒருவரிடம் சென்ற வேளையில், அதை அவர் ஏற்றுக் கொள்ள வில்லை என்றும் அறிய முடிகிறது. அதேவேளை இரா.சம்பந்தன் எம்.பி அலுவலக இடம்மாற்றத்தை இரத்துச் செய்யக் கோரி துறைமுக அமைச்சருடன் பேசியதாகவும் கூறப்படுகின்றது. 1997 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட இவ்விடமாற்ற முயற்சியையும் இரா. சம்பந்தன் எம்.பி. தடுத்து நிறுத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே க.துரைரெட்ணசிங்கம் எம்.பி துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு இதைத் தடுத்து நிறுத்தக் கோரி கடிதம் அனுப்பியுள்ளார். இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்ட காரணங்களையே அவரும் நியாயப்படுத்தியுள்ளார். இடமாற்றம் என்பது சின்னப் பிரச்சினை அல்ல. இங்கிருப்பது பாதுகாப்பு பிரச்சினையும் கௌரவப் பிரச்சினையும் ஆகும். நீதி நிலைக்குமா?

பாலியல் பலவீனத்திற்கு ரிஷி அஜமாமிச லேகியம்
தேவையில்லை வயாகரா நம்பிக்கையுடன்
பாலியல் பலவீனத்திற்கும், ஆண்மைக்கும்,
வீரிய விருத்திக்கும் ரிஷி அஜமாமிச லேகியம்
ரூபா.275/– தங்கபஸ்பம் கலந்தது ரூபா 1500/–
தங்கபஸ்பம் தனியாகவும் பெறலாம்
மூல வியாதியா ரிஷி லேகியம் பாவியுங்கள்.
உள்மூலம், வெளிமூலம் இவற்றை சுகப்படுத்தும்
ரூபா. 275/–

ஞானசுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு, கொழும்பு-11.
தொலைபேசி : 2421398

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகக் கண்ணோட்டம்

இரா. புத்திரசிகாமணி

இதுவரை காலமும் இலைமறை காயாக மறைக்கப்பட்டிருந்த மலையக இளைஞர்கள், யுவதிகளின் எதிர்காலம் மீண்டும் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுவிடுமா? அரசியல் தொழில் சங்கப் பிசாசுகள் மீண்டும் மலையகத்தை குட்டிச்சுவராக்கப் போகின்றனவா? என்ற பீதியும், அச்சமும், இப்பொழுது மலையக இளைஞர்கள், யுவதிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

பரம்பரையாக மலையகத் தலைவர்களாகவும், அமைச்சர்களாகவும், இருந்த ஆறுமுகன் தொண்டமான், சந்திரசேகரன் எல்லோரும் பாடிய பல்லவிக்கு முற்றுப்புள்ளி வைத்திருந்தார் சமூக அபிவிருத்தி, தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சராக இருந்த சி.பி. ரட்ணாயக்க. அத்தோடு நின்றுவிடவில்லை. மலையகத்தில் மலையக இளைஞர், யுவதிகளுக்கே நியமனம் வழங்க வேண்டும் என ஜனாதிபதியும் அங்கீ.ாரம் வழங்கி உள்ளார்.

இதன் அடிப்படையில் மலையகம் எங்கும் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு, சுமார் 4000 பேரின் பெயர்ப்பட்டியல்கள் முதல் கட்டமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

இப்பட்டியல் ஜனாதிபதியின் அங்கீகாரத்துக்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஒக்டோபர் மாதத்தில் இவர்களுக்கான நியமனம் வழங்கப்படும் எனவும் உறுதி அளிக்கப்பட்டது.

நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்ட போது அரசியல்வாதிகளின் சிபார்சுகள், தொழிற்சங்க வாதிகளின் பட்டியல்கள் இவர்களுடைய வழமை.

தமக்கு வேண்டியவர்களுக்கும், தமது சங்க ஆதரவாளர்களுக்கும், அரசியல் வாதிகளின் பெயர்பட்டியல்களுக்கும் முன்னுரிமை கொடுப்பது பரம்பரைக் குணம்.

கத்தை மட்டுமே வளர்க்க நடவடிக்கை எடுப்பாரா என்பதும் கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு வழங்கப்பட்டது சங்கத்தை வளர்க்க அல்ல. மலை

மலையக இளைஞர் யுவதிகளின் எதிர்பார்ப்புகள் சிதறடிக்கப்படுமா?

இவ்வளவு காலமும் இவர்கள் எப்படி ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தார்கள்?

மலையகத்தில் நன்கு படித்த இளைஞர் யுவதிகள் இல்லவே இல்லை. வெளிமாவட்டங்களில் இருந்தாவது ஆசிரியர்களை அழைக்க வேண்டும் என்றார் ஒருவர்.

மற்றவர் என்னடா என்றால், கடல் கடந்து போய் இந்தியாவில் இருந்தாவது படித்தவர்களை இறக்குமதி செய்ய வேண்டும் என்றார்.

ஆனால், இவர்களுடைய கூற்றுகளை எல்லாம் பொய்யாக்கிவிட்டார் முன்னாள் அமைச்சர் சி.பி.ரட்ணாயக்க.

தனிப்பட்ட முறையில் படிப்புடன் கூடிய, இசை, கலை, கலாசார, கைத்தொழில் ஆக்க முயற்சி, விளையாட்டு மற்றும் இலக்கியத் துறை ஆகியவற்றில் பட்டங்களையும், தங்கப் பதக்கங்களையும் பெற்றுள்ள மலையக இளைஞர், யுவதிகளை அடையாளம் கண்டு, வெளி உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டி விட்டார் முன்னாள் அமைச்சர் சி.பி.ரட்ணா எல்லாம் நிராகரிக்கப்பட்டன.

அங்கீகரிக்கப்பட்ட கல்விச் சான்றிதழ்கள், அரசாங்க அதிபர் மற்றும் தோட்டதுறை மாரின் வதிவிடச் சான்றிதழ், விசேட தகைமைகளுக்கான சான்றிதழ்கள் மட்டுமே பரிசீலிக்கப்பட்டு புள்ளிகள் இடப்பட்டன.

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய இளைஞர், யுவதிகளும் திருப்தியாகவும் அரசியல் வாதிகளின் இடையூறுகள் இன்றியும் நேர்மையான முறையில் நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டதாகக் கூறினர்.

இந்த இளைஞர் யுவதிகளின் நம்பிக்கையில் இடி விழுந்தது போல அமைச்சர் சி.பி. ரட்ணாயக்க மாற்றப்பட்டார்.

இப்போது அமைச்சர் முத்து சிவலிங்கம் அமைச்சுப் பொறுப்பை ஏற்றுள்ளார்.

வழமையாகவே தமக்கு முன் இருந்த அமைச்சர்கள எவராக இருந்தாலும், அவர்கள் முன்னெடுத்துச் சென்ற திட்டங்கள் எதுவாக இருந்தாலும் ரத்துச் செய்துவிடுவது

ஆனால், இந்தக் கொள்கைகளுக்கு எல்லாம் அப்பால்பட்ட வகையிலேயே தனிப்பட்ட தகுதி, திறமை அடிப்படையிலேயே சி.பி.ரட்ணாயக்க பெயர்ப்பட்டியலை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளார்.

இப்பொழுது அமைச்சராக இருக்கும் முத்து சிவலிங்கம் என்ன செய்யப் போகின்றார்? இந்தப் பட்டியலை நிராகரிக்கப் போகின்றாரா? அல்லது தமது சகாக்களின் பட்டியலைத் தயாரிக்கப் போகின்றாரா? என்பது தான் இன்று மலையகத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் எதிர் ஒலிக்கின்றது.

உண்மையாகவே மலையக சமூகம், இளைஞர்களின் எதிர்காலம், என்பனவற்றை எல்லாம் மனதில் கொண்டு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முத்துசிவலிங்கம் சமுதாயத்தை வளர்க்க நடவடிக்கை எடுப்பாரா அல்லது வழமை போல் தனிப்பட்ட முறையில் தனது சங்

யக சமுதாயத்தை அபிவிருத்தி செய்யவே வழங்கப்பட்டது.

கடந்த காலங்களில் விட்ட பிழைகளை மீண்டும் செய்யக் கூடாது.

பலவிதமான எதிர்பார்ப்புகளுடன் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றிவிட்டு காத்துக் கொண்டிருக்கும் இளைஞர், யுவதிகளை ஏமாற்றிவிடக் கூடாது.

இந்த இளைஞர் யுவதிகள் ஏமாற்றப்பட்டால், எந்த ஒரு அரசியல் தொழிற்சங்கப் பங்களிப்பும் இன்றி இந்த எண்ணாயிரம் படித்த இளைஞர்கள் அமைச்சர் முத்து சிவலிங்கத்துக்கு மட்டுமல்ல, அவரது அமைப்புக்கும் எதிராக வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்தத் தவறமாட்டார்கள். மலையகத்திலும் இளைஞர் புரட்சி வெடிக்கும்.

இப்படியான ஒரு போராட்டம் வெடிக்க முத்து சிவலிங்கம் காரணமாக அமையமாட்டார் என நம்புகிறோம்.

-சரா கோகுலன்-

டேஸ்ட்கடை தணிகாசலம்

தணிகாசலம் அண்ணன் சுவாரஸ்யமாக அந்த மின்னல் நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது நற்பணிமன்றத்தில் இருந்து சிவலிங்கம், நடராஜன், திலகா, ரேவதி ஆகியோரும் வந்து சேர்ந்து கொண்டனர்.

"வணக்கம் அண்ணே"

"வணக்கம், வாங்க எல்லோரும் ஒரே கூட்டணியாக வந்துள்ளீர்கள்?"

"ஆமாங்க அண்ணே! சில வாரங்களாக உங்களைக் காணவில்லை. அதுதான் வந்து பார்த்துவிட்டுப் போவோம் என்று வந்தோம்."

"என்ன தம்பி செய்யிறது. வயசும் போகுது. அடிக்கடி சுகமில்லாமல் போகுது, டாக்டரும் கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கச் சொன்னார். அதுதான் அந்தப் பக்கம் வரவும் முடியாமல் போச்சு"

"இப்ப எப்படிங்க அண்ணே இருக்கு?"

"கொஞ்சம் பரவாயில்லை தம்பி. மருந்து குடிச்சிக்கிட்டு இருக்கேன். அது சரி எல்லோரும் இப்படி உட்காருங்க. திலகா நீ என்ன மூணாவது ஆள் மாதிரி நிற்கிற. ஆத்தா உள்ளே இருக்கு. நீயும் போய் எல்லாருக்கும் காப்பி போட்டு எடுத்துக்கொண்டு வாம்மா" என அன்புக் கட்டளை இட்டார் தணி அண்ணன்.

அப்போது விளம்பர இடைவேளை முடிந்து மீண்டும் மின்னல் ஒளிபரப்பானது.

அதைக் கேட்க, கேட்க இளைஞர்கள் மனதில் ஒரு ஆவேசம். அதைச் சகிக்க முடியாமல் நடராஜன் வாய்விட்டே கூறிவிட்டான்.

"இது என்னாங்க அண்ணே! இவ்வளவு காலமும் இல்லாம இந்த மின்னல் நிகழ்ச்சியும் இப்படித்தரம் கெட்டுப்போச்சு. யார் யாரை அழைப்பது, யார் யாருடைய கருத்துக்களை வெளியிடுவது என்ற விவஸ்தையே இல்லாம போச்சு"

"வேற என்னாங்க அண்ணே செய்யிறது? கொஞ்சம் கூட அரசியல் தெரியாத அரை வேக்காடுகளை எல்லாம் கொண்டுவந்து, இப்படி அம்பலத்தில் கூத்தடிக்கலாமா?"

"உண்மைதானே! நம்ப நாவலப்பிட்டி அப்புச்சித்தம்பி கூட என்ன என்னமோ வந்து உளறிப்புட்டுப்போவுது."

"யாரு? நம்ப கெட்டபூலா தபால்கார ரோட திருக்குமரனைச் சொல்றீங்களா?"

"அடடே சரியா புரிஞ்சிக்கிட்டியே, ஒனக்கும் கூட வெவரம் புரியுது."

"ஒரு சங்கதி தெரியுமா தம்பி. ஒரு கிராமத்தில் அல்லது நாட்டில் ஒரு குழப்பம் ஏற்படனும்னா, ஒரு நாவிதனும் அப்புச்சியும் கூடினாப்போதும்னு சொல்லுவாங்க. அந்த கதை மாதிரி இல்ல ஆயிப்போச்சு."

"அன்று தொண்டமான் ஐயா வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின்படி தனிநாட்டுக்கோரிக்கைக்குத் தாம் உடன்பாடு இல்லை என்று தானே விலகினார்?" என்றார் நடராஜன்.

"இன்னுமொரு மாதிரியும் இல்ல சொல்லுறாங்க. நாடாளுமன்றத் தேர்தல்ல அம்மா கட்சி படுதோல்வி அடைஞ்சப்ப, நம்ப கூட்டணி செயலாளர் நாயகம் அமிர்தலிங்கம் ஐயா எதிர்க்கட்சித் தலைவரானார் இல்லியா? அப்ப தனக்கு அந்தப் பதவி வழங்கப்படாததினால் தான் கூட்டணியில இருந்து தொண்டமான் பிச்சிக்கிட்டாரு என்றும் இல்ல சொல்றாங்க."

"வாய் இருக்கவுங்க நாலு பேரும் நாலு விதமாப் பேசுவாங்க. ஆனால், நாலும் தெரிஞ்ச மாதிரி டிப்ளொமா கிப்ளோமா என்று டுப்பு உடுவாங்க இல்லியா, வெவஸ்த்தை இல்லாம பேசுறாங்க."

"அதுவும் சரிதானே. ஹோட்டல்ல சமையல் செய்யவும், ரூம் போயா இருக்கவும், வர்றவுங்கள சந்தோஷசப்படுத்தவும், சப்ளை செய்வதும் ஒரு டிப்ளோமாதானே. அதைதான் பெருமையா சொல்லி இருக்கு போலவிடுங்க."

"ரொம்ப ரொம்ப சரியான விடயம் தம்பி. அப்புறம் என்னதம்பி?. இன்னும் ஒன்ன கவனிச்சிங்களா? தேசியப்பட்டியல் அப்படி இப்படீன்னு சொல்லிச்சே."

"பார்த்தேங்க அண்ணே! அதுதான் ஆரம்பத்திலேயே சொன்னனே அரசியல் அரிச்சுவடி தெரியாத மனுசன் என்று பெரிய தொண்டமான் ஐயா, ராஜன் ஐயா, இப்ப செல்லசாமி ஐயா, சிச.ரமணிதம்பி அதுமட்டுமா, பேராசிரியர் பீரிஸ், சட்டமேதை சொக்ஸி, கதிர்காமர், ரட்ணசிறி, முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம். இவுங்க எல்லாம் யாரு எப்படி வந்தாங்க? இது கூடத் தெரியாம மேடையில பேச வந்திட்டாங்க."

"கொஞ்சம் பொறுமையா இரு சிவா"

"எப்படிங்க அண்ணே பொறுமையா இருக்கிறது? இவுங்கள பார்த்துத்தான் அப்பவே பாரதியார், நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மாந்தரைப்பார்த்து விட்டால் என்று பாடிவச்சு இருக்கார் போல."

"அவர் என்ன லேசான மனிதரா? இப்படியான முட்டாள்கள் எப்பவும் வருவார்கள் என்று தீர்க்கதரிசனமா பாடி இருக்கார்."

"அங்கபாருங்க அண்ணே, ஈழவேந்தன் ஐயாவைப் பார்த்து அருகதை இல்லாதவர், நீ, வா என்று பேசுறத."

"சிவா இது எல்லாம் அரசியல் நாகரீகம் தெரியாதவங்க, பண்பாடு தெரியாம பேசுறவுங்க பேசுற பேச்சு. ஈழவேந்தன் ஐயாவோட படிப்பு, பேச்சு, அரசியல் முதிர்ச்சி எல்லாம் இந்தப் பொடிப் பசங்களுக்கு எங்கே தெரியப் போகுது? அவரோட பேரைச் சொல்லக் கூட இவுங்களுக்கு அருகதை இல்லை என்பதுதான் சரியானது."

"கடைசியில ரங்காத்தம்பியும் கொடுக்க வேண்டியதை எல்லாம் சரியா டோஸ்

கொடுத்து அனுப்பி வச்சிரிச்சு."

"டோஸ்னு சொன்ன பொறவு எனக்கும் ஒரு சம்பவம் நினைவுக்கு வருது. அதாவது இவுங்க தலைவரும் பிரபாகரனிடம் போய் இப்படி ஒரு முறை வாங்கிக் கட்டினாரே......"

"ஆமாம், ஆமாம். அங்கே போயும் கூட வவுனியாவிலும், கிளிநொச்சியிலும் வாழும் மலையகத் தமிழர்கள் என்று பேசப்போய், தேசியத்தலைவரிடம் வாங்கிக் கட்டிக் கொண்டாரே. அதை சொல்லுறீங்களா?"

"வேறு எதை சொல்லச் சொன்ன. நம்ப தேசியத்தலைவர் என்ன சொன்னார்? இங்கே இருப்பவர்கள் எல்லோரும் நம் தமிழர்கள்தான் இந்தியத் தமிழன், மலையகத்தமிழன் என்றெல்லாம் பிரித்துப் பேசக்கூடாது. எல்லோரும் தமிழர்கள். எல்லாத்தமிழர்களின் பாதுகாப்புக்கும் நாம் பொறுப்பு என்று முகத்தில் அறைந்த மாதிரி சொல்லிப்புட்டாரே."

"சரியாச் சொன்னீங்க அண்ணே"

"இந்த மனுசனுங்க ஒன்றும் தெரியாம பேசுறாங்க. அங்கே தம்பிமார் அடிக்கிற அடியிலதான் பறதெமழ என்ற வார்த்தை இல்லாம போச்சு. தென்பகுதி தமிழர்கள் தலை நிமிர்ந்து தைரியமா நடமாடுறதும் அவுங்கலாலதான் என்பதை மறந்துப்புட்டாங்களே."

"இன்னும் ஒரு சங்கதியை சொன்னாங்களே – அதாவது பிரபாகனுடன் சேர்ந்து இருந்தால் மலையகத் தொழிலாளர்களும் இப்ப அகதிமுகாம்களில் தான் இருக்க வேண்டும் என்று. அதுதான் இந்த வருசத்திலேயே பெரிய ஜோக்."

"சரியான பொயின்ட தொட்டு இருக்க. எந்த ஒரு சமயத்திலயாவது பிரபாகரன் மலையகத் தமிழர்களை ஆயுதம் தூக்குங்க என்று கூறவில்லையே."

"உண்மைதானே. வடக்கு – கிழக்கு மாகாணத்தில் இன்று மாவீரர் குடும்பம் என்று கௌரவிக்கப்படுகின்றனர். மாவீரர் என்று போற்றப்படுகின்றனர். அது எங்க இந்தப் பரதேசிகளுக்குத் தெரியப் போகுது?"

"இவுங்க மட்டும் என்னாங்க அண்ணே. எந்த அரசாங்கம் வந்தாலும் அவுங்களோட கலரை மாத்திக்கிட்டு, ஓடிப்போய் ஒட்டிக்கிட்டு, மக்களைக் காட்டிக் கொடுத்து மந்திரிபதவிகளைவாங்கிக்கொள்வதில் சாதனை படைத்தவர்கள் இல்லையா?"

"இன்னும் ஒரு சங்கதியைக் கேட்டீங்களா? இவ்வளவு காலமும் தொழிலாளர்களுக்குப் பிரஜாஉரிமை பெற்றுக் கொடுத்ததே நாங்கதான் என்று தம்பட்டம் அடித்தாங்க. ஆனால், 1951 ஆம் ஆண்டில் பிரஜா உரிமைக்கு யாரும் விண்ணப்பம் செய்ய வேண்டாம் என்று நம்ப சனங்களைப் படுகுழியில் தள்ளிவிட்டதே இவுங்கதான் என்பதை இராதா கிருஷ்ணன் ஐயா புட்டுப் புட்டுவச்சிப்புட்டாரே."

"வேற என்ன நடராஜா. அவரு என்ன இவுங்க மாதிரி அரை வேக்காடா? நாலும் தெரிந்தவர். அவர் மாதிரி ஒரு வார்த்தை ஆங்கிலத்தில் பேச முடியுமா?"

"சரியாச் சொன்னீங்க அண்ணே. கட்டுக் கட்டா... கள்ள ஓட்டுப்போட்டதும், கத்தை கத்தையான வாக்காளர் அட்டைகளுடன் பொலிஸில் அம்பிட்டதையும் மறந்துபுட்டு இப்ப பேசுறாங்க. இவுங்க எல்லாம் படுத்துக் கொண்டு மேலே துப்புறவுங்க. இவுங்களைப் பற்றிப் பேசினா நமக்குப் பாவம்" என்றான் சிவலிங்கம்.

அப்போது திலகா காப்பியுடன் வர, சூடு பறக்கும் காப்பியை எல்லோரும் குடித்து சுவைத்ததோடு தணி அண்ணனிடம் விடைபெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபிரகாம் லிங்கன் எழுதிய கடிதம்

அமெரிக்காவின் 16ஆவது ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் (1861-1865) என்றுமே உலகில் தலைசிறந்து விளங்கும் அரசியல் மேதைகளில் ஒருவராவார். அவருடைய தனிச்சிறப்புக்குரிய இலக்கியக்கலைத் திறனும், அரசாட்சி என்பது மக்களால், மக்களுக்காக, மக்களது என்ற அவரது ஆழ்ந்த ஞானமும், அவரது வாழ்க்கை முறையும், இறப்பின் விதமும் வரலாற்றில் அவருக்கென தனியான ஓர் இடத்தினை ஏற்படுத்திக் கொடுத்தன.

தனது மகன் படித்துக்கொண்டிருந்த பாடசாலைத் தலைமை ஆசிரியருக்கு ஆபிரகாம் லிங்கனால் எழுதப்பட்ட கடிதத்தினை இங்கே காணலாம். எவரிடமும் பகைமை பாராட்டாத, எல்லோரிடமும் அன்புள்ளம் கொண்ட மிக எடுத்துக் காட்டான ஒரு மனிதனின் கடிதமே இது.

எல்லா மனிதர்களும் நேர்மையானவர்கள் அல்லர். எல்லா மனிதர்களும் உண்மையாக நடப்பவர்களும் அல்லர் என்பதை நான் அறிவேன். இதனை என் மகன் கற்றுக் கொள்ளவேண்டும். ஆனால், ஒவ்வொரு அயோக்கியனையும் மிஞ்சும் வீரன் ஒருவன் இருக்கின்றான் என்பதையும், ஒவ்வொரு சுயநல அரசியல்வாதியின் இடத்தையும் நிரப்ப அர்ப்பணிப்புள்ள தலைவன் ஒருவன் இருக்கின்றான் என்பதையும் அவனுக்குப் போதியுங்கள்.

ஒவ்வொரு எதிரிக்கும் ஒரு நண்பன் இருக்கின்றான் என்பதை அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். இதற்குக் காலம் எடுக்கும் என்பதை நான் அறிவேன். உங்களால் முடிந்தால் சுயமாக சம்பாதித்த ஒரு டொலர் தெருவில் கண்டெடுத்த ஐந்து டொலரை விட மிக மிகப் பெறுமதியானது என்று அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

இழப்பை பழகிக்கொள்ளவும், வெற்றியை அனுபவிக்கவும் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

பொறாமையிலிருந்து விலகி நிற்பதற்கு அவனை நெறிப்படுத்துங்கள். முடிந்தால் அமைதியான சிரிப்பின் இரகசியத்தை அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். அடாவடித்தனம் பண்ணுபவர்கள் இலகுவில் தோல்வியடைவார்கள் என்பதை அவன் இளவயதிலேயே கற்றுக்கொள்ளட்டும். உங்களால் முடிந்தால் புத்தகங்களது அற்புதங்களை அவனுக்குச் சொல்லிக் கொடுங்கள். அதேநேரம் ஆகாயத்துப் பறவைகள், வெயில் நேரத் தேனீக்கள், பசுமையான மலைப்பிரதேசப் பூக்கள் போன்ற நிரந்தரமாகவுள்ள விளங்காப் புதிர்களை ஆழமாகச் சிந்திக்க அமைதியான நேரத்தையும் அவனுக்கு அளியுங்கள்.

ஆபிரகாம் லிங்கன்

பாடசாலையில் ஏமாற்றுவதைவிட தேர்வில் தோல்வியுறுவது மிகவும் மேன்மையானது என்பதை அவனுக்குப் போதியுங்கள். ஒவ்வொருவரும் அவனது சொந்தக் கருத்துக்களை தவறு என்று சொன்னாலும் கூட, தனது சொந்தக் கருத்துக்களில் நம்பிக்கை வைக்கக் கற்றுக்கொள்ளுங்கள். கனிவான மக்களுடன் கனிவாகவும், கடும்போக்குள்ளவர்களுடன் கடுமையாகவும் நடந்து கொள்ளக் கற்பியுங்கள். ஒவ்வொருவரும் கோஷ்டியாகச் சேருகின்றபோது அந்தக் கூட்டத்தை பின்பற்றிச் செல்லாத ஆற்றலை என் மகனுக்குக் கொடுக்க முயற்சி செய்யுங்கள். எல்லோருடைய கருத்துக்களையும் உற்றுக்கேட்கச் சொல்லுங்கள். ஆயினும், அவன் செவிமடுக்கும் அனைத்தையும் உண்மை எனும் திரையில் வடிகட்டி, அதனூடாக வரும் நல்லவற்றை மட்டுமே எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை அவனுக்கு உணர்த்துங்கள்.

உங்களால் முடிந்தால் அவன் துன்பத்தில் இருக்கும்போது எப்படிச் சிரித்துக் கதைப்பது என்பதைக் கற்றுக்கொடுங்கள். கண்ணீரில் வெட்கமில்லை என்பதை அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். ஓயாத குற்றம் குறை காண்பவர்களை அலட்சியம் செய்யவும், மிகவும் இனிப்பாகப் பேசுபவர்களிடம் விழிப்பாக இருக்கவும் அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். அவனுடைய உடல் ஆற்றலையும், அறிவாற்றலையும் உச்ச விலை கோருபவர்களிடம் விற்கவும், அதே வேளை ஒருபோதும் இதயத்துக்கும், ஆன்மாவிற்கும் (மனச்சாட்சிக்கு) ஒரு விலைப் பட்டியலை இடவேண்டாம் எனவும் கற்றுக் கொடுங்கள். கூச்சலிடும் காடையர்களுக்கு தன் காதுகளைப் பொத்திக் கொள்ளவும், அவன் தான் சரியென நினைக்கும் காரியங்களில் உறுதியாக நின்று போராடவும் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

அவனைப் பட்சமாக நடத்துங்கள். ஆனால், அவனை ஆரத்தழுவி செல்லம்கொஞ்சவேண்டாம். ஏனெனில், நெருப்பின் சோதனை தான் தரமான உருக்கு இரும்பைத் தருகின்றது. ஆத்திரமடையாமல் இருப்பதற்கு வேண்டிய வைராக்கியத்தையும், வைராக்கியமாக இருப்பதற்கு வேண்டிய பொறுமையையும் பெற அவனை அனுமதியுங்கள். தன் மீது உன்னதமான நம்பிக்கை வைக்க அவனுக்கு என்றும் கற்றுக்கொடுங்கள். ஏனெனில் அப்போதுதான் மனித குலத்தின் மீது அவன் எப்போதும் உயர்ந்த நம்பிக்கை கொண்டிருப்பான்.

இது ஒரு பெரிய கட்டளை. ஆனால், உங்களால் என்ன செய்ய முடியும் என்று பாருங்கள். ஏனெனில், அவ்வளவு நல்லதொரு குட்டிப்பையன் என் மகன்.

தங்கள் உண்மையுள்ள
ஆபிரகாம் லிங்கன்.

தமிழாக்கம்: மார்க்கண்டு கண்ணன்
சொய்சாபுரம்

ராசி பலன்

இவ்வார 'ராசிபலன்' 19-09-2004, 25-09-2004

பொ. சந்திரன்

இவ் வார கிரகநிலை

	ராகு		சனி
			சுக்கிரன்
			புதன் சூரியன் செவ்
		கேது	குரு

செவ்வாய்	உத்தரம்	சூரியன்
சுக்கிரன்	ஆயிலியம்	புதன்
புதன்	உத்தரம்	சூரியன்
சூரியன்	உத்தரம்	சூரியன்
குரு	உத்தரம்	சூரியன்
சனி	புனர்பூசம்	குரு

புரட்டாதி 4 முதல் புரட்டாதி 10 வரை

சந்திரன் விருச்சிகம் முதல் மகரம் வரை

மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.

ராசிக்குரிய செவ்வாய் ஆறாம் வீட்டில் இருப்பது விசேஷம். மேலும், சூரியனின் சாரத்தில் இருப்பதும் பரவாயில்லை. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. ராசியில் ராகு இருப்பது நல்லதல்ல. மன அமைதி இருக்காது. (2,7) உரிய சுக்கிரன் நாலில் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. வீடு, வாகனம் லாபம் தரும். 7இல் கேது இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. (10,11) உரிய சனி மூன்றில் இருப்பது விசேஷம். தொழில்துறை முன்னேறும். மூத்த சகோதரத்துக்கு நல்லது. நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். பக்க உதவிகள் கிடைக்கும். குரு 6இல் மறைவது நல்ல பலன்கள் தாமதமாக வாய்ப்புண்டு.

இடபம்: கார்த்திகை 2,3,4. ரோகினி, மிருகசீரிடம் 1,2

ராசிக்குரிய சுக்கிரன் மூன்றில் இருப்பது நல்லது. மேலும், புதனின் சாரத்தில் இருப்பது விசேஷம். எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. (2,5) உரிய புதன் ஐந்தில் இருப்பதால் கையில் பணம் இருக்கும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். நாலுக்குரிய சூரியன் ஐந்தில் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். தாய்க்கும் நல்லதல்ல. (7,12) உரிய செவ்வாய் ஐந்தில் இருப்பதால் திருமண வாய்ப்பு பாதிக்கலாம். ஆனால், குரு ஐந்தில் நிலைமையில் மாற்றம் வரலாம். (9,10) உரிய சனி இரண்டில் இருப்பதால் தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. குரு ராசியைப் பார்ப்பதால் நல்ல பலனை எதிர்பார்க்கலாம்.

மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

(1,4) உரிய புதன் 4இல் ஆட்சி உச்சமாக இருப்பது விசேஷம். மேலும், சூரியனின் சாரத்தில் இருப்பது சிறப்பு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனம் லாபம் தரும். இரண்டில் சுக்கிரன் இருப்பதால் கையில் பணம் இருக்கும். (7,10) உரிய குரு நாலில் இருப்பது மத்திம பலன். ஆனால், ராசியில் உள்ள சனி இவ் வீடுகளைப் பார்ப்பதால் திருமண வாய்ப்புத் தாமதமாகலாம். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. ராசியில் சனி இருப்பது மன அமைதி இருக்காது. தேவையற்ற பிரச்சினை வீடு தேடி வரலாம். 71/2 சனி காலம். சனி வழிபாடு சனிக்கிழமைகளில் செய்ய தோஷம் விலகும்.

கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.

ராசிநாதன் சந்திரன் 5,6,7 ஆகிய வீடுகளைக் கடப்பதால் நல்ல பலனைச் செய்யும். குறிப்பாக 6, 7ஆம் வீடுகள் சந்திரனுக்கு உகந்த வீடுகள் நன்மை செய்யும். பிரயாண வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். ராசியில் சந்திரன் இருப்பதும் விசேஷமே. இரண்டுக்கு உரிய சூரியன் மூன்றில் இருப்பது விசேஷம். கையில் பணம் இருக்கும். 4க்குரிய சந்திரன் மூன்றில் இருப்பது நல்லது. வீடு, வாகனம் லாபம் தரும். (6,7) உரிய சனி 12இல் இருப்பது திருமண பலன் தாமதமாகலாம். மேலும், குரு மூன்றில் இருப்பது சங்கடமான நிலைதான். தொழிலுக்குரிய செவ்வாய் மூன்றில் இருப்பது தொழில்துறை முன்னேறும். பக்க உதவிகள் கிடைக்கும். குரு மறைவது நல்ல பலன்கள் காலதாமதமாகலாம்.

சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.

ராசிக்குரிய சூரியன் இரண்டில் இருப்பது சிறப்பு இல்லை. ஆனால், தன் சொந்த நட்சத்திரத்தில் இருப்பது சிறப்புடையது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தாமதமாகலாம். (2,11) உரிய புதன் இரண்டாம் வீட்டில் ஆட்சி உச்சமாக இருப்பது கையில் பணம் இருக்கும். மூத்த சகோதரத்துக்கு நல்லது. நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். (4,9) உரிய செவ்வாய் இரண்டில் இருப்பது நல்லதல்ல. பெற்றோருக்குக் கூடாது. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். (6,7) உரிய சனி 11இல் இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். தொழிலுக்குரிய சுக்கிரன் 12இல் இருப்பதால் தொழிலதுறை முன்னேறும். சுக்கிரன் 12இல் மறைவதில்லை. இரண்டில் குரு இருப்பது சிறப்புடையது. நல்ல பலனை எதிர்பார்க்கலாம்.

கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.

(1,10) உரிய புதன் 1இல் அதாவது, ராசியில் ஆட்சி உச்சமாக இருப்பது விசேஷம். மேலும் சூரியனின் நட்சத்திரத்தில் இருப்பதும் ஆறுதல் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். தொழில்துறை முன்னேறும். (2,9) உரிய சுக்கிரன் 11இல் இருப்பது கையில் பணம் இருக்கும் பிதாவுக்கு நல்லது. (4,7) உரிய குரு ராசியில் இருப்பது நல்லதல்ல. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமண வாய்ப்புத் தாமதமாகலாம். (5,6) உரிய சனி 10இல் இருப்பது நல்லதல்ல. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். குழந்தைகளின் செயல்பாடு திருப்தி தராது. (4,7) வீடுகளைச் சனி பார்ப்பது பிரச்சினை. சனி, குரு இருவரும் நன்மை செய்ய மாட்டார்கள். சனி, வியாழன் வழிபாடு செய்வது நல்லது.

துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.

(1,8) ஒன்று, எட்டுக்குரிய சுக்கிரன் பத்தில் இருப்பது நல்லதல்ல. ஆனால், புதனின் சாரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. ராசியில் கேது இருப்பதும் பிரச்சினை தான். மேலும், குரு மறைவதும் நல்லதல்ல. எடுத்த முயற்சி தடைப்படலாம். மன அமைதி இருக்காது. (2,7) உரிய செவ்வாய் 12இல் இருப்பது கையில் பணம் இருக்காது. திருமண வாய்ப்புத் தடைப்படலாம். 7இல் ராகு இருப்பதும் குடும்பத்தில் அமைதி இருக்காது. (4,5) உரிய சனி 9இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். குழந்தைகள் சொற்கேட்க மாட்டார்கள். 10இல் சுக்கிரன் இருப்பதால் தொழில்துறையில் போதிய முன்னேற்றம் இருக்காது. குரு வழிபாடு செய்யின் தீய பலன்கள் குறையலாம்.

விருச்சிகம்: விசாகம் 4, அனுசம், கேட்டை

(1,6) உரிய செவ்வாய் 11இல் இருப்பது நல்லது. மேலும், சூரிய சாரத்தில் இருப்பதும் பரவாயில்லை. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. (2,5) உரிய குரு 11இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். குழந்தைகளின் செயல்பாடு திருப்தி தரும். பழைய கடன் தீரும். (3,4) உரிய சனி 8இல் இருப்பது வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். இளைய சகோதரத்துக்கும் தீய பலன் காட்டலாம். (7,12) உரிய சுக்கிரன் 9இல் இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். தொழிலுக்குரிய சூரியன் லாபத்தானத்தில் இருப்பதால் தொழில் துறை முன்னேறும். பொதுவாக எல்லாக்கிரகங்களும் நல்ல நிலையில் இருப்பதால் எண்ணிய எண்ணம் ஈடேறும்.

தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.

(1,4) உரிய குரு 10இல் இருப்பதால் நல்லதென்றும் கூறமுடியாது. கூடாது என்றும் சொல்வதற்கில்லை. அதாவது குரு 4,10 இடங்களில் பெரிதாக நன்மை செய்வதில்லை. மத்திம பலனைக் கொடுக்கலாம். ஆனால், சூரிய சாரம் பெற்று இருப்பது ஓர் அளவு ஆறுதல் உண்டு. எடுத்த முயற்சி தாமதப்பட்டும் நிறைவேறும். வீடு, வாகனங்கள் கைமாற வாய்ப்புண்டு. (2,3) உரிய சனி 7இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. இளைய சகோதரத்துக்கும் நல்ல பலன் இல்லை. (7,10) உரிய புதன் 10இல் இருப்பதால் திருமண வாய்ப்புத் தாமதமாகலாம். தொழில்துறையில் எதிர்பார்த்த முன்னேற்றம் இருக்காது. பக்க உதவிகள் கிடைக்கும். சனி ராசியைப் பார்ப்பது கூடாது. தடைகள் வர வாய்ப்புண்டு.

மகரம்: உத்தராடம்2,3,4, திருவோணம், அவிட்டம்1,2

(1,2) உரிய சனி 6இல் இருப்பது விசேஷம். மேலும், குருவின் சாரத்தில் இருப்பதும் சிறப்பு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். கையில் பணம் இருக்கும். (4,11) உரிய செவ்வாய் 9இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். நண்பர்களால் தொல்லை வரலாம். தாய்க்கும் நல்லதல்ல. மூத்த சகோதரத்துக்கும் கூடாது. 7இல் சுக்கிரன் இருப்பதால் திருமண வாய்ப்புத் தாமதமாகலாம். ஆனால், குரு 9இல் இருப்பதால் குடும்பத்தில் நல்ல பலன்கள் நடக்கலாம். (5,10) உரிய சுக்கிரன் 7இல் இருப்பதால் தொழில் துறையில் எதிர்பார்க்கும் லாபம் இருக்காது. குழந்தைகளின் செயல்பாடு திருப்தி தராது. குரு நல்ல இடத்தில் இருந்து ராசியைப் பார்ப்பதால் சகல தோஷங்களையும் நிவர்த்தி செய்யும்.

கும்பம்: அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3.

(1,12) உரிய சனி ஐந்தில் இருப்பதை நஞ்சுச் சனி என்பர். நல்ல பலனைச் செய்ய மாட்டார். ஆனால், குருவின் சாரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. எடுத்த முயற்சி தாமதமாகலாம். சயன சுகம் இருக்கமாட்டாது. (2,11) உரிய குரு 8இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. மூத்த சகோதரத்துக்குக் கூடாது. நண்பர்களால் தொல்லை உண்டு. (4,9) உரிய சுக்கிரன் 6இல் இருப்பதால் பெற்றோருக்கு நல்லதல்ல. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். 7க்குரிய சூரியன் 8இல் மறைவதால் திருமண வாய்ப்புத் தடைப்படலாம். (3,10) உரிய செவ்வாய் 8இல் மறைவதால் தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. இளைய சகோதரத்துக்கும் நல்ல பலன் இருக்காது.

மீனம்: பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

(1,10) உரிய குரு இன்பத்தானமான 7ஆம் வீட்டில் இருப்பது விசேஷம். மேலும் நட்புக்கிரகமான சூரியனின் சாரத்தில் இருப்பது சிறப்பானது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்கும். (2,9) உரிய செவ்வாய் 7இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. பிதாவுக்கும் நல்லதல்ல. (4,7) உரிய புதன் 7இல் இருப்பது சிறப்பு இல்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். ஆனால், 7இல் குரு இருப்பதால் நிலைமையில் மாற்றம் வரலாம். ஆனால், 10ஆம் மற்றும் ராசி ஆகிய வீடுகளைச் சனி பார்ப்பதால் திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். அவ்வீடுகளின் நல்ல பலன் பாதிக்க வாய்ப்பு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரினவாதத்தின் ஆபத்தை தனது இனத்துக்கு உணர்த்தியவர் அஷ்ரப்

இலங்கை வாழ் முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரையில், செப்டெம்பர் 16 ஆம் நாள் மறக்கமுடியாத தினமாகும். 1980 களுக்கு முன்னர் பேரினவாத அரசியல் கட்சிகளை நம்பியிருந்த இலங்கை வாழ் முஸ்லிம் மக்களின் அரசியல் தனித்துவத்தைப் பேணுவதற்காக உருவாக்கப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் ஆவார். அன்னார் இவ்வுலகினை விட்டுப் பிரிந்த தினம் செப்டெம்பர் 16 ஆகும்.

மிகவும் நீண்டகாலமாக இலங்கையில் புரையோடிப் போயுள்ள இனமுரண்பாட்டினைத் தீர்த்து வைத்து, அதன் ஊடாக சமாதான பூமியாக இலங்கையைக் காண வேண்டும். இதுவே காலத்தின் தேவை என்ற எண்ணத்திலும், செயலிலும் ஈடுபட்டுவந்த ஓர் சமாதான விரும்பி அஷ்ரப். இவர் இவ்வுலகினை விட்டுப் பிரிந்து நான்கு வருடங்களாகின்றன.

வாழ்க்கைப் பின்னணி

விதானையாரான தகப்பனார் முஹம்மது உசைன், தாயார் மதீனா உம்மா ஆகியோருக்கு மகனாக 1949 ஆம் ஆண்டு அக்டோபர் 23 ஆம் திகதி கிழக்கிலங்கையிலுள்ள சம்மாந்துறையில் பிறந்தவர் அஷ்ரப். அவருக்கு மூன்று சகோதரிகள் உள்ளனர்.

தனது வளர்ப்பிடமாக கல்முனைக்குடியைக் கொண்டிருந்த அஷ்ரப், தனது ஆரம்பக்கல்வியை கல்முனைக்குடி அல் - அஸ்ஹர் வித்தியாலயத்தில் ஆரம்பித்தார். இடைநிலைக் கல்வியை கல்முனை பாத்திமா கல்லூரியிலும், உயர் கல்வியை கல்முனை உவெஸ்லி கல்லூரியிலும் பெற்றார்.

தனது பாடசாலை வாழ்வில் இனமத பேதமின்றி அனைத்து மாணவர்களுடனும் பழகிய அஷ்ரப், பாடசாலைகளில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு தனது ஆற்றலை வளர்த்துக் கொண்டார். அஷ்ரப்பின் அரசியல் வாழ்க்கைக்கு பிற்காலத்தில் இது பெரிதும் உதவியது.

மர்ஹூம் அஸ்ரப் தமது எண்ணம்போல் பேரியல் இஸ்மாயிலைக் காதலித்து திருமணம் செய்து கொண்டார். இவ்விருவருக்கும் ஒரு ஆண் மகனும் பிறந்தது.

அஷ்ரப்பின் வரலாற்றை எடுத்துப் பார்க்கும்போது பல கோணங்களிலும் அவதானிக்க வேண்டும். சிறந்த கவிஞனாக, சட்டத்தரணியாக, அரசியல் வாதியாக எனப் பல திசைகளிலும் அவர் பிரபல்யம் பெற்றிருந்தமையால், அஷ்ரப்பின் வாழ்க்கையில் இவை ஒவ்வொன்றும் தனித்தனியாக ஆராயப்படவேண்டியவை ஆகும்.

சிறந்த கவிஞன்

தனது 12 ஆம் வயதில் இருந்து கவிதைகள், கதைகள் என இலக்கியத்துறையில் நுழைந்த அஷ்ரப், தனது வாழ்க்கையில் இரவு வேளைகளில் கவிதைகளை வடிப்பதிலேயே பெரும்பகுதியைச் செலவழித்தார். அவர் எழுதிய முதலாவது கவிதை தாயைப் பற்றியதாகும்.

"என்னைப் பெற்ற தாய்
ஏந்தலான தாய்
பத்துமாதம் சுமந்து
பாங்காய் வளர்க்கும் தாய்
காய்ச்சல் வரும் போதும்
கதறியழும் தாய்"

இக்கவிதை அவர் மரணித்த அதே தினத்தில் தேசிய முரசில் பிரசுரமானது. இவ்வாறு தனது கவிதைகளைக் காலத்திற்கு காலம் காலத்தின் தேவைக்கு ஏற்ப வெளியிட்ட அஷ்ரப், தனது சட்டக்கல்லூரி வாழ்வில் நண்பனான சிவபாலன் என்பவர் காஸ் வெடித்து அகால மரணமடைந்த போது ஓர் இரங்கல்பாவை கல்முனை சவக்காலையில் வைத்துப்பாடினார்.

"நெருப்புக்கென்ன நீ செய்தாய்?" எனும் இரங்கற்பா அங்கு இருந்த அனைவரையும் கண்ணீர் மல்கச் செய்தது.

அஷ்ரப் தன் வாழ்க்கையில் எழுதிய கவிதைகள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து 600 பக்கங்கள் கொண்ட "நான் எனும் நீ" எனும் கவிதைத் தொகுப்பினை வெளியிட்டார். இலங்கையில் மாத்திரமல்ல, உலகில் வாழும் தமிழ்பேசும் மக்களின் உன்னத வரவேற்பினைப் பெற்ற நூலாக இது இன்றும் கருதப்பட்டு வருகின்றது.

தனது எழுத்து ஆற்றலால் பல நூல்களை வெளியிட்டார். குறிப்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் "புதிய வெளிச்சங்கள்" எனும் பாடல்கள் அவரால் எழுதப்பட்டவை ஆகும்.

சிறந்த கவிஞராக வாழ்ந்து காட்டிய அஷ்ரப், தனது அரசியல் வேலைப்பளுக்களுக்கு மத்தியிலும் "நானும் எனும் நீ" எனும் கவிதை தொகுப்பினை வெளியிட்டமை, அவரின் உள்ளே ஒளிந்திருந்த கலாரசனையை உலகுக்கு எடுத்துக்காட்டியது என்றால் மிகையாகாது.

சிறந்த சட்டத்தரணி

அஷ்ரப்பின் சட்டத்தரணி வரலாற்றை எடுத்து நோக்கும் போது பல பொருளாதாரக் கஷ்டங்களுக்கு மத்தியிலும் தனது சட்டத்துறை வரலாற்றை கற்று முடித்தார். இளம் சட்டத்தரணியாக வளர்ந்து ஜனாதிபதி சட்டத்தரணியாக வளர்ச்சி பெற்றார். சிறந்த கணீரென்ற பேச்சு ஆற்றலும், வாதத் திறனும் அவரை அவரது தொழிலில் பளிச்சிட வைத்தன.

இவரது அரசியல் பிரவேசத்துக்கான உந்து சக்தியை சட்டக்கல்லூரி வாழ்க்கையே கொடுத்தது. இதனால் பல அரசியல் கருத்துக்களை இளம் வயதிலே வெளியிட்டார். இன்னும் கூட அவரால் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட சட்டத்துறை சம்மந்தமான நூல் ஒன்று உள்ளமை அவர் சிறந்த அரசியல் வாதி, கவிஞன் என்பது போன்று சிறந்த சட்டவல்லுநர் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

சிறந்த அரசியல்வாதி

அஷ்ரப்பின் இலக்கிய, சட்டத்துறை வரலாறு அவரது சிறப்பை தெளிவாக விளக்கினும், அவரது வரலாற்றுப் பயணத்தில் இலங்கை வாழ் முஸ்லிம் மக்களின் அரசியல் விடிவுக்காகப் போராடிய தன்மை இன்னும் மறக்க முடியாத வரலாறாகவே உள்ளது. "சுரமும் சுரமும் ஒன்று சேர்ந்தால் கின்னரம் பாடும்" என்பார்கள். அதுபோன்று தன்னிடம் உள்ள பேச்சு ஆற்றல், வாதத் திறன், இலக்கிய கலாரசனை, சட்டத்துறை வல்லுநர் என்பனவற்றுடன் இணைந்து அரசியலை இலங்கை வாழ் முஸ்லிம்களுக்காக மேற்கொண்டமையால் இலங்கையின் அரசியலில் தடம்பதித்தார்.

> *தமிழீழ விடுதலைப் புலிகளை அனுசரித்துச் செல்லாத எந்த ஒரு தீர்வும் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வாகாது என்று அன்றே கூறி இருந்தார் அஷ்ரப்.*

இவரது அரசியல் பிரவேசமும், அவர் மேற்கொண்ட அரசியலும் அஷ்ரப்பை பிரபல்யப்படுத்தின.

இவரது வரலாற்றை ஆராய முற்படும் போது அல்லது முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றை ஆராய முற்படும்போது நிச்சயமாக அஷ்ரப்பின் அரசியல் பற்றிக் கட்டாயம் தெளிவாக அறிந்திருத்தல் வேண்டும்.

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றை எடுத்து நோக்கும் போது, அவர்கள் எடுப்பார் கைப்பிள்ளைகளாக, எவ்வித தனித்துவமுமின்றி இலங்கை சுதந்திரமடைந்தது முதல் நான்கு தசாப்தங்கள் பேரினவாத சக்திகளின் பின்னால் வாழ்ந்தும், சங்கமித்தும் இருந்தனர்.

இதனால் முஸ்லிம்களுக்கு என்று தனித்துவமான அரசியல் இயக்கம் இலங்கையில் தடம்பதிக்கவில்லை. இந்த நிலையில் 1976 ஆம் ஆண்டு மறக்க முடியாத ஆண்டாகும்.

1976 ஆம் ஆண்டு புத்தளம் பள்ளிவாசலுக்குள் நுழைந்த பேரினவாத காவல்படையினர் காட்டுமிராண்டித் தனமாகச் சுட்டனர்.

இதில் பல உயிர்கள் கொல்லப்பட்டன. ஆனால், இந்த நிகழ்வு பற்றி நாடாளுமன்றத்தில் கதிரைகளில் ஒட்டிக் கொண்டிருந்த முஸ்லிம் அரசியல் வாதிகள் வாய்திறந்து பேசவில்லை.

இவ்வேளையில் [illegible] ஒருவர் தந்தை செல்வா மட்டுமே. இன்று வரை அதுபற்றி எவ்வித விசாரணைகளும் இடம் பெறவில்லை. இந்த நிகழ்வு அஷ்ரப்பின் அரசியல் உணர்வில் ஒரு உந்து சக்தியைக் கொடுத்தது.

பேரினவாதிகளின் கைகளினைப் பிடித்துக் கொண்டு அரசியல் மேற்கொண்டால் முஸ்லிம்களின் அரசியல் மழுங்கடிக்கப்படும் என்பதினை தெளிவாக உணர்ந்து, முஸ்லிம் மக்களது தனித்துவ அரசியலை நிலைநிறுத்திக் கொள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எனும் இயக்கத்தினை 1981.09.21 அன்று அஷ்ரப்பை ஏக தலைவனாகக் கொண்டு சிலர் சேர்ந்து உருவாக்கினர்.

எம்.எச்.எம்.அஷ்ரப்

அன்றிலிருந்து இன்றுவரை அவ்வியக்கம் முஸ்லிம் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்று தனித்துவமான இயக்கமாக உள்ளதை எவரும் மறுக்க முடியாது.

அஷ்ரப் ஓர் குறுகிய மனிதவர்க்கத்தை வைத்துக் கொண்டே தமது அரசியலை மேற்கொண்டார். முஸ்லிம் மக்களின் அரசியல் உணர்வினை கிள்ளிவிட்டார். பரந்த விருட்சமாக மரம்வளர ஆரம்பித்தது. நள்ளிரவினையும் தாண்டி முஸ்லிம் மக்கள் மத்தியில் பிரசாரங்கள் மேற்கொண்டார். ஈற்றில் வெற்றி கண்டார், முஸ்லிம்களின் தனித்துவ அரசியல் வரலாற்றுப் பயணத்தில்.

1981 - 85 வரை அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டக் கிராமங்கள் தோறும் முஸ்லிம் அரசியற் தனித்துவத்தை வலியுறுத்தியும், பேரினவாதக் கட்சிகளையும் அதன் முகவர்களையும் அம்பலப்படுத்தியும், தமிழ் மக்களுக்கு எதிரான போக்குகளை விமர்சித்தும் பிரசாரங்கள் மேற்கொண்டார்.

இக் காலப்பகுதியில் கல்முனையில் ஏற்பட்ட தமிழ் - முஸ்லிம் இனமுரண்பாட்டுக்கு அஷ்ரப்தான் காரணம் எனச் சில முஸ்லிம் அரசியல்வாதிகள் காரணம் காட்டினர். இதனால் அஷ்ரப் கொழும்புக்கு இடம் பெயர்ந்தார்.

காலங்கள் கடந்தன. அஷ்ரப் கொழும்பு நோக்கிச் சென்றமை முஸ்லிம் மக்களின் அரசியலில் பாரியதோர் இடைவெளியை உருவாக்கியது.

இருப்பினும் சவூதியில் இருந்து நாட்டுக்கு வந்த எம்.ரி.ஹசன் அலி, எம்.ஐ.எம். இஸ்மாயில் ஆகியோர் அஷ்ரப்பைச் சந்தித்து முஸ்லிம்களின் அரசியல் தனித்துவம் பற்றிக் கலந்துரையாடி பின்னர் மருதூர் கனியையும் சந்தித்தனர்.

முடிவாக 1986.11.29 ஆம் திகதி அரசியல் கட்சியாக உருவாக்கப்பட்டு 1988.02.11 ஆம் திகதி மரச்சின்னத்துடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேர்தல் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட கட்சியாக பிரகடனப்படுத்தப்பட்டது.

அன்றிலிருந்து முஸ்லிம்களின் அரசியல் குரலாக முஸ்லிம் காங்கிரஸ் திகழ ஆரம்பித்தது.

1988 ஆம் ஆண்டு இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தலில் பலரினது கொலை பயமுறுத்தலுக்கு மத்தியிலும் அஷ்ரப்பின் முழு முயற்சியினால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிட்டு வெற்றி கண்டது. அதனைத் தொடர்ந்து, 1989 ஆம் ஆண்டு இடம் பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கை முழுவதுமாக 202016 வாக்குகளைப் பெற்றது.

குறிப்பாக 4 ஆசனங்களுடன் நாடாளுமன்றம் சென்றது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ். இலங்கையின் நாடாளுமன்றத்தில் ஒரு கட்சியின் தலைவர் என்ற வகையில் அஷ்ரப் முன்வரிசையில் உட்கார்ந்து இருந்தார். இலங்கையில் இருந்து முஸ்லிம் கட்சி ஒன்றின் தலைவராக நாடாளுமன்றம் சென்றவர் அஷ்ரப்தான்.

1989 இல் நாடாளுமன்றம் நுழைந்த அஷ்ரப் தனது பேச்சாற்றலால் கணீரென்ற குரலில் நாடாளுமன்றத்தையே கலக்கிய மனிதர். தமிழ் பேசும் மக்களின் சுய கௌரவத்துக்காக அன்றைய நாடாளுமன்ற ஆசனத்தைப் பயன்படுத்திக் கொண்டார்.

1994.03.01 இல் கிழக்கில் பிரதேச சபை தேர்தல் நடைபெற்றது. அம்பாறை மாவட்டத்தில் ஏதேனும் பிரதேசசபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தோல்வியுற்றால், தான் தமது அமைச்சுப் பதவிகளை இராஜினாமாச் செய்வதாக அஷ்ரப் சபதம் செய்தார். முடிவோ ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தோற்றது. ஈற்றில் அஷ்ரப் தனது பதவியை இராஜனாமாச் செய்தார்.

1994.07.01 அன்று அஷ்ரப் சந்திரிக்காவுடன் ஒப்பந்தம் செய்தார். தனது அரசியல் சாணக்கியத்தால் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் ஒப்பந்தம் செய்து தேர்தலுக்கு முகம் கொடுத்தார். இத் தேர்தல் ஊடாக 9 ஆசனங்களைப் பெற்று ஆகஸ்ட் 16 இல் நாடாளுமன்றம் சென்றார்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவு இன்றி ஆட்சி அமைக்க முடியாது என்பதை நிருபித்துக்காட்டிய மாமனிதர் அஷ்ரப்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலத்தில் சிறந்ததோர் அமைச்சுப் பதவியினை பெற்று, அதன் ஊடாக அகதிகளாக அல்லலுறும் மக்களுக்கு தன்னாலான உதவிகளைச் செய்தார்.

இன, மத, பிரதேச வேறுபாடுகளை மறந்து இலங்கையர் என்ற ஓர் அடிப்படையினை வைத்தே பாரியதோர் உதவியினைச் செய்தார். ஏழைகளின் இல்லங்களை நோக்கி அஷ்ரப் சென்றார்.

முஸ்லிம் மக்களின் அரசியலை மையப்படுத்தும் வகையில் 23.10.1995 அன்று தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை உருவாக்கினார்.

இதுபோன்று ஒலுவில் துறைமுகமும் இவரது கனவு என்றால் மிகையாகாது. இவ்வாறு பல சேவைகளைச் செய்த அஷ்ரப் தமிழ் முஸ்லிம் உறவின் தேவை, காலத்தின் தேவை என அடிக்கடி கூறுவார். "அண்ணன் அமிர்தலிங்கம் ஈழம் பெற்று தராவிட்டால், தம்பி அஷ்ரப் பெற்றுத் தருவார்" என கூறியிருந்தமை எடுத்துக்காட்டாகும்.

"தமிழீழ விடுதலைப்புலிகளை அனுசரிக்காத எந்த தீர்வும் இலங்கைக்கு தீர்வாகாது" என அஷ்ரப் கூறியிருந்தமை, எமது பார்வையில் அவரொரு சமாதானப் பிரியரே என்பதைக் காட்டுகிறது. இதில் இரண்டாம் கருத்தே இல்லை.

அஷ்ரப் சிறந்ததொரு மனிதனாக வாழ்ந்து காட்டியுள்ளார். முஸ்லிம்களின் அரசியலில் புரட்சியை ஏற்படுத்தி உள்ளார். இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றை கற்பதற்கு அஷ்ரப்பின் வரலாறு காலத்தின் தேவை.

முஸ்லிம் சமூகம் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்ற ஓர் நோக்கில் அவர் உருவாக்கிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்று பல திசைகளிலும் உடைந்துள்ளது. இன்றிலிருந்தாவது தமது சுயநல அரசியலை விடுத்து அனைவரும் ஒன்றிணைந்து அரசியல் செய்வதே அன்னாருக்கு செய்யும் மரியாதை ஆகும்.

ஏ.ஏ.பளீல்
பொருளியல் விசேட துறை
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஸி. தொடரிலும் சச்சின் பங்கேற்பது சந்தேகம்
சிகிச்சையில் எந்த முன்னேற்றமும் இல்லையாம்!

''அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரிலும் சச்சின் டெண்டுல்கர் பங்கேற்பது சந்தேகமே. இடது முழங்கைக் காயத்துக்கு அவர் மேற்கொள்ளும் சிகிச்சையில் பெரிதாக எந்த முன்னேற்றமும் இல்லை'' – என ஒரு தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னணி வீரர் சச்சின் டெண்டுல்கர் காயம் காரணமாக அடிக்கடி அவதிப்படுகிறார். அவரது தற்போதைய பிரச்சினை 'டெனிஸ் எல்போ' (இடது முழங்கை காயம்). இந்தப் பிரச்சினை காரணமாக, ஹொலண்டில் நடந்த முத்தரப்புத் தொடர், இங்கிலாந்துக்கு எதிரான நாட்வெஸ்ட் தொடர் மற்றும் மினி உலகக்கிண்ணம் ஆகிய தொடர்களில் அவர் பங்கேற்கவில்லை.

அவரது காயத்துக்குத் தற்போது தீவிரச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. காரணம், இந்த ஆண்டின் மிகப் பெரிய டெஸ்ட் தொடர் என்று வர்ணிக்கப்படும் இந்தியா – அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் எதிர்வரும் ஒக்டோபர் 6ஆம் திகதி பெங்களூரில் ஆரம்பமாகிறது.

நான்கு ஆட்டங்களைக் கொண்ட இந்தத் தொடரை எப்படியும் கைப்பற்ற வேண்டும் என்ற முனைப்புடன் இந்தியாவுக்கு வருகிறது அவுஸ்திரேலியஅணி.



முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தொடரில் சச்சினின் பங்களிப்பு இந்திய அணிக்கு மிக, மிக அவசியம். ஆகவே, அவருக்கு முழு ஓய்வையும், சிகிச்சையும் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அளிக்கிறது.

ஆனால், சச்சினுக்கு வழங்கப்படும் சிகிச்சையில் பெரிதாக எந்த முன்னேற்றமும் இல்லை என்ற அதிர்ச்சித் தகவல் தற்போது வெளியாகியுள்ளது. அவுஸ்திரேலியாவிலிருந்து வெளியாகும் 'ஏஜ்' பத்திரிகையிலேயே இந்தப் பரபரப்புச் செய்தி வெளியாகியுள்ளது.

இந்தப் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:–

''இடது முழங்கை காயத்துக்கு வழங்கப்படும் சிகிச்சையால் சச்சினுக்கு எந்த முன்னேற்றமும் இல்லை'' என இந்திய அணியின் வைத்தியர் ஆன்ட்ரூவ் லீபஸ் சமீபத்தில் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையிடம் தெரிவித்துள்ளார். அவருக்கு ஏற்பட்ட காயம் குணமாக சற்றுக் காலதாமதம் ஆகும் என்றும்லீபஸ்தெரிவித்திருக்கிறார். ஆனால், சச்சினுக்கு சிகிச்சை வழங்கும் வைத்தியர்கள், ''இன்னும் இரண்டு வாரத்தில் அவர் முழுக் குணமடைந்து விடுவார்'' என்று தெரிவித்துள்ளனர்.

''எவ்வாறாயினும் அவர்கள் சொல்வது எந்தளவுக்கு உண்மை என்பது தெரியவில்லை. காரணம், இடது முழங்கையில் சச்சினுக்கு இருக்கும் வலி இன்னும் குறையவே இல்லை. ஒருவேளை விரைவாக சச்சின் குணமடைந்தாலும் கூட, ஒக்டோபரில் ஆரம்பமாகும் முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் அவர் பங்கேற்பது சந்தேகமே'' என அந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, இச்செய்தி வெளியிட்டிருப்பது அவுஸ்திரேலியப் பத்திரிகை என்பதால், இது எந்தளவுக்கு உண்மை என்பது தெரியவில்லை. தவிர, இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை வட்டாரங்களும் இந்தச் செய்தியைத் திட்டவட்டமாக மறுத்துள்ளன. அவுஸ்திரேலியத் தொடரில் சச்சின் நிச்சயமாக விளையாடுவார் என்று அவை தெரிவித்துள்ளன.

கிரீஸ் தலைநகர் ஏதென்ஸில் கடந்த 17 ஆம் திகதி ஆரம்பமான பாராலிம்பிக் போட்டிக்காக (ஊனமுற்றோர்க்கான ஒலிம்பிக்) இம்முறை இலங்கையிலிருந்து 6 வீரர்கள், 4 அதிகாரிகள் உள்ளிட்ட 10 பேர் கொண்ட குழு கிரீஸ் சென்றுள்ளது. இவர்கள் கிரீஸிற்கு செல்லும் முன் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடன் எடுத்துக்கொண்ட படத்தை மேலே காணலாம்.

மேஜர் ரஜீவ் துனுசிங்க, சந்துன் வாசனா பெரேரா, ஏபர்ட் சில்வா, டி.எ. எஸ்.பி.தென்னக்கோன், சமிந்த பிரியதர்ஷன மற்றும் ஜயலத் மனதுங்க ஆகிய 6 பேர் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளனர். இவர்கள் சக்கர நாற்காலி டெனிஸ், உயரம்பாய்தல், நீச்சல், குண்டெறிதல் ஆகிய போட்டிகளில் போட்டியிடுகின்றனர்.

இவர்களுடன் மேஜர் ராஜித அம்பேமொஹட்டி (பயிற்சியாளர்), கேர்ணல் எஸ்.சோமசிறி (மருத்துவர்), லக்ஷ்மன் கரவிட்டகே (தலைமை நிர்வாகி) ஆகியோரும் செல்கின்றனர்.

17 ஆம் திகதி ஆரம்பமாகிய இப்போட்டிகள் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை நடைபெறும். இப்போட்டியில் 270 நாடுகளிலிருந்து சுமார் 16 ஆயிரம் வீரர்கள் கலந்து கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது!

டெனிஸ் இல்லாட்டி என்ன? கைவசம் 'மொடலிங்' இருக்கே

அமெரிக்காவின் முன்னணி டெனிஸ் வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் டெனிஸ் விளையாட்டை விடத் தற்போது 'மொடலிங்' துறையிலேயே அதிகமான ஈடுபாட்டைக் கொண்டுள்ளார்.

நியூயோர்க்கில் உள்ள இயற்கை வரலாறு நூதனசாலையின் 100 ஆவது வருட விழாவிற்கு 'மொடலிங்' மங்கையாக வருகை தந்த செரீனாவைப் படத்தில் காணலாம்.

தேசிய விளையாட்டு விழாவில் மேல் மாகாணம் சாதனை

பதுளையில் நடைபெற்ற 30 ஆவது தேசிய விளையாட்டு விழாவில் மேல் மாகாணம் 166 பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்தது. (64 தங்கம், 5 வெள்ளி, 51 வெண்கலம்)

பதுளை விண்செண்ட் டயஸ் அரங்கில் கடந்த 7, 8, 9 , 10, 11 ஆகிய தினங்களில் நடைபெற்ற இப்போட்டியில் 5 புதியசாதனைகள் நிலைநாட்டப்பட்டன. விளையாட்டு வீரர்கள், ரசிகர்கள் உட்பட சுமார் 15 ஆயிரம் பேர் இவ்விளையாட்டு விழாவில் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் சிறந்த வீராங்கனையாக தென் மாகாணத்தைச் சேர்ந்த சுஜானி புத்திக, சிறந்த வீரராக வடமேல் மாகாணத்தைச் சேர்ந்த எ.பி.யஸசிறி அஜித் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

பதக்கங்களின் விவரம்:

மாகாணம்	தங்கம்	வெள்ளி	வெண்கலம்	மொத்தம்
மேல் மாகாணம்	64	51	51	166
மத்திய மாகாணம்	32	30	34	96
வடமேல் மாகாணம்	19	25	19	63
தென் மாகாணம்	12	15	20	47
வடமத்திய மாகாணம்	10	08	13	31
சப்ரகமுவ மாகாணம்	10	16	23	49
ஊவா மாகாணம்	06	07	12	25
வடகிழக்கு மாகாணம்	01	02	04	07

மேற்படி போட்டிகளில் முதலிடத்தைப் பெற்றவர்களுக்கு தங்கப் பதக்கங்களும், இரண்டாம் இடத்தைப் பெற்றவர்களுக்கு வெள்ளிப் பதக்கங்களும், மூன்றாமிடத்தைப் பெற்றவர்களுக்கு வெண்கலப் பதக்கங்களும் வழங்கப்பட்டன.

இறுதி நிகழ்வாகப் பாடசாலை மாணவ, மாணவியரின் கண்கவர் உடற்பயிற்சி நிகழ்ச்சிகளும், கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

பிரதம விருந்தினர்களாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும், விளையாட்டுத்துறை அமைச்சர் ஜீவன்குமாரதுங்கவும் கலந்துகொண்டனர்.

மேலும், மாகாணங்களின் விளையாட்டுத்துறை அமைச்சர்கள், செயலாளர்கள், ஊவா மாகாண, அபிவிருத்தி மற்றும் சுகாதார போஷாக்குத்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா ஆகியோர் கௌரவ அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர்.

டெனிஸில் கலக்கும் ரஷ்ய வீராங்கனைகள்

மகளிர்க்கான டெனிஸ் தரவரிசைப் பட்டியல் தற்போது வெளியிடப்பட்டுள்ளது. இதில் ரஷ்ய வீராங்கனைகள் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு ஆதிக்கம் செலுத்துகின்றனர்.

சர்வதேச மகளிர் டெனிஸ் அமைப்பு, தரவரிசைப் பட்டியல் ஒன்றை கடந்த செவ்வாய்க் கிழமை வெளியிட்டது. இதில் பிரான்ஸ் வீராங்கனை அமெலி மவுரெஸ்மோ முதலிடம் பிடித்துள்ளார். பிரான்ஸ் வீராங்கனை ஒருவர் தரவரிசையில் முதலிடம் பிடித்துள்ளது என்பது இதுவே முதல் முறையாகும். இதுவரை முதல்நிலை அந்தஸ்தில் இருந்த பெல்ஜிய வீராங்கனை ஜஸ்டின் ஹெனின் நான்காம் இடத்துக்குத் தள்ளப்பட்டார்.

அத்துடன், தரவரிசையில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு ரஷ்ய வீராங்கனைகள் இம்முறை ஆதிக்கம் செலுத்துகின்றனர். இதில் முதல் 15 இடங்களைப் பிடித்துள்ள வீராங்கனைகளில் ஆறு பேர் ரஷ்ய வீராங்கனைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இடம்	வீராங்கனை	நாடு	புள்ளி
1	அமெலி மவுரெஸ்மோ	பிரான்ஸ்	4527
2	அனஸ்டாசியா மைஸ்கினா	ரஷ்யா	4155
3	லிண்ட்சே டேவன்போர்ட்	அமெரிக்கா	4057
4	ஜஸ்டின் ஹெனின்	பெல்ஜியம்	4004
5	எலினா டெமன்டியேவா	ரஷ்யா	3368
6	குஸ்னட்சோவா	ரஷ்யா	3014
7	கிம் கிலிஜஸ்டர்ஸ்	பெல்ஜியம்	2815
8	ஜெனிபர் கேப்ரியாட்டி	அமெரிக்கா	2598
9	மரியா ஷரபோவா	ரஷ்யா	2570
10	செரீனா வில்லியம்ஸ்	அமெரிக்கா	2273
11	வேரா ஸ்வோனரிவா	ரஷ்யா	2146
12	வீனஸ் வில்லியம்ஸ்	அமெரிக்கா	2145
13	நாடியா பெட்ரோவா	ரஷ்யா	2009
14	அய் சுஜியாமா	ஜப்பான்	1938
15	பேட்டி ஸ்னீடர்	சுவீடன்	1753

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலையும் கொள்ளையும்!

1974 ஆம் ஆண்டு செப்டெம்பர், ஒக்டோபர், நவம்பர் மாதங்கள் அமெரிக்காவின் புளோரிடா மாநில மக்களின் மனதில் ஒரு வகையான பீதியை உண்டு பண்ணிய காலம் ஆகும்.

இரவில் மாத்திரமன்றி பகலிலும் மக்கள் தனிமையில் வீதியில் நடமாடவோ, வீட்டில் இருக்கவோ அஞ்சினர். இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்டு வந்த படுகொலைகள், ஆட்கடத்தல், கொள்ளைகள், கற்பழிப்புகள் போன்றவையே இதற்குக் காரணம்.

பொலிஸாரும் சம்பந்தப்பட்டோரைக் கைது செய்ய முடியாமல் தடுமாறினர். மேற்குறிப்பிட்ட மூன்று மாதங்களுக்குள் மாத்திரம் முப்பதுக்கும் மேற்பட்ட கற்பழிப்புகள், இருபதிற்கும் மேற்பட்ட கொலைகள் மற்றும் கொள்ளைகள் இடம்பெற்றிருந்தன. கொலையாளிகளைக் கண்டு பிடிக்க உளவுத்துறையினர் பம்பரமாகச் செயற்பட்டபோதிலும், எந்தவொரு சரியான துப்பும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

1974 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6 ஆம் திகதி இடம்பெற்ற இரு கொலைகள்தான் கொலையாளியைக் கண்டுபிடிக்கக் கூடிய துப்பை உளவுத்துறையினருக்குப் பெற்றுத் தந்தது. இருப்பினும் கொலையாளியைப் பிடிக்க உளவுத்துறையினர் மிகவும் சிரமப்பட வேண்டியிருந்தது.

நவம்பர் 6 ஆம் திகதி இரவு 9 மணி இருக்கும். தனது பாடசாலைத் தோழி ஒருத்தியின் பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்டு வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தாள் ஜெனிட்டா. இருட்டாகும் முன் வீடு திரும்பி விட வேண்டும் என்று நினைத்துத்தான் சென்றாள். தவிர்க்க முடியாத காரணத்தால் சற்றுத் தாமதிக்க வேண்டி ஏற்பட்டுவிட்டது.

மருத்துவமனை ஒன்றில் தாதியாக வேலை பார்க்கும் தனது தாய், இந்தவாரம் முழுவதும் இரவு வேலையாக இருப்பதால் மாலை ஆறு மணியளவில் அவர் வேலைக்குச் சென்றிருப்பார். தந்தை மாத்திரம் தான் தனியாக வீட்டில் இருப்பார். முடியுமானவரை விரைவாகப் போய்ச் சேர்ந்து விட வேண்டும் என்பதால், தான் வந்து கொண்டிருந்த டாக்ஸி டிரைவரை அவசரப்படுத்தினாள் ஜெனி.

வீடு வந்து சேரும் போது எப்படியும் ஒன்பதரை மணியாகிவிட்டது. டாக்ஸியை அனுப்பி விட்டு, வீட்டு முற்றத்தில் நுழையும் போதே ஜெனிட்டாவின் மனதில் ஒருவகையான பயம் தோன்றியது. வழமையாக எரிந்து கொண்டிருக்கும் வீட்டு முற்றத்து மின் விளக்குகள் அணைந்திருந்தன. வீட்டுக்குள்ளும் எங்கேயோ ஒரு மூலையில் மாத்திரம் மின் விளக்கின் வெளிச்சம் தெரிய, ஏனைய அனைத்து அறைகளும் இருளில் மூழ்கியிருந்தன. அந்த வெளிச்சத்தின் ஊடாக முன் வாசல் கதவு இலேசாகத் திறந்திருப்பது தெரிந்தது.

இந்தக் காட்சி, வீட்டின் உள்ளே ஏதோ நடந்திருக்கின்றது என்பதை ஜெனிட்டாவுக்குத் தெளிவுபடுத்தியது. அதிக நேரம் வெளியே ஒளிந்திருந்து, உள்ளே ஏதும் நடக்கிறதா என அவதானித்தாள். ஏதும் நடப்பதாகத் தெரியவில்லை.

ஆயினும், ஏதும் நடந்திருக்கலாம் என்று மட்டும் அவளுக்குத் தோன்றியது.

உள்ளே தந்தையாரின் நடமாட்டமோ அல்லது வேறு யாருடைய நடமாட்டமோ தெரியவில்லை. படபடத்த இதயத்துடன் இப்போது வீட்டுக்குள் நுழைந்தாள் ஜெனி.

உள்ளே நுழைந்ததும் தைரியத்தை வரவழைத்துக் கொள்ள முதலில் லைட் சுவிச்சைப் போட்டாள். அந்த வெளிச்சத்தில் அவள் கண்ட காட்சி அவளை மேலும் திகிலடையச் செய்தது. கதிரை, மேசைகள் எல்லாம் அலங்கோலமாய்க் கிடந்தன. மேசையின் மேல் கிடந்த காகிதங்களெல்லாம் அங்கும், இங்கும் பரந்து கிடந்தன. அவள் நிற்கின்ற அறையைத் தவிர அனைத்து அறைகளும் இருட்டில் மூழ்கிக் கிடந்தன. அந்த அறைகளில் ஏதோ மர்மம் இருப்பதை உணர்ந்தாள். அறையை விட்டு வெளியே ஓடுவோமா என்றும் நினைத்தாள்.

தந்தை எங்கே என்ற கேள்வி மனதில் எழ தந்தையைச் சத்தமிட்டு அழைத்தாள். பல முறை அழைத்தும் பதில் ஏதுமில்லை. பொலிஸுக்கு அறிவிப்பதற்காய் டெலிபோன் பக்கம் திருப்பினாள். டெலிபோன் வயர் அறுந்து காணப்பட்டது.

தனக்குள் ஓரளவு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு இருட்டில் மூழ்கிக் கிடந்த ஒரு அறைக்குள் நுழைந்தாள். லைட் சுவிச்சைப் போட்டாள். லைட்டைப்

தனக்குப் பின்னால் ஒரு உருவம் நிற்பதைச் சுவரில் விழுந்த மனித நிழலில் கண்டுவிட்டு திடுக்கிட்டுப் பின்புறமாகத் திரும்பினாள்.

வெறித்தன மான பார்வையுடன் ஒருவன் நின்று கொண்டிருந்தான். பரட்டைத் தலை. பல நாட்கள் பல்துலக்காது காவி படிந்த பற்களை நற நறவென்று கடித்த வண்ணமிருந்தான், கையில் கிறீஸ்கத்தி. இரத்தக் கறைபடிந்து அவனுடைய ஆடைகள் காணப்பட்டன. திறந்து விடப்பட்ட மார்புப் பகுதியில் முடிகள் நிறைந்திருந்தன.

மொத்தத்தில் அவன் ஒரு கொலை வெறியன் போலவே இருந்தான்.

ஜெனிட்டா பயந்து நடுங்கினாள். தன்னை ஏதும் செய்து விட வேண்டாம் எனக் கெஞ்சினாள். 16 வயது நிரம்பிய பருவமங்கையான அவளின் அழகும், கவர்ச்சியும், அவள் அணிந்திருந்த குட்டைப் பாவாடையும், அடி உயர்ந்த பாதணியும், வழவழப்பான கால்களும் அவனுக்குப் போதையை ஏற்றின.

காமத்தில் நிறைந்திருந்த அவனின் கண்கள் இரண்டும் சிகப்பேறித் தகதகவென எரிந்து கொண்டிருந்தன.

அவளை மெல்ல நெருங்கினான். அவள் தப்பி ஓட முற்பட்ட போது பாய்ந்து வளைத்துப் பிடித்தான். அவள் திமிறினாள். துடித்தாள்.

சத்தம் போட்டால் கத்தியால் குத்திக் கொலை செய்வேன் என்று கத்தியவண்ணம் வாயில் கைக் குட்டையைத் திணித்தான்.

அவள் அசைய முடியாமல் படுக்கையில் கிடந்த போது, தனது இச்சையைத் தீர்த்துக் கொண்டான்.

காலையில் வீட்டுக்கு வந்த ஜெனிட்டாவின் தாய், மகள் ஜெனிட்டா கழுத்து வெட்டப்பட்டு நிர்வாண கோலத்தில் கொலை செய்யப்பட்டு படுக்கையில் கிடந்ததைக் கண்டு அதிர்ச்சி அடைந்தாள்.

அடுத்த அறையைத் திறந்து கொண்டு நுழைந்த அவளுக்கு இன்னொரு அதிர்ச்சி. அங்கே... கணவனும் கொலை செய்யப்பட்ட நிலையில் காணப்பட்டான்.

இதனையடுத்து தகவல் பொலிஸாருக்குத் தெரிய வர, விரைந்து வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

விசாரணையின் போது, அந்த வீட்டில் இருந்து ஏராளமான பொருட்கள் அபகரிக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது. கொலை செய்யப்பட்ட தனது கணவனின் சில விலையுயர்ந்த ஆடைகள் மற்றும் கிரடிட் காட் ஒன்றும் காணாமல் போயிருப்பதை ஜெனிட்டாவின் தாய் பொலிஸாரிடம் கூறினாள்.

இவற்றினை மையமாக வைத்தே உளவுத்துறையினர் தேடுதல் வேட்டையை நடத்தத் திட்டமிட்டனர். அதிலும் கிரடிட்காட் மீதே கூடிய கவனம் செலுத்தினர். அதேவேளை, இக் கொலை இடம் பெற்ற இடத்தில் பாவித்து முடிந்த சில சிகரெட் துண்டுகளும் கண்டெடுக்கப்பட்டன. இதேவகையான பாவித்த சிகரட் துண்டுகள் இதற்கு முன் இடம் பெற்ற மூன்று கொலைச் சம்பவ இடங்களிலும் கண்டெடுக்கப்பட்டிருந்தன.

இதனை வைத்து இவ்வாறான கொலை மற்றும் கற்பழிப்புச் சம்பவங்களுக்கு ஒருத்தனே காரணமாக இருக்க முடியும் என்றும், தனது வெறியாட்டம் அடங்கியதும் கொலையாளி திருப்திக்காகச் சிகரெட் பாவிப்பவன் என்றும் உளவுத்துறையினர் ஊகித்தனர். தேடுதல் வேட்டை தீவிரமானது.

அந்தக் கிரடிட் காட் இலக்கத்தினையும், அக்காட்டினை வழங்கிய நிறுவனத்தையும் கொலை செய்யப்பட்டிருப்பவரின் மனைவி மூலம் தெரிந்து கொண்ட உளவுத்துறையினர், அந்த நிறுவனத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

நவம்பர் மாதம் 6 ஆம் திகதிக்குப் பின் அந்த கிரடிட் காட்டைப் பயன்படுத்திப் பொருட்கள் ஏதும் வாங்கப்பட்டிருக்கின்றனவா என விசாரித்த போது, அட்லாண்டாவுக்குச் செல்லுகின்ற வழியில் உள்ள ஒரு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இக்காட்டைப் பயன்படுத்திப் பெற்றோல் வாங்கியிருப்பதாகத் தங்களுக்கு பில் வந்திருக்கின்றது என அந் நிறுவன அதிகாரி ஒருவர் கூறினார். இது நவம்பர் மாதம் 7 ஆம் திகதி இடம்பெற்றிருந்தது.

இதனையடுத்து உளவுத்துறையினர் அந்த எரிபொருள் நிலையத்துக்குச் சென்று விசாரணையை மேற்கொண்டனர். நீண்ட ஒல்லியான ஒருவர் தனது காருக்கு நவம்பர் மாதம் 7 ஆம் திகதி காலை பெற்றோல் நிரப்பி விட்டு, அட்லாண்டா நோக்கிச் சென்றதாக அந்த எரிபொருள் நிலையத்தில் உள்ளவர்கள் தெரிவித்தனர்.

லண்டனில் வெளியாகின்ற டெய்லி எக்ஸ்பிரஸ் என்ற செய்திப் பத்திரிகை ஒன்றில் பத்திரிகையாளராக உள்ள ஜூலியட் நவம்பர் 20 ஆம் திகதி அட்லாண்டா ஹொலிடே இன் ஹோட்டலில் இடம்பெற்ற சர்வதேசக் கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொள்வதற்காக வந்திருந்தாள்.

தனிமையில் வந்திருந்த ஜூலியட்டுக்கு, பீட்டர் ஜோனின் நட்பு பெரும் உதவியாய் இருந்தது. பீட்டர் ஜோன் வியாபார நிமித்தம் அந்த ஹோட்டலில் தங்கி இருந்தான். அங்கு தற்செயலாய்ச் சந்தித்த இருவரும் நண்பர்களாய் மாறினர். கருத்தரங்கு ஒரு வாரமாய் இடம் பெற்றது. பீட்டர் ஜோன் அருகில் இருந்தால் ஜூலியட்டுக்கு மிகவும் மகிழ்ச்சியாய் இருந்தது. அதனை ஜோனும் உணர்ந்திருந்தான். கருத்தரங்கு தவிர்ந்த ஏனைய நேரங்களில் இருவரும் அட்லாண்டாவை வலம் வந்தனர். ஜோனுக்கு அட்லாண்டா பற்றிய நல்ல அறிவு இருந்தால் எல்லா இடங்களையும் ஜூலியட்டுக்குச் சுற்றிக் காட்டினான்.

இருவரும் ஒருவருக்கொருவர் பூரணமாக அறிமுகமாகிக் கொண்டனர். இருவரிடையேயும் ஓர் ஒற்றுமை தெரிய இருவரும் காதலராக மாறினர். தான் வந்த வேலை முடிந்ததும் அவனை விட்டுப் பிரிந்து சென்றாள் ஜூலியட். மீண்டும் இருவரும் சந்திப்பதற்கான இடத்தையும், நேரத்தையும் இருவரும் தீர்மானித்துக் கொண்டனர்.

டிசம்பர் மாதம் முதலாம் திகதி புளோரிடா மாநிலத்தில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் இருவரும் மீண்டும் சந்தித்தனர். பகல் நேரம் என்பதால் பகல் சாப்பாட்டையும் முடித்துக் கொண்டனர். சாப்பிட்டதற்கான பணத்தைக் கட்டுவதற்காக ஜோன் பீட்டர் வழமை போல் தனது கிரடிக் காட்டை எடுத்து ஹோட்டல் வெய்ட்டரிடம் நீட்டியபோது திடீரெனப் பாய்ந்து வந்து ஒருவர் கிரடிட் காட்டைக் கைப்பற்றினார்.

அதனைத் தொடர்ந்து நாலா பக்கங்களிலும் இருந்து வந்த பொலிஸார் ஜோன் பீட்டரைச் சூழ்ந்து கொண்டனர். சற்றும் தாமதியாமல் ஜோன் பீட்டரும், ஜூலியட்டும் பொலிஸ் வாகனத்தில் ஏற்றப்பட்டு பொலீஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

அந்தக் கிரடிட் காட் கிடைத்த விதம் பற்றி பொலிஸார் ஜோன் பீட்டரிடம் கேள்வி எழுப்பினர். தன்னுடைய பெயரில் இல்லாத அந்த கிரடிட் காட், தனது நண்பர் ஒருவருடையது என்று முதலில் அவன் கூறினான்.

பொலிஸாரின் கடும் தாக்குதலினைத் தொடர்ந்து ஜோன் பீட்டர் உண்மையைக் கூறினான். நவம்பர் மாதம் 6 ஆம் திகதி இரவு மெக்லன் என்பவரையும், அவரது மகளையும் கொலை செய்த பின்பு, அவ் வீட்டில் இருந்தே இந்தக் கிரடிட் காட்டை எடுத்ததாக ஜோன் பீட்டர் கூறினான். அத்தோடு கடந்த மூன்று மாதங்களாக இடம் பெற்று வந்த கொலைகள், கற்பழிப்புகள் போன்றவற்றுக்குத் தானே காரணம் எனவும் ஒத்துக் கொண்டான்.

அடுத்தடுத்து இடம் பெற்ற காதல் தோல்விகளால் ஏற்பட்ட விரக்தி மனப்பான்மையே இதற்குக் காரணம் எனவும் தெரிவித்தான். நீதிமன்ற விசாரணையை அடுத்து ஜோன் பீட்டர் குற்றவாளியாகக் காணப்பட்டு தூக்கிலிடப்பட்டான்.

கொலையாளியைக் கண்டுபிடிக்க ஒரு பத்திரிகையாளராக வேடம் போட்டுத் துப்புக்களைப் பெற்ற உளவுத் துறையைச் சேர்ந்த ஜூலியட்டுக்கு அரசாங்கம் பாராட்டைத் தெரிவித்தது.

டீ.வியும் சிறுமியரும்

அதிகமாக 'டீவி' பார்க்கும் சிறுமிகள் விரைவில் வயதுக்கு வந்து விடுவதாக இத்தாலி நாட்டு விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

இத்தாலி நாட்டின் புளோரன்ஸ் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள், 'டீவி' பார்ப்பதால் உடல் ரீதியாக ஏற்படும் பாதிப்புகள் குறித்து ஆராய்ச்சி நடத்தினர்.

டஸ்கானி மாகாணத்தில் அரிசோ நகரத்து சிறுமிகள் 74 பேரிடம் இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. இந்த சிறுமிகள் ஆறு முதல் 12 வயதுடையவர்கள்.

இவர்கள் தினமும் மூன்று மணி நேரம் 'டீவி' நிகழ்ச்சிகளை பார்ப்பவர்கள், அது மட்டுமல்லாது வீடியோ கேமும் விளையாடுவர். இவர்கள் ஒரு வார காலத்துக்கு 'டீவி' நிகழ்ச்சிகள் பார்ப்பதும், வீடியோ கேம் விளையாடுவதும் தடுக்கப்பட்டது.

பின்னர் அவர்களைச் சோதனை செய்ததில், அவர்களின் உடலில் மெலடோனின் ஹோர்மோன் அளவு 30 சதவீதம் அதிகரித்து இருந்தது. தூக்கத்தை வரவழைப்பதற்காக உடலில் சுரககும் இந்த ஹோர்மோன், பெண்கள் வயது வருவதற்கும் முக்கியமான காரணமாக உள்ளது.

இந்த ஹோர்மோன் குறைவாகச் சுரந்தால் பெண்கள் விரைவில் வயதுக்கு வந்து விடுவர். அதிகமாக அதிகமாக சுரந்தால் அவர்கள் வயதுக்கு வருவது தள்ளிப்போகும்.

'டீவி'யிலிருந்து வரும் கதிர் வீச்சுக்கள் சிறுவர்களின் உடலில் பாதிப்பை ஏற்படுத்தி அவர்களை மிகவும் சிறு வயதிலேயே வயதுக்கு வரச்செய்வதாக இந்த ஆராய்ச்சியாளர்கள் தங்களது ஆய்வில் கண்டு பிடித்துள்ளனர்.

இது குறித்து ஆராய்ச்சி செய்த விஞ்ஞானி ராபர்ட் சால்டி குறிப்பிடுகையில், ''1950ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், தற்போதுள்ள சிறுமிகள் விரைவில் வயதுக்கு வந்து விடுகிறார்கள். 'டீவி' யினுடைய பாதிப்பும் இதற்கு ஒரு காரணமாக அமைந்து விடுகிறது. 'டீவி' பார்ப்பது நல்லதா கெட்டதா? மன ரீதியாக பாதிப்பை ஏற்படுத்துகிறதா? என்பதை பற்றி நாங்கள் கூறவில்லை. 'டீவி'யால் நிச்சயமாக உடல் ரீதியான பாதிப்பு ஏற்படுகிறது, என்பது தான் எங்கள் ஆராய்ச்சியின் முடிவு''—என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் சொல்லும் பழமொழி

அன்பான தம்பி, தங்கைகளே! மேலே உள்ள படங்கள் ஏதோ ஒரு பழமொழியை நினைவூட்டுகின்றன. அவை என்ன பழமொழிகள் என்பதை கண்டுபிடித்து விடையை தபால் அட்டையில் எழுதி அனுப்புங்கள். சரியான விடை எழுதும் 5 பேரின் பெயர் விபரம் சுடர் ஒளி பாலமலரில் பிரசுரமாகும். கடந்த 23 ஆம் திகதி சுடர் ஒளியில் உள்ள பழமொழிகளுக்கு சரியான விடை எழுதி அனுப்பியவர்களது பெயர் விபரம் வருமாறு:

1. சி.ரஜனி, யாழ். இந்து மகளிர் கல்லூரி. 2. ந.மதுசன், 310/14 காலி வீதி கொழும்பு 06. 3. ந.சுதர்சன், வட்டு. இந்து கல்லூரி, வட்டுக்கோட்டை. 4. லோ.நிரோஜா, கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி. 5. பி.மேகலா, கோண்டாவில் வடக்கு கோண்டாவில்.

அனுப்பவேண்டிய முகவரி:

'படங்கள் சொல்லும் பழமொழி',

சுடர் ஒளி பாலமலர், 85, ஜயந்தமல்லி மாவத்தை, கொழும்பு 14

விஞ்ஞான விளக்கங்கள்

* இரவு வானில் ஒளிரும் பொருட்களுள் சந்திரன் முதலிடத்தை வகிக்கிறான்.
* சூரியன் ஒளி சந்திரனில் பட்டுத் தெறிப்பதனால் சந்திரன் எமக்கு காட்சி அளிக்கின்றது.
* சந்திரனின் ஒரு பக்கத்தை மட்டுமே எம்மால் பார்க்க முடியும். காரணம் சந்திரன் புவியை ஒரு முறை சுற்றும் போது தனது அச்சிலும் ஒரு முறையே சுழல்கின்றது.
* புவிக்கு மிகக் கிட்டவுள்ள வான் பொருளாகிய சந்திரனின் சுழற்சிக் காலம் 27.3 நாட்களாகும்.
* புவியின் மேற்பரப்பில் 71% பங்கு, நீரால் மூடப்பட்டுள்ளது. இதனுடன் புவியைப் போர்த்திய வண்ணம் வளிமண்டலமும் காணப்படுகின்றது.
* விண்ணில் மிகத் தொலைவில் இருந்து எமது புவியை பார்க்கும் போது பிரகாசத்துடன் ஒளிர்கின்ற நீலநிறக் கோளாகக் காட்சி தரும்.
* உயிரினங்கள் வாழக் கூடிய ஒரே ஒரு கோளானது புவி ஆகும். ஏன் என்றால் உயிரினங்கள் வாழ்வதற்குத் தேவையான சூரிய ஒளிச் சக்தி, நீர், வளி என்பன தாராளமாகக் கிடைக்கின்றன.
* சூரியன், புவி, சந்திரன் என்பன ஒரே நேர் கோட்டில் அமையும் போது சூரிய கிரகணம் ஏற்படும்.
* புவி கோளவடிவமானதென கி.மு. ஆறாம் நூற்றாண்டில் பைதகரஸ் என்பவரும் 200 ஆம் நூற்றாண்டில் அரிஸ்ரோட்டில் என்பவரும் கூறியுள்ளனர்.

த.றஜிதா, தரம் 8
மு.வி.மகா.வித்தியாலயம்.

உலகில் முக்கிய எரிமலைகள்

எரிமலைகள்	நிலையம்	உயரம் (மீற்.)
01. கொட்டோபக்சி	ஈக்வடோர்	5897
02. மவுன்ற் வறங்கல்	அலாஸ்கா	4267
03. மவுனாயோவா	ஹவாய்	4170
04. எறிபஸ்	அந்தாட்டிக்கா	3718
05. எற்னா	சிசிலி	3340
06. சில்லன்	சிலி	3200
07. வில்லாறிக்கா	சிலி	2842
08. நுவா	நியூசிலாந்து	2796
09. அசாமா	ஜப்பான்	2542
10. ஹெக்லா	ஐஸ்லாந்து	1491

து.துஷி
யா/வேம்படி மகளிர் கல்லூரி

சிறார்களின் கைவண்ணம்

செ.டிலக்ஷன்
யாழ். பரியோவான் கல்லூரி.

பா.காஸ்ரோ, தரம் 9
கிளி/இந்து கல்லூரி.

அறிவியல் கருவிகள்

1. மின்னோட்டத்தின் சக்தியை அளவிடும் கருவி யாது? **அம்பியர் மானி**
2. காற்றின் வேகத்தையும் திசையையும் அளவிட உதவும் கருவி எது? **அனில மானி**
3. சூரியகதிர் வீச்சை அளவிட உதவும் கருவி எது? **ஏற்றி மானி**
4. மின்சாரத்தினை அளவிட உதவும் கருவி எது? **கல்வனோ மானி**
5. மிக உயர் வெப்பநிலையை அளவிட உதவும் கருவி எது? **தீ மானி**
6. வாயுக்களின் அமுக்கத்தை அளவிடும் கருவி எது? **மெலி மானி**
7. மலையின் உயரத்தை அளக்க உதவும் கருவி எது? **குத்துயர மானி**

செ.ரவிசாந், தரம் 11,
யா/ வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்பெயர் மண்ணிலே புதியதோர் பரிமாணம்

வழக்காடு மன்றத்தின் தீர்ப்பை கோப்பாய் சிவம் வழங்குகிறார்

லண்டன் மாநகரில் கடந்த மாதம் நடைபெற்ற கலை விழா பற்றி லண்டனில் இருந்து வெளியாகும் பத்திரிகைகளும், ஊடகங்களும் நல்ல பல கருத்துக்களை வெளியிட்டிருந்தன. ஆம், அது தான், ''பூபாள ராகங்கள் 2004'' கலை விழா. பிரித்தானியப் பிரதமர், பிரித்தானிய எதிர்க்கட்சித் தலைவர், லண்டன் மேயர் உள்ளிட்ட பிரபலமான பலர் இந்த நிகழ்வுக்கு தமது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்து இருந்தனர்.

'யாழ் கம்பர் மலை வித்தியாலயம் – கொம்மந்தறை, பழைய மாணவர் சங்கம் – ஐக்கிய இராச்சியம்' ஐந்தாவது ஆண்டாக இந்த நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தது.

வழமை போல மிக அமைதியான முறையில், மிக நேர்த்தியான வகையில், மண்டபம் நிறைந்த மக்கள் கூட்டம் கண்டு கழிக்கச் சிறப்புற நடைபெற்று முடிந்தது இந்த நிகழ்வு.

மேற்கு லண்டன் கிறீன் பேட் மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவினை மிகுந்த சிரமத்தின் மத்தியில் தனது உளப்பூர்வமான உழைப்பினால் ஏற்பாடு செய்திருந்தார், கம்பர் மலை வித்தியாலயத்தின் புகழ் பூத்த பழைய மாணவர் மகாலிங்கம் சுதாகரன். விழா அமைப்பாளராய், மலர் ஆசிரியராய், சர்வதேச ஒருங்கிணைப்பாளராய், விளையாட்டு இணைப்பாளராய், பல பணிகளைச் சிறப்புற செய்யும் இவரும், இவருக்கு பக்க பலமாக நின்றுழைக்கும் மேற்படி வித்தியாலய பழைய மாணவர்களும் பாராட்டப்படவேண்டியவர்கள். ஈழத்தின் எந்த ஒரு பாடசாலைக்கும் கிடைக்காத ஒரு பெருமை சுதாகரன் மூலம் கம்பர் மலை வித்தியாலயத்திற்கு கிடைத்துள்ளது. இது இலங்கை வாழ் தமிழ் மக்கள் அனைவருக்கும் கிடைத்த பெருமை என்றே கருதலாம்.

பிரித்தானியப் பிரதமர் ரொனி பிளேயர் தனது வாழ்த்துச் செய்தியில், விழா சிறப்புற வாழ்த்துவதோடு, இவர்களின் தமிழ்ச் சமூகப்பணி அடுத்த தலை முறைக்கும் எடுத்துச்செல்லப்படவேண்டும் என்று மேலும் வாழ்த்தியுள்ளார்.

பல முன்னணி வர்த்தக நிறுவனங்கள் விழாவுக்கு அனுசரனை வழங்கப் போட்டி போடுவதையும் இங்கே குறிப்பிட்டாக வேண்டும்

'' பூபாள ராகங்கள் 2004'' விழாவுக்கு பிரதம விருந்தினராக வட கிழக்கு மாகாண கல்வியமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் சு.மகாலிங்கம் அவாகளும், கௌரவ விருந்தினராக இங்கிலாந்தின் தமிழ் அரசியல் வாதி சட்டத்தரணி சி.செல்வராஜா அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக பிரபல போச்சாளர், இலக்கிய வாதி கோப்பாய் சிவம் அவர்களும், இசையமைப்பாளர் ஈழ நல்லூர் அருணா அவர்களும், விரிவுரையாளர் பொப்பிசைப் பிதாநித்தி கனகரத்தினம் அவர்களும் கலந்து கொண்டனர்.

விழா நிகழ்வுகளை அன்பு அறிவிப்பாளர் பி.எச். அப்துல் ஹமீத் அவர்களும், ஊடகவியலாளர் திருமதி. ஆனந்தராணி பாலேந்திரா அவர்களும் தொகுத்து வழங்கினார். விழாவில் வெளியிடப்பட்ட மலரினை தமிழருவி த. சிவகுமாரன் மதிப்பீட்டுரை செய்தார்.

மலரின் முதற் பிரதிகளை மலராசிரியர் ம. சுதாகரன் அவர்களிடமிருந்து பிரித்தானியப் பிரபலங்களான WILSON ESTATE AGENTS நிறுவன முகாமையாளர் அருண், தீபம் தொலைக்காட்சி இயக்குநர் திருமதி சபனிதா மனோகர், கண்மணி ஜூவலரி உரிமையாளர் திருமதி கிருஷ்ணவேணி ஸ்ரீ முருகன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். விழாவில் உலகளாவிய ரீதியில் நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டன. மூன்றாம் பரிசினைப் பெற்றவர் லண்டனில் வாழ்வதால், அவர் மேடையில் தனது சான்றிதழையும், பரிசினையும் பலத்த கரகோசத்திற்கு மத்தியில் பெற்றுக் கொண்டார். சாரங்கா என்ற திருமதி குணாளினி தயானந்தன் அவர்களே அவர். அதனை விட, இவ்வாண்டுக்கான பூபாள ரகங்கள் விருது ஸ்ரீமதி ராகினி ராஜகோபால் அவர்களுக்கும் வழங்கப்பட்டது. விருதுகளை முறையே திருமதி அப்துல் ஹமீத், திரு.சி. செல்வராஜா ஆகியோர் வழங்கி கௌரவித்தனர். கடந்த ஆண்டு விருதினை சி.செல்வராஜா அவர்கள் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

''பூபாள ராகம் 2004 ''விழா பற்றி நோக்குவேமானால், விருந்தினர்கள் யாவரும் மாலை 5.15 மணியளவில் மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டு, அதன் பின்னர் விழா ஆரம்பமானது. மங்கல விளக்கை திரு.திருமதி மகாலிங்கம் ஆகியோரும், காப்பாளர்களான திரு. திருமதி. துரைராஜா ஆகியோரும் ஏற்றி வைத்தனர். மௌன வணக்கம், திருமுறை ஓதுதல், தமிழ்மொழி வாழ்த்து, பாடசாலைக் கீதம் என்று தொடர்ந்தது. விழாஅமைப்பாளர் திரு ம.சுதாகரன் அனைவரையும் வரவேற்று வரவேற்புரையும், தலைவர் திரு. இ. இரகுநாதன் தலைமை உரையையும், பிரதம விருந்தினர் திரு. அ.மகாலிங்கம் சிறப்புரை யையும் நிகழ்த்தினர். நன்றியுரையை செயலாளர் திரு.த. சுரேந்திரதாஸ் நிகழ்த்த, அதிஷ்டசாலிகள் மூவருக்கு தங்கப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

கலை நிகழ்வுகளாக, ஐரோப்பாவின் முன்னணி நடன ஆசிரியை ஸ்ரீமதி ராகினிராஜகோபால் அவர்களின் நாட்டியாலயா நடனப் பள்ளி மாணவிகளின் ''நாட்டியக்கலையரங்கம்'' நிகழ்வு நான்கு வகையான நடனங்களாக இடம்பெற்று ரசிகர்களின் கண்ணுக்கு பெருவிருந்தளித்தது. மிகவும்சாதுரியமான முறையில் நடன அமைப்பு இருந்தது. ரசிகர்களின் நினைவலைகளை தாயகத்திற்கு இழுத்துச் சென்றிருக்கும் நிகழ்வுகள் அவை.

தொடர்ந்து கோப்பாய் சிவம் அவர்கள் நீதிபதியாகக் கலந்து கொள்ள, குற்றவாளிக் கூண்டில் 'தமிழ் பெற்றோர்' ஏற்றப்பட்டு, தங்களுடைய ஆசைகளை பிள்ளைகள் மீது திணிக்கின்றார்கள் என்ற குற்றத்தை கவிஞர் இராஜமனோகரன், கரவை கவி வீரவாகு ஆகியோர் சுமத்த ச. ஆனந்த தியாகர், திருமதி மாதவி சிவலீலன் ஆகியோர் எதிர்த்து வாதிட்டனர். வாத, பிரதிவாதங்கள் சூடானவையாகவும், சுவையானவையாகவும் இருந்தன. இறுதியில் பெற்றோர் விடுதலை செய்யப்பட்டனர். நீதிபதியால் சில அறிவுரைகள் வழங்கப்பட்டன.

அடுத்து க.பாலேந்திரா அவர்களின் நெறியாள்கையில் தமிழ் அவைக்காற்றுக் கழகம் வழங்கிய 'சம்பந்தம்' என்ற நகைச்சுவை நாடகம் இடம்பெற்றது. நடிகர்களின் விவேகமான நடிப்பும், நகைச்சுவை நிறைந்த காட்சிகளும் ரசிகர்களை சிரிக்கவும், சிந்திக்கவும் வைத்தன.

அதனை அடுத்து ரசிகர்களுக்கான போட்டி நிகழ்ச்சியாக ''தமிழுடன் இரண்டு நிமிடங்கள்'' இடம்பெற்றது. அன்பு அறிவிப்பாளர் பி.எச். அப்துல் ஹமீத் போட்டி நிகழ்வை நடத்த, துரை, எஸ்கே. ராஜன் ஆகியோர் நடுவர்களாக கடமையாற்றினர். பல போட்டியாளர்கள் கலந்து கொண்டு மண்டபம் நிறைந்த மக்களுக்கு மகிழ்வூட்டினர். வெற்றி பெற்றவர்களுக்கு தங்க நாணயங்கள் வழங்கப்பட்டன.

செயலாளர் சுரேந்திரதாஸ் நன்றியுரை

இறுதியாக ஈழ நல்லூர் அருணாவின் தலைமையில் லண்டனில் பிரபலமான பெண் கீபோட் வாத்தியக் கலைஞர்கள் துஷி, தனு ஆகியோரும், நண்பர்களும் இணைந்து வழங்கிய கான மழை இன்னிசை நிகழ்வு இடம் பெற்றது. இதில் பொப்பிசைப் பாடகர் நித்தி கனகரட்ணம் சிறப்புப் பாடகராகக் கலந்து கொண்டு பாடிக் கலகலப்பூட்டினார். அருணாவும் அவரால் இசையமைக்கப்பட்ட 'பூபாள ராகங்கள்' பாடலைப் பாடினார். கலைந்து செல்லாமல் இருந்த ரசிகர் கூட்டம் 'கானமழை' நிகழ்வினை நன்கு ரசித்ததைக்காண முடிந்தது. இரவு பன்னிரண்டு மணியளவில் ஐந்தாவது ''பூபாள ராகங்கள்'' இனிது நிறைவு பெற்றது. லண்டன் வாழ் கலா ரசிகர்கள் மனதில் என்றும் மறக்க முடியாத நிகழ்வகளாய் ''பூபாள ராகங்கள்'' விழாவின் நிகழ்வுகள் ஆழப் பதிந்திருந்தன. உண்மையாகச் சொன்னால் பொப்பிசை பிதா நித்தி மலரில் எழுதியதைப் போல, '' ஒரு மலை சிகரமாகிறது'' என்பது தெளிவாகின்றது.

–லண்டனிலிருந்து
கொம்மந்தறையூரான்–

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஸ்மைல் ப்ளீஸ்...

நாம் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுமா? அல்லது பிரச்சினைகளை எதிர் கொண்டு அழைத்து சவால் விட வேண்டுமா? அப்படியெனில், எந்தச் சூழ்நிலையிலும் நாம் பதட்டம் கொள்ளாமல் புன்முறுவல் பூத்தபடி கடமையாற்றக் கற்றுக்கொள்ள வேண்டும்.

நாம் தொடர்ந்து முயற்சிகள் செய்து வருகின்ற போதிலும் தோல்வியையே தழுவிக் கொண்டிருப்போமேயானால், எமது நடைமுறைகளையும், நடவடிக்கைகளையும் நாம் மாற்றிக்கொள்ள முற்படவேண்டுமே ஒழிய விதியையோ, மற்றவர்களையோ குற்றஞ்சாட்டிக்கொண்டிருப்பதில் எந்தவித பயனும் இல்லை. அத்தகைய சூழ்நிலைகளில் நிலைகுலையாமல் இருக்க அத்தியாவசியமான ஒரு குணாதிசயம் புன்முறுவல் எனப்படுகிற புன்சிரிப்புத்தான்.

இன்றைய காலகட்டத்தில் எம்மைப் பதட்டப்பட வைக்கக் கூடிய விடயங்கள் பல உள்ளன. கல்வி சம்பந்தப்பட்டவை தவிர தனிப்பட்ட விடயங்களிலெல்லாம் கூடக் குழப்பம் விளைவிக்கத்தக்க, பரபரப்புத் தரத் தக்க விடயங்கள் பல உள்ளன. அவற்றினால் பாதிப்பு ஏற்பட நாமே வழிவகுத்துக்கொண்டால், அவை பெரிய பிரச்சினைகளில் எம்மைக் கொண்டு சென்று தள்ளிவிடும். உடல் ரீதியாக மட்டுமல்ல, மனரீதியாகவும் தான். ஆக மனதைக் கட்டுப்பாட்டினுள் கொண்டு சென்று பக்குவமாக வைத்துக்கொள்ள நாம் பழகிக்கொள்ள வேண்டும். அதற்கு முதற்படி மனதை மகிழ்ச்சியாக வைத்துக்கொள்வது தான். அதன் வெளிப்பாடு என்றும் புன்னகை பூக்கும் முகம் தான். அதனால் தான் அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்றார்கள் போலும்.

மனித மனமென்பது தூங்குகின்ற பயில்வான் போன்றது. சரியான முறையில் தட்டி எழுப்பாவிடின் அதன் சக்தி வீணாகிவிடும். எனவே அதற்கு நாம் இடம் கொடுக்காமலிருக்க மனதையும், உடலையும் பக்குவமாகப் பாதுகாத்திட வேண்டும். அதற்குரிய ஒரே வழி மனதை மகிழ்ச்சியாகவும், முகத்தைப் புன்முறுவல் பூத்தபடி வைத்திருப்பதுமாகும். திறமையும், சாமர்த்தியமும் நிரம்பப் பெற்றவர்கள் கூட கடமையின் சுமை காரணமாக மனம் நொந்து போவதுண்டு. அதைத் தவிர்க்க, மனதை மட்டுமல்ல, முகபாவத்தினையும் கூட திடமாக வைத்துக்கொள்ளப் பழக வேண்டும்.

ஏசு நாதர் சொன்னது போல் எந்தச் சூழ்நிலையிலும், எந்தக் காரணத்துக்காகவும் பொறுமையிழந்து புன்னகையை விட்டுவிடலாகாது. யாராவது நேரிடையாக வந்து முகத்தில் அடித்தால் போல் ஏசினால் கூட நிதானத்தை இழந்து விடலாகாது.

நாம் நினைத்தது நிறைவேறாமல் போனால் கூட, புன்னகை மாறாத பொலிவோடு காரண, காரியங்களை ஆராய முற்பட வேண்டுமே தவிர, துவண்டு போய்விடக்கூடாது. அத்தகைய ஒரு வழக்கத்தைப் பழக்கப்படுத்திக்கொள்வோமேயானால் வெற்றி நிச்சயம். எனவே வாழ்க்கையில் வெற்றி பெற மாறாத புன்னகையுடன் கடமையாற்றுவதே சிறந்த வழி.

****

சேலை கட்டும் பெண்ணே

மூன்று அல்லது நான்கு முறை கட்டிய பிறகு பட்டுப் புடைவையைத் துவைத்தால் போதுமானது.

கரையையும், மற்றப் பகுதிகளையும் தனித்தனியாகத் துவைக்க வேண்டும்.

கைத்தறி இயந்திரம் மூலம் நெய்யப்பட்ட பிரிண்டட் செய்யப்பட்ட அல்லது கிரேப் ஆகிய அனைத்து வகைப் பட்டுப் புடைவைகளும் நீண்ட காலத்திற்கு பயன்பட, அவற்றைத் தரமான உலர் சலவைக் கடைகளில் (டிறை கிளீனர்) கொடுத்து சலவை செய்வதே சிறந்தது.

பட்டுப் புடைவையாயின் சாயம் போகாமல் அல்லது வண்ணம் பரவாமல் (புடைவையின் கரைச் சாயம், புடைவையின் உடலில் படியாமல்) இருக்க உலர் சலவை சிறந்தது.

தவிர்க்க முடியாத காரணத்தால் பட்டுப் புடைவைகளை உலர் சலவை செய்ய முடியவில்லையெனில், வீட்டிலேயே துவைக்கலாம். ஆனால், இதற்குப் பிரத்தியேகக் கவனம் தேவை.

முதல், இரண்டு அல்லது மூன்று முறை வீட்டில் துவைக்கும் போது, சாதாரண, சுத்தமான நீரிலேயே துவைக்க வேண்டும்.

சாதாரண நீரில் இரண்டு அல்லது மூன்று முறை துவைத்த பிறகு, தரமான சலவைத் தூள் பவுடரை நீரில் நன்றாகக் கரைத்த பின், புடைவையை அதில் நனைக்க வேண்டும்.

பட்டுப் புடவைகளை அதிக நேரம் தண்ணீரிலே ஊற வைக்கக் கூடாது. பல புடவைகளை சேர்த்துச் சுருட்டியும் நீரில் நனைக்கக் கூடாது.

வீட்டில் துவைக்கும் போது அடித்துத் துவைக்கக் கூடாது. சலவை இயந்திரத்தில் போட்டுத் துவைக்கக் கூடாது. நிழலில் காய வைக்க வேண்டும். அதிக சூட்டில் இஸ்திரி செய்யக் கூடாது.

பெண்

சசி

சமையல் குறிப்பு

பாதாம் கேக்

தேவையான பொருட்கள்

பாதாம் பருப்பு	100கிராம்
சீனி	200கிராம்
தண்ணீர்	1/8 கப்
பால்	2 மேசைக்கரண்டி
பால்கோவா	100கிராம்
குங்குமப் பூ	சிறிதளவு
நெய்	3மேசைக்கரண்டி
ஏலக்காய்	3,4

செய்முறை

பாதாம் பருப்பைக் கொதிக்கும் தண்ணீர்விட்டு 10நிமிடம் கழித்துத் தோல் எடுத்து நன்கு வெயிலில் காயவைக்கவும். நன்கு காய்ந்ததும் மிக்ஸியில் அரைத்துக்கொள்ளவும். விரும்பினால் பத்து முந்திரிப்பருப்புகளையும் சேர்த்துக்கொள்ளலாம்.

ஆனால், அதையும் வெயிலில் காயவைத்து தூளாக்கிக் கொள்ளவும். கனமான ஒரு பாத்திரத்தில் அரை கப் தண்ணீர் விட்டு சீனியைப் போடவும். நன்கு கொதித்ததும் சிறிது பாலை விட்டு கொதிக்க விடுங்கள். கம்பிப்பதம் வந்ததும் பொடி செய்த பாதாம், முந்திரி போட்டு, பால்கோவாவையும் சேர்த்து நன்கு கிளறி கட்டி வராமல் பார்த்துக்கொள்ளவும். கெட்டிப் பதம் வந்தவுடன் சிறிது சிறிதாக நெய்யை விட்டுவிட்டு கிளறிக்கொண்டே இருக்கவும். ஓரம் ஒட்டாமல் நுரைத்துக்கொண்டு வரும். அது இறக்கும் பதம் வந்தவுடன் ஒருதட்டில் நெய் தடவி வைத்து அதில் கொட்டி, ஆறியவுடன் சதுரம் அல்லது டைமண்ட் வடிவில் வெட்டி எடுக்கவும். பிறகென்ன? பாதாம் கேக் ரெடி.

இவ்வார பொன்மொழி

எந்த நேரத்தில் எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்வதற்கு நாம் தயங்கக் கூடாது.

உதட்டில் உங்கள் குணம்!



அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். ஆனால், அந்த அகத்தின் அழகை உதட்டின் மூலமும் அறியலாம் என்று கூறினால் அதில் கூடத் தப்பில்லை தான் போலிருக்கிறது. எனவே, இன்று உதட்டின் அமைப்பையும், அந்த அமைப்பினால் உருவாகும் பலாபலன்களையும் இப்போது நாம் பார்ப்போமா?

மெல்லிய உதடுகள் அமையப் பெற்றவர்கள் பிறருடன் எளிதில் நெருங்கிப் பழக மாட்டார்கள். தனிமை விரும்பிகளான இவர்கள் அமைதியான குணம் கொண்டவர்களாகவும் இருப்பர்.

உதடுகள் சீராக அமையாமல், மேல் உதடு பெரியதாகவும், கீழ் உதடு அதைவிட சிறியதாகவும் அமையப் பெற்றவர்கள் அனைவரிடமும் அன்பு கொண்டவர்களாக இருப்பார்கள். இதற்கு நேர்மாறாக கீழ் உதடு பெரியதாகவும், மேல் உதடு சிறியதாகவும் அமையப் பெற்றவர்கள் அடுத்தவர்களிடம் அவ்வளவு எளிதாகப் பழகவே மாட்டார்கள். அப்படிப் பழகிவிட்டால், அவர்களுக்காக உயிரை விடக்கூட விடத் தயங்கமாட்டார்கள்.

உதடுகள் மூடும்போது ஒழுங்காகச் சேராமல் திருகியபடி அமைந்திருந்தால் கொடூரமானவர்களாக இருப்பர். உதடுகள் மூடி இருக்கும்போது ஒழுங்கற்று இருந்தால் எப்போதும் கவலையுடன் காணப்படுவர். வாழ்வில் பல்வேறு துன்பங்களைச் சந்திப்பர். ஆனால், அதைக்கண்டு துவண்டுவிடாமல் தொடர்ந்து போராடி வாழ்வில் வெற்றி பெறுவர்.

உதடுகள் அதிகம் பிரிக்காமல் சேர்ந்தே இருப்பது போல் காணப்படுபவர்கள் வாழ்வில் பல்வேறு மகிழ்ச்சிகளைக் காண்பர். இவர்கள் தமது உள்ளத்தில் உள்ளதை அதிகம் வெளிப்படுத்த மாட்டார்கள்.

பவளம் போன்ற நிறத்தில் மிருதுவான உதடுகள் அமையப் பெற்ற பெண்கள் சிறந்த குணம் கொண்டவர்களாக இருப்பர். இவர்களுக்குச் சிறந்த துணை கிடைத்து மகிழ்ச்சியாக வாழ்க்கை நடத்துவர்.

மேல் உதடு உயரமாக அமையப் பெற்ற பெண்கள் முன் கோபம் கொண்டவர்களாக இருப்பர்.

கீழ் உதடு தாமரைப் பூவின் நிறத்திலிருந்தால் மிகவும் யோகமானவர்களாக இருப்பர். இவர்களின் எண்ணங்கள் யாவும் ஈடேறும். நகைச்சுவை உணர்வு அதிகம் கொண்ட இவர்கள் எப்போதும் மிகிழ்ச்சியாகக் காணப்படுவர்.

கருமை நிறம் கொண்ட உதடுகள் அமையப் பெற்ற பெண்கள் எதிலும் அதிகம் நாட்டமில்லாதவர்களாகக் காணப்படுவர். இவர்கள் எப்போதும் எதையோ பறிகொடுத்தவர் போலவே காணப்படுவர்.

என்ன சகோதரிகளே... உங்கள் உதடுகள் எப்படி என்பதை ஆராய்ந்து விட்டீர்களா? அப்படியெனில் நீங்கள் எப்படிப் பட்டவர்கள் என்பதை இதிலிருந்தும் கொஞ்சம் புரிந்திருப்பீர்கள் அல்லவா?

குழந்தையை பாதிக்கும் நோய்

குழலினிது யாழினிது என்பர் மழலை சொற்கேளாதவர் என்று கூறுவர். ஆனால் அந்த அழகிய மழலைக்கோர் துன்பம் என்றால் அதைக் காணும் தாய் படும் துன்பமோ எண்ணிலடங்காதவை. அவ்வாறான குழந்தைகளைப் பாதிக்கும் நோய்களில் வலிப்பும் ஒன்று.

வலிப்பு ஏன் ஏற்படுகிறது என்பதை இன்னும் சரியாகக் கண்டுபிடிக்கவில்லை. ஆனால், மூளையில் ஏற்படும் பாதிப்பால் நரம்பு மண்டலம் கட்டுப்பாடு இழந்து வலிப்பு ஏற்படுகிறது என்பது மட்டும் உறுதியாகத் தெரிகிறது.

பிள்ளைப் பேற்றின் போது சில குழந்தைகளை ஆயுதம் மூலம் வெளியே எடுக்க வேண்டியிருக்கும். அப்போது தலையில் அடிபட்டால், வலிப்பு வர வாய்ப்பு உண்டு.

சில குழந்தைகள் தொட்டிலில், கட்டிலில் இருந்து விழுந்து விடுவார்கள். அப்போது தலையில் அடிபட்டால், வலிப்பு வரக்கூடும்.

குழந்தைகளின் உடம்பில் சர்க்கரைச் சத்து அல்லது சுண்ணாம்புச் சத்துக் குறைவாக இருந்தாலும் வலிப்பு வரும்.

சில குழந்தைகளுக்கு பரம்பரையாகவும் வலிப்பு வரும் என்று கண்டு பிடித்திருக்கிறார்கள்.

இப்படியான குழந்தைகளை மருத்துவரிடம் அழைத்துச் சென்று காட்டவேண்டும். அவர்கள் தகுந்த மருந்து கொடுப்பார்கள். குழந்தைகள் வளரும்போது வலிப்பு நின்று விடும். சிலகுழந்தைகளுக்குக் கடுமையான காய்ச்சல் வந்து, மூளை பாதித்து வலிப்பு ஏற்படலாம். இது கொஞ்சம் ஆபத்தானது. வளர்ந்த பிறகும் கூட இந்த வலிப்பு வர வாய்ப்பு உண்டு. எனவே வைத்தியரின் பார்வையில் தொடர்ந்து மருந்து எடுக்க வேண்டும்.

வலிப்பு என்பது மரணம் தரும் நோய் அல்ல. ஆனால், கவலை தரக்கூடியது. எனவே, உடனே மருத்துவரைப் பார்ப்பது சிறந்தது.

ஆயுதம் போட்டுக் குழந்தையை வெளியே எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டால், அனுபவமுள்ள, கைதேர்ந்த மருத்துவர்கள் அதைச் செய்ய வேண்டும். குழந்தைகளுக்குக் காயம் ஏற்படக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு– கிழக்கின் பேண்தகு அபிவிருத்திக்கு பொருத்தமான தந்திரோபாயம்!

பகுதி 111

யாழ்ப்பாணம் சமூக விஞ்ஞான படிப்பு வட்டம் மாதம்தோறும் பூரணை விடுமுறை தினத்தில் சமூக விஞ்ஞானத் துறைகள் சார்ந்த கருத்தரங்குத் தொடர்களையும், கலந்துரையாடல்களையும் நடத்தி வருகிறது.

கடந்த 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை யாழ் நகரில் தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் 'வடக்கு – கிழக்கின் பேண் தகு அபிவிருத்திக்கு பொருத்தமான தந்திரோபாயம்' என்னும் விடயத்தின் கீழ் சமூகவிஞ்ஞான படிப்பு வட்டம் கருத்தரங்கை நடத்தியது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறையின் சிரேஷ்ட பேராசிரியர் வி.நித்தியானந்தன் அப்பொழுது ஆற்றிய கருத்துரையின் முதலாம், இரண்டாம் பகுதிகள் கடந்த இரு வாரங்களாக சுடர்ஒளியில் பிரசுரமாகி இருந்தன. இவ்வாரம் இறுதியான மூன்றாவது பகுதி பிரசுரமாகிறது. தொகுத்து வழங்குபவர் யாழ்.ஆத்மா.

பெற்றோலிய எண்ணெய்வளம்நிறைந்த மத்திய கிழக்கைப் பாருங்கள். எண்ணெய் வளம் மட்டுமே அங்கு உள்ளது என்று அநேகர் கூறுவர். ஆனால், டுபாய் போன்ற நாடுகளைப் பார்த்தால், பேரீச்சம்பழங்கள் மாத்திரம் அல்ல, எல்லா வகையான பழங்களையும் அங்கு பயிரிடுகிறார்கள். எவ்வாறு பயிரிடுகிறார்கள்? பயிர்ச்செய்கைக்குரிய வளம் நிறைந்த மண் அங்கு இயற்கையாகவே இல்லைஎன்றாலும், அவர்கள் அந்த மண்ணை உரிய பொருத்தமான நுட்பங்களின் மூலம் வளப்படுத்தியுள்ளார்கள்.

எவ்வாறு வளமாக்குகிறார்கள்? யார் வளமாக்குகிறார்கள்? அரசாங்கத்தின் ஆதரவும், முதலீடும் அங்கு வளமற்ற நிலத்தை வளமாக்குவதற்கு பயன்படுகிறது. மனித வளமும் இணைக்கப்பட்டு, இயற்கை வளம் உருவாக்கப்பட்டு, விவசாய உற்பத்தி அங்கு நடைபெறுகிறது. அந்த வகையான உருமாற்றம் எங்களைப் பொறுத்தவரை இடம் பெறவே இல்லை.

1658 ஆம் ஆண்டு யாழ்ப்பாண இராஜ்ஜியம் வீழ்ந்தது. அன்றிலிருந்து இன்றுவரை எங்களுடைய வளங்களை உரிய முறையில் இணைத்துப் பயன்பெறுவது சாத்தியப்படவில்லை. வடக்கு – கிழக்கின் இயற்கை வளங்கள், பௌதீக வளங்கள் பொருத்தமான திட்டமிடலுடன் மனித வளத்துடன் பிணைக்கப்படவில்லை. அவ்வறான வகையில்எங்களுடையபொருளாதாரமுகாமையோ, திட்டமிடலோ இயங்கியிருக்கவில்லை. அவ்வாறாயின், எவ்வாறு நாங்கள் பேண்தகு அபிவிருத்தியைப் பற்றிப் பேசமுடியும்?

கீழ்க்கட்டுமாண முதலீடு நடந்ததா?

இங்கு வடக்கு – கிழக்கில் ஒவ்வொரு தனிமனிதனும் தன்னால் என செய்ய முடியுமோ – அதைத்தான் செய்தான். தத்தமது இயல்தகைமைக்கு உட்பட்ட முறையில் நாங்கள் எல்லோரும் செயற்பட்டிருக்கிறோம். எங்கள் தகைமைக்கு அப்பாற்பட்ட, எங்களுக்கு இயலாத விடயங்களில் அரசாங்கத்தின் முதலீடும், உதவியும் அவசியமாகிறது. அதைத்தான் நாங்கள் கீழ்க்கட்டுமான முதலீடு என்கிறோம்.

அரசாங்க முதலீடு கீழ்க்கட்டுமான உருவாக்கத்தில் அவசியமானது. வடக்கு – கிழக்கில் அரசாங்கங்கள், எவ்வளவு தூரம் கீழ்க்கட்டுமாண முதலீடுகளை மேற்கொண்டன?

எங்களுடைய வளங்களை எங்களுக்காக மீட்டு எடுத்துத்தரக்கூடிய ஓர் அரசு எங்களிடம் இல்லாமை, அரச பொருளாதாரக் கொள்கை ஒன்று எங்களுக்கு உரிய வகையில் இல்லாமை என்பன வடக்கு – கிழக்குக்குரிய பேண்தகு அபிவிருத்தியை உருவாக்குவதில் பெரும் தடைகளாக உள்ளன.

தேசிய பொருளாதாரம் என்று கூறிக்கொண்டு இலங்கை அரசாங்கங்கள் இன்னும் எதிர்க்கணியமான முறைகளைப் பின்பற்றிக்கொண்டிருக்கின்றபோது, எவ்வாறு நாங்கள் இங்கே பேண்தகு அபிவிருத்தியைக் கட்டியெழுப்ப முடியும்.

அபிவிருத்திக்குப் பாதகமான உள்ளகப் போட்டி

தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவரும் வடக்கு – கிழக்கு வளங்களுடன் தங்களை ஊடுதொடர்புபடுத்தி எங்களுக்குத் தேவையானவற்றைப் பெற்றுக் கொண்டிருக்கின்றபோது, எமக்குள் நாமே அபிவிருத்திக்குப் பாதகமான வகையில் போட்டியிட்டுக் கொள்கிறோம். இது எங்கள் மத்தியிலான தனிப்பட்ட போட்டியாகும்.

பிரித்தானியர் ஆங்கிலத்தை அரசகரும மொழியாக்கினர். அத்துடன் இங்கு கிறிஸ்தவ மிஷன்கள் மனிதவளங்களை கல்வியூட்டல் மூலம் உருவாக்க முயன்றன. ஆங்கில மொழி தெரிந்த கற்ற ஆளணிக்கான கேள்வி அதிகரித்தது. அந்தக் கேள்வி ஒவ்வொரு தனிப்பட்டோருக்கும் ஏனைய வளங்களுக்குமிடையிலான இணைப்பும், அதனூடாக நாங்கள் பெற்றுக்கொண்டுவந்த பலாபலன்களும் ஓர் உச்சமட்டத்தை (Optimum level) அடைந்துவிட்டன. அதன்பிறகு வளங்கள் இல்லாத நிலை ஒரு கட்டத்தில் ஏற்பட்டது.

யாழ்ப்பாணத்தவர்க்கு கிடைத்த கெட்ட பெயர்

அதே நேரத்தில் அதிஷ்டவசமாக பிரித்தானிய அரசாங்கம் மனிதவளத்துக்கு ஒரு கேள்வி மேலும் அதிகரிக்கும் வகையில் சீர்திருத்தங்களை கோல்புரூக் ஆணைக்குழு ஊடாகச் செய்தது. வெளிநோக்கிப் பார்க்கும் தன்மை எம் மத்தியில் ஏற்படுகிறது.

மனித வளம் மூலம் இங்கு இயலுமானதைச்செய்த பின்பு, நாம் அரசாங்கப்பதவிகள் சார்ந்த பணித்துறையை நோக்கிச் செல்லத் தொடங்கினோம். அதற்கும் மேலாக யாழ்ப்பாணத்தவர்கள் தங்களது மனிதவளத்தை மட்டக்களப்பு, வன்னி அகிய இடங்களுக்கு நகர்த்தி அங்குள்ள ஏனைய வளங்களுடன் இணைக்க முற்பட்டனர்.

இதனால், ஒரு கெட்ட பெயரும் யாழ்ப்பாணத்தவர்களுக்கு ஏற்பட்டிருந்தது. இங்குள்ள ஏனைய வளங்களுடன் பொருத்தமாக மனிதவளத்தை இணைக்கும் திட்டமிடல் இல்லாமல், வளங்கள் மேலும் தேவைப்பட்ட சூழ்நிலையில் யாழ்ப்பாணத்து மனித வளம் வெவ்வேறு இடங்களில் இணைக்கப்பட்டபோது, யாழ்ப்பாணத்தவர்கள் வந்து எல்லாவற்றையும் சுரண்டுகின்றனர் என்ற கெட்ட பெயர் உருவானது.

வடக்கு – கிழக்கு முழுமைக்குமான ஒரு பேண்தகு அபிவிருத்திக்கான திட்டமிடலோ, அமுலாக்குகையோ மேற்கொள்ளப்படாத நிலையில் இவ்வாறான சூழ்நிலைகள் எழுகின்றன. யாழ்ப்பாணத்து மனித வளம் வெளிநோக்கி நகர்ந்து பணித்துறைகளில் பெரிதும் தன்னை இணைத்துக் கொண்டுள்ளமை முக்கிய உதாரணமாகும்.

பணித்துறை சாதித்தது என்ன?

ஏற்கனவே பணித்துறை இல்லாமலிருந்து புதிதாக உருவாக்கப்பட்டு அறிமுகமாகும் போது, அது ஒரு பெரிய விடயமாகவே இருக்கும். ஏனென்றால், அது திடீரென திறக்கப்படுவதாகவும் இருக்கும். அதற்குப் பின்னர் அதில் ஏற்படுகின்ற வேலைவாய்ப்புக்கள் பொருளாதார அபிவிருத்தியினுடைய ஒரு செயற்பாடாகவே இருக்கமுடியும்.

பொருளாதார அபிவிருத்தி, வளர்ச்சி ஆகியவற்றைப் பார்க்கின்ற எந்த மாணவனுக்கும் தெரியும் – உற்பத்தியை விட வங்கிச் சேவை, காப்புறுதிச் சேவை, போக்குவரத்துச் சேவை, தொலைத் தொடர்புச் சேவை போன்ற சேவைகளே பிந்திய நிலையில், பிந்திய கட்டங்களில் வளர்ச்சி அடைகின்றன.

சேவைகள் பெருகப் பெருக வேலை வாய்ப்புக்களும் பெருகிச் செல்லும். அதனுடைய ஒரு பகுதிதான் பணித்துறை. ஏற்கனவே கூறியவாறு இலங்கையினுடைய பொருளாதாரம், இந்த எதிர்கணிய அணுகுமுறைகளினால் முடங்கிவிட்ட ஒரு நிலையில் பணித்துறை விரிவாக்கம் பெறமுடியவில்லை.

வடக்கு - கிழக்குக்கு பாதகமான பணித்துறை

பணித்துறை விரிவாக்கம் இல்லாத நிலையில், சிங்கள மேலாதிக்கத்துக்குள் சிங்கள மக்களுக்கான வேலைவாய்ப்புக்களை அதற்குள்ளேயே தேடமுற்பட்டிருந்த சூழ்நிலையில், எவ்வளவுக்கு அந்த பணித்துறை குறுகியதாக வடக்கு – கிழக்கு மக்களுக்கு இருந்திருக்கும் என்பதை நீங்களே கற்பனை செய்து கொள்ளலாம்.

தமிழர்களும், சிங்களவர்களும் பணித்துறையில் வேலைவாய்ப்புக்களுக்காக போட்டியிடுவதும், அது தொடர்பில் சிங்கள மக்களுக்குச் சாதகமான முறையில் அரசாங்கங்களால் [illegible] கள், மாற்றங்கள் என்பனவும் மிகவிரிவாகவும், உன்னிப்பாகவும் கவனிக்கப்பட வேண்டியன.

ஈழத் தமிழர்களும் கல்வியும்

மனிதவளம் ஏன் அபிவிருத்தியாகப் பெயர்க்கப்படவில்லைஎன்பதைப் பார்த்தால், எமது கல்வி, சமூக, பொருளாதார மேம்பாட்டுக்காக ஏற்படுத்தப்பட்ட கல்வியாக இல்லாமையே அதற்குரிய காரணமாகிறது.

கல்வியை வெறும் பொருளாதார அலுவலாகவே மட்டும் நோக்கியிருக்கின்றோம். கல்வியை ஈழத்தமிழர்கள் சமூக – பொருளாதார அபிவிருத்திக்கான கருவியாகப் பயன்படுத்தவில்லை என்பதும், அரசுகளின் பாதகமான பொருளாதரக் கொள்கைகளுடன் எமக்கான பேண்தகு அபிவிருத்திக்குரிய மார்க்கங்களுக்கு தடையாக இருந்து வருகின்றன.

யாழ்ப்பாணத்தின் சமூக உணர்வு என்பது சாதிமுறைமைகள், சமயம் என்பவற்றுக்கு ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளதே தவிர, எமது சமூக, பொருளாதார மேம்பாடு சமுதாயத்தை இறுக்கிப் பிடித்து வைத்திருக்கவில்லை. அங்கு ஒவ்வொரு தனிப்பட்டவருக்கும் இடையில் கடும் போட்டியே நிலவுகிறது. இதுவே எமக்கு ஏற்பட்டுள்ள நஷ்டம் என்று கூறலாம்.

உரையின் முடிவுரை

இந்நிலையில் வடக்கு – கிழக்கின் பேண்தகு அபிவிருத்திக்கான தந்திரோபாயம் எப்படியிருக்கவேண்டும்? இதுவே எனது உரையின் முடிவுரையாகவும் இருக்கும்.

இந்த பிராந்தியத்தின் பேண்தகு அபிவிருத்திக்கான முதனிலைப்படிவம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையிட்டு, நான் கூறியவற்றிலிருந்து நீங்களே ஓரளவுக்கு அனுமானிக்கமுடியும். உண்மையில் எங்களுக்கு என்ன தேவை? என்ன எங்களுக்கு குறையாக இருக்கிறது? அதிகாரம் எங்களிடம் இல்லை. அரச இறைமை எங்களிடம் இல்லை. அரச இறைமை எங்களிடம் இல்லாமல் போனதால் வளங்களை ஒருங்கிணைக்கவும், ஒன்று சேர்க்கவும் கூடிய திட்டங்களை முன்னெடுப்பதற்கான சந்தர்ப்பம் எம்மிடம் இல்லாமற் போய்விட்டது. எங்களுக்குப் பொருத்தமான பொருளாதார தந்திரோபாயத்தை வகுத்து, எமது பொருளாதாரத்தை நர்மே முகாமை செய்ய முடியவில்லை.

இடைக்காலத் தன்னாட்சி

ஈழவிடுதலைப் போராட்டத்தின் சமூக பொருளாதாரப் பரிமாணத்தில் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான வரைவை எடுத்துப்பார்த்தால், உண்மையில் தற்காலிகமாகவாவது வடக்கு – கிழக்கு அபிவிருத்திக்கான ஒரு முதனிலைப்படிவம் என்ற வகையில், அதற்கான அடிப்படை அமைப்பை நடப்பு நிலையில் உள்ளடக்கியிருக்கின்ற யோசனைகளாகவே அதைப் பார்க்கலாம். இது தவிர்க்க முடியாதது.

அந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை வரைபின் பதினோராவது பகுதியிலிருந்து இருபத்தியோராவது பகுதிவரை உள்ள வாசகங்கள், வடக்கு – கிழக்கு அபிவிருத்தியுடன் தொடர்புபடும் பொருளாதார அம்சங்கள் பற்றியே எடுத்துக்கூறுகின்றன. ஆனாலும், அது பேண்தகு அபிவிருத்திக்கான தந்திரோபாயத்தின் ஒரு கட்டம் மாத்திரமே.

குறுகிய காலமும் நீண்ட காலமும்

எல்லாமே சிதைக்கப்பட்ட ஒரு வெறுமை நிலையில் பேண்தகு அபிவிருத்தியை உரிய முறையில் கட்டிஎழுப்புவதற்கு – வளர்ச்சியையும், அபிவிருத்தியையும் உரிய முறையில் இணைப்பதற்கு தகுந்த சந்தர்ப்பம் எங்களுக்கு உள்ளது.

அதை நாங்கள் நன்கு பயன்படுத்த வேண்டுமானால் போரின், சின்னாபின்னங்களின் மத்தியில் ஒரு வரையறையை நாங்கள் இந்த முதனிலைப் படிவத்தில் ஏற்படுத்த வேண்டியிருக்கிறது. அதில்தான் குறுகியகாலம், நீண்டகாலம் என நாங்கள் பிரிக்க வேண்டும். பொருளியலில் குறுகிய கால, நீண்டகால நோக்குகள் என்பன அவசியமாகின்றன.

இந்தக் குறுகியகாலம் என்பதற்குரியதன் ஒரு வரைபைத் தான் விடுதலைப்புலிகள், அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்கான யோசனைகள் தருகின்றன.

வடக்கு– கிழக்கு அபிவிருத்திக்கான நேர்க்கணிய அணுகுமுறை அரசாங்கத்திடம் இல்லாமையால் தான் இன்னமும் அதையிட்டு, பேசுவது கூட நடைபெறாமல் இழுபட்டுக்கொண்டே போகிறது.

சிதைந்துபோன மனித வளம்

இந்தக் குறுகிய காலத்துள் என்ன செய்ய முடியும்? மனித வளத்தை ஏனைய வளங்களான பௌதீக வளங்கள், இயற்கை வளங்கள், தொழில்நுட்பம் ஆகியவற்றுடன் பொருத்தமாக இணைத்து உற்பத்தியை மேற்கொள்ள வேண்டும். சேவைத்துறைகளை வளர்க்க வேண்டும். ஆனால், போர்க்காலச்சிதைப்பு வடக்கு– கிழக்கின் மனித வளத்தையே மிக மோசமாகப் பாதித்துள்ள நிலைமை காணப்படுகிறது. போரினால் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்ட நிலையிலேயே ஒவ்வொரு தனி நபரும் இருக்கின்றோம். மூன்று சந்ததிகளாக இழப்புகளை – மனித உயிர்களை இழந்த ஏராளமான குடும்பங்கள் வடக்கு – கிழக்கில் உள்ளன.

மனிதவளம் போரினால் மிகவும் சிதைவடைந்த நிலைமையை வடக்கு – கிழக்கின் பெரும்பாலான குடும்பங்களில் நாங்கள் காண்கிறோம். இவ்விடயத்திலிருந்து வடக்கு – கிழக்கின் ஏனைய வளங்களின் பாதுகாப்பு பற்றியும் இடைக்கால வரவு கவனமெடுக்க வேண்டியதாகவிருக்கிறது.

பொருளியல் ரீதியாக மனித வளத்தை ஏனைய வளங்களுடன் இணைக்க வேண்டும் என்று கூறினாலும், ஒரு குறுகிய காலத்துக்குத்தானும் மனித வளத்தை முதனிலைப்படுத்த வேண்டிய அவசியம் போர் விளைவித்த சிதைப்பினால் ஏற்பட்டுள்ளது. அதைத்தான் இந்த வரைபு முன்னெடுத்துச் செல்கிறது. முதலில் எமது சமூகத்தின் மனித வளத்தைப் பேண வேண்டும். பேண்தகு அபிவிருத்தியில் மனித வளத்துக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள சமூகச் சிதையை புறந்தள்ளிவிட முடியாது.

பேண்தகுஅபிவிருத்திஎன்பது இன்றைய நிலையில் மூன்று அம்சங்களை உள்ளடக்கியது.

1) சமூக அரசியல் ரீதியானது– சமூக அரசியல் எமது வளங்களை கட்டுப்பாடுகளிலிருந்து விடுவிக்க வேண்டும். உயர் பாதுகாப்பு வலயம் போன்றவையும், நாங்களாகவே பாவிக்காமல் தரிசு நிலங்களை வைத்திருத்தல் போன்றவையும், சிங்களக் குடியேற்றங்கள் மூலம் நிலங்கள் பறிக்கப்படல் போன்றவையும் கவனிக்கப் படல்வேண்டும். தமிழர்கள் போகாத, வாழாத பிரதேசங்களில் தான் சிங்களவர்கள் குடியேறுகிறார்கள் என்று சிலர் கூறுவார்கள். தமிழர்கள் சும்மா போகாமல் விடவும் இல்லை. அவர்கள் (சிங்களவர்கள்) சும்மா வந்து இருக்கவும் இல்லை. மீண்டும் அதே பிரச்சினை தான்.

அரச கொள்கை வரையறைக்குள் நாங்கள் வராத காரணத்தால் அந்த நிலங்களில் அமைத்துக் கொடுக்க வேண்டிய கீழ்க்கட்டுமான வசதிகள் சிங்கள மக்களுக்கு அமைத்துக் கொடுக்கப்பட்டன. ஆனால், தமிழ் மக்களுக்கு அமைத்துக்கொடுக்கப்படவில்லை. நில வளத்தில் மட்டுமல்ல, நீர் வளத்தில் கூட அத்துமீறிய வளச் சூறையாடல் நிகழ்கிறது. சமூக அரசியல் ரீதியில் நில வளம், நீர் வளம் என்பன வடக்கு– கிழக்கு தமிழ் மக்களின் பயன்பாட்டுக்கு இடமளிக்கக் கூடியதான அரசியல் அதிகாரம் பெறப்பட்டு, அவை மீட்கப்பட வேண்டும்.

2) சமூகபொருளாதார ரீதியானது– நிலம், வீடுவாசல் என்பன போன்ற வளங்களையும், சொத்துக்களையும், தத்தமக்குரிய சுயநலன்களுக்காக பரம்பரை பரம்பரையாகக் கட்டிப் பிடித்துக்கொண்டு இருக்கும் குடும்பரீதியான போக்கையே வடக்கில் நாங்கள் காண்கிறோம். செழிப்பான நிலங்கள் பேண்தகு அபிவிருத்தித் திட்டமிடலில் உள்ளடக்கப் படாமல் போவதற்கும், உரிய பயன்பாட்டுக்கு உட்படாமல் போவதற்கும் இது வழி வகுக்கிறது.

சமூக பொருளாதார அபிவிருத்தி விடயங்களுக்கு, தமது வளங்களை பொது நோக்குக் கருதி விட்டுக்கொடுக்க வேண்டும். அக நிலைநோக்குடைய வகையில் சமூகத்தின் தனி நபர்கள் செயற்படுதல் வெறும் சுயநலப் பாங்கையே வளர்த்து பேண் தகு அபிவிருத்திக்கான தந்திரோபாயத்தை பாதிக்கும். எமது சமூக பொருளாதார விழுமியங்கள், இறுக்கங்களில் மாறுதல்களை ஏற்படுத்தல் அபிவிருத்திக்கு அவசியம்.

3) சமூக பண்பாட்டு ரீதியானது –

சமூகப் பண்பாட்டை இறுக்கமாக வைத்துக்கொண்டு பேண்தகு அபிவிருத்தியை உருவாக்க முடியாது. சாதிப்பாகுபாட்டு முறைமை, உள் நிலையில் தனிப்பட்ட சுயநல நோக்கு கொண்ட, சமயப்பற்றுக் கொண்ட சமூக முறைமை, பால் நிலைச் சமத்துவமற்ற முறைமை போன்ற பிற்போக்கான அம்சங்கள் வடக்கு– கிழக்கு தமிழ்ச் சமூகத்தில் நிலைகொண்டிருகின்றமை பேண்தகு அபிவிருத்திக்குரிய தந்திரோபாயத்தை வகுப்பதில் சவால்களை உருவாக்கும் அம்சங்களாகவுள்ளன. சமூகப் பண்பாட்டு ரீதியாக, சமூக விடுவிப்புகளைச் செய்ய வேண்டிய தேவையும் உள்ளது.

மேலும், உலக மயமாதலின் சாதகமான அம்சங்களை மட்டும் பொருத்தமான வகையில் பயன்படுத்தலும், வடக்கு – கிழக்குக்கான பேண் தகு அபிவிருத்திக்கான தந்திரோபாயத்தை வகுப்பதில் உதவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலையில்... சுடர் ஒளி உதயன் விளம்பர பணிமனை

எமது பத்திரிகைகளில் உங்களது விளம்பரங்களை பிரசுரிக்க விரும்பினால் அவற்றினை திருகோணமலை 39, அருணகிரி வீதியில் அமைந்திருக்கும் எமது விளம்பர பணிமனையில் கையளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு:-

விளம்பர முகாமையாளர்
'உதயன்' 'சுடர் ஒளி' விளம்பரப்பிரிவு
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை, கொழும்பு - 14.
011 4734401 - 3 011 2399666 - 70

திருகோணமலையில் தொடர்புகளுக்கான
தொலைபேசி இலக்கம் 026 2220783, 026 2221670

லண்டன் அரண் மனைத் தியேட்டரில் 'தி உமன் இன்வொயிட்' என்ற இசை நிகழ்வு செப்டெம்பர் 14 ஆம் திகதி இடம் பெற்றது. அக் கலை நிகழ்வுக்கு பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸும் அவரின் காதலி காமிலா பார்க்கரும் வருகை தந்த காட்சியையே படத்தில் காண் கிறீர்கள்.

இயற்கையின் மென்மையை கொண்ட உயர் ரகமான...

உங்கள் தேர்வு இயற்கை ரம்மியத்தின் விருப்பமெனின்...
தேர்ந்தெடுங்கள் புதிய பைக்கற்றில்

மூண் பீம் கொண்டம்

மென்மை – வலிமை – இயற்கையானது.
எயிட்ஸ் இல் இருந்து உங்களை பாதுகாக்கும்.

இலங்கை குடும்ப கட்டுப்பாட்டு சங்கம்.

110 வகைகள்
விஷேட
விலையில்

110th
Bata
ANNIVERSARY

Bata காட்சியறைகளில் மட்டும்

வீட்டு யுத்தம் தீர்ந்தது!

வளரும் சிறுபிள்ளைகளின் பசியைத் தூண்டும் சுவைமிக்க விட்டமின் பானம்

Hungry Plus

வளரும் பருவத்திலுள்ள சிறுபிள்ளைகளுக்கு உணவு ஊட்டப்போனால் வீடே யுத்த களமாகும். அதட்டியும் மிரட்டியும் அடித்தும் அவர்களுக்கு உணவு ஊட்டுவதற்குள் தாய்மாருக்கு உயிரே போய்விடும்...ஆனால், இப்போது இப் பிரச்சினைக்குச் சிறந்த பரிகாரம் கிடைத்துள்ளது. அதுதான், ஹங்ரி பிளஸ் விட்டமின் பானம்!

சிறுவர்களின் பசியுணர்வை இயற்கையாகத் தூண்டும் லைசின் மற்றும் விட்டமின்கள் அடங்கிய சுவைமிக்க ஹங்ரி பிளஸ் பானம், பிள்ளைகளின் நலமான வாழ்வுக்கும் உற்ற துணையாகும்.

ஹங்ரி பிளஸ்
பசியைத் தூண்டும்...

இப்போது, முன்னணி மருந்தகங்களிலும் சுப்பர் மார்க்கட்டுகளிலும் வாங்கலாம்.

Marketed by: ARKEM PHARMACEUTICALS Tel: 011- 2470290

EXPOAIR எக்ஸ்போ எயார்
your friend in the skies... வானில் உங்கள் நண்பன்...

யாழ் பயணத்தின் போது
ரோல்ஸ் ரெய்ஸ் இயந்திரத்தின் சொகுசுப் பயணத்தினை
அனுபவியுங்கள்!

யாழ்ப்பாணம்: 021 2223891, 021 2226297, 077 2349999
கொழும்பு: 0112372952/3 Fax: 011 2372954
வெள்ளவத்தை: 011 2360290, 2360291
e-mail: jaffna@expoavi.com, reservations@expoavi.com

இலங்கையின் நம்பத்தகுந்ததும் முன்னணியுமான யாழ் – கொழும்பு விமான சேவை

வெதுப்பகத் துறையில் புதிய புரட்சியை ஏற்படுத்திய ஷெரி இடமிருந்து புதிய உபகரணங்கள் இப்போது மலிவு விலைகளில்...

* பல வடிவங்களிலும், பல அளவுகளிலும்கிடைக்கும்.
* ஒரு வருட நிலையான உத்தரவாதம்.
* போக்குவரத்து இலவசம்.
* பேக்கரி தொழிலுக்குத் தேவையான வேறுபல உபகரணங்களான தட்டு, ட்ரொலி, வெள்ளியிலான மேசை, ஸ்பஞ்ச் தட்டுகள் போன்றவையும் உண்டு.

இறக்குமதி செய்து விநியோகிப்போர்

ஷெரி பேக்கரி இக்யூப்மன்ட் சப்லயர்ஸ் (பிரைவட்) லிமிடட்

SHERRY

பிரதான காரியாலயம்:
இல. 735/ஆ, கொழும்பு வீதி,
தலங்கம வடக்கு, மாலபே.
தொ.பே.: 011 5516886 7
0112789933, 0112789782
பெக்ஸ்: 0114407443
ஈமெயில்: sherry@wow.lk

கிளை காட்சியறை:
இல. 93, கொழும்பு வீதி,
பொத்துஹேரா,
குருநாகல்.
தொ.பே.: 037 2237755.
பெக்ஸ்: 037 2237744.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு – 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2004 செப். 19 ஆம் திகதி வெளியிடப்பட்டது.